வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
தெளிவான வானிலை

# உதயன்

சுடர் 30 கதிர் 251 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 19, செவ்வாய்க்கிழமை 04.08.2015




## கௌரவமாக விலக விடுமாறு கோரவில்லை மஹிந்த

கொழும்பு, ஓக. 4
அரசியலில் இருந்து கௌரவமான முறையில் விலக இடமளிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுக்கவில்லை என்று அவரது பேச்சாளர் ரொஹான் வெலிவிட்ட தெரிவித்துள்ளார்.
மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்கவுள்ள மக்களை நம்பிக்கையிழக்கச் செய்வதற்கான பொய்யான பரப்புரை என்று அவர் தெரிவித்துள்ளார்.
மஹிந்த நிச்சயம் வெற்றி பெற்றுப் பிரதமராக வருவார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றால், பிரதமராக மஹிந்த ராஜபக்ஷவை நியமித்து அவரைக் கௌரவமாக அரசியலில் இருந்து வெளியேற அனுமதிக்குமாறு ராஜபக்ஷ

பக்கம் 24

## வாழ்த்துகின்றோம்

ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு உதயனின் நல்வாழ்த்துக்கள்.

# வடக்கு - கிழக்கை இழக்கப் போகிறோம்

## பதறுகின்றார் மஹிந்த

கொழும்பு, ஓகஸ்ட் 4
வடக்கு, கிழக்கு இல்லாத புதிய வரைபடம் உருவாக்கப்பட்டு நாடு பறிபோகப் போகின்றது. வடக்கு, கிழக்கு இல்லாத இலங்கையைத் தான் ரணில் விக்கிரமசிங்க உருவாக்கப் போகின்றார். இதுதான் அவரின் புதிய நாடு என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல்



மாவட்ட வேட்பாளரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.
இதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ரணில் என்ன ஒப்பந்தம் செய்துள்ளார் என்பது தெரியவில்லை என்றும் அவர் சந்தேகம் வெளியிட்டார்.
மீட்கப்பட்ட நாட்

பக்கம் 24

## கல்வி வலயத்தின் அருகே சுவரொட்டி

### பொலிஸார் அகற்றவில்லை

யாழ்ப்பாணம், ஓக. 4
தபால்மூல வாக்களிப்பு இடம்பெறும் இடங்களுக்கு அண்மையாகவுள்ள பிரதேசங்களில், தேர்தல் பரப்புரைச் சுவரொட்டிகள், கட்டவுட்டுகள் எவையும் காட்சிப்படுத் தக்கூடாது என்றபோதும் வடமராட்சிக் கல்வி வலயத் துக்கு அண்மையாக நேற்றைய தினம், ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளைப் பொலிஸார் அகற்றவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.
நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு நேற்றைய

பக்கம் 24

## அரசியல் புலிகளை அழிக்காதது தவறு

### கவலைப்படுகிறார் கோத்தபாய

கொழும்பு, ஓக.4
அரசியல் புலிகளை அழிக்காமல் விட்டுவிட்டதாகவும், வடக்கை மீண்டும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து புலிகளின் தலையீட்டை முழுமையாக அழிக்க வேண்டும் என்றும் சூளுரைத்திருக்கிறார் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ.
கொழும்பு விகாரமகாதேவி உள்ளக அரங்கில் நேற்றுமுன்தினம்



பக்கம் 24

## ஐ.தே.க ஆதரவாளர்களின் வாகனம் மீது சூடு

கொழும்பு, ஓக. 4
ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட வேட்பாளரின் தேர்தல் சுவரொட்டிகளைக் கொண்டுசென்ற வாகனத்தின் மீது பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.
நேற்றுமுன்தினம் இரவு இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்

பக்கம் 24

## தமிழ்க் கூட்டமைப்பை உடைக்க மஹிந்த திட்டம்

### ஐ.தே.க குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 4
கடந்த காலங்களில் கட்சிகளைப் பிளவுபடுத்தும் கைங்கரியத்தில் ஈடுபட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிளவு படுத்த முயற்சிக்கின்றார்" - என்று ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக குற்றஞ்சாட்டினார்.
கட்சித் தலைமையகமான சிறி கொத்தவில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.
இதன்போது மேலும் தெரிவித்த அவர்,
அரசியல் கட்சிகளிடையே பிளவை ஏற்படுத்துவ

பக்கம் 24

## கொழும்பில் கூரிய ஆயுதங்களுடன் 6 பேர் கைது

கொழும்பு, ஓக. 4
கொழும்பில் டிபென்டர் ரக வாகனத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய 6 பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பக்கம் 24

## பொங்கு தமிழ் போன்றது கூட்டமைப்பின் பிரசாரம்

### சொல்கிறார் தயான் ஜயதிலக்க

கொழும்பு, ஓக. 4
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை வெளியிடும் நிகழ்வில் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்ற நிலைப்பாட்டிலிருக்கும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மேடையில்



பக்கம் 24

## படை அதிகாரிகளின் வாகன பாவனைக்குக் கட்டுப்பாடு

கொழும்பு, ஓக. 4
வெள்ளைவான் விவகாரத்தைத் தொடர்ந்து, இராணுவ உயர் அதிகாரிகள் வாகனங்களைப் பயன்படுத்துவது தொடர்பில் இறுக்கமான கட்டுப்பாடுகள் இராணுவத் தளபதியினால் விதிக்கப்பட்டுள்ளது.
மீரிஹானவில் இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்த வெள்ளை வான் ஒன்று பொலிஸாரிடம் அகப்பட்டதை அடுத்து, பிரிகேடியர் மற்றும் அதற்கு மேற்பட்ட பதவிகளில் உள்ள இராணுவ அதிகாரிகளுக்கே, வாகனப் பாவனை தொடர்பில் புதிய நடைமுறைகளைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தல்

பக்கம் 24

## சிறுமியை வன்புணர்ந்தவருக்கு ஐந்து வருடங்கள் கடூழியச் சிறை

### யாழ்.மேல்நீதிமன்று நேற்றுத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஓக. 4
8 வருடங்களுக்கு முன்னர், 12 வயதுச் சிறுமியை வன்புணர்ந்த 16 வயதுடைய சிறுவனுக்கு யாழ்.மேல் நீதிமன்று 5 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது நேற்று. காட்டுமிராண்டித் தனமான இந்தச் செயற்பாட்டுக்குத் தண்டனை வழங்க வேண்டியது காலத்தின் கட்டாயம் என்றும் நீதிபதி தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.
இந்த வழக்கு யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று திங்கட்கிழமை தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போதே குறித்த இளைஞனுக்கு இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.
யாழ்.பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 2007 ஆம் ஆண்டு இந்தச் சம்பவம் இடம்

பக்கம் 24

நம்பிக்கை இழக்காதீர்கள் அக்கறை காட்ட நாங்கள் இருக்கின்றோம்...
ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு
ஜனாதிபதி மைத்திரியின் வெற்றிலைச்சின்னம்
X 1
அங்கஜன் இராமநாதன்



# சிறீதரனுக்கு அடிக்கவே இல்லை

## கூறுகிறது ஈ.பி.ஆர்.எல்.எவ்

28 வருடங்களுக்கு முன்பு அதாவது 1987 ஆம் ஆண்டு எங்கே, எப்பொழுது, யார், ஏன் சிறீதரனுக்கு அடித்தார்கள் என்பதை அவரால் நிரூபிக்க முடியுமா? அல்லது இவ்வாறு ஓர் புனை கதையை கூறினால் மக்கள் நம்பிவிடுவார்கள் அதன் மூலம் தனது தவறுகளை மறைத்து அனுதாப வாக்குகளைப் பெறலாம் என்ற நரித்தனமா? தேர்தலில் வாக்குச் சேகரிக்க இத்தகைய கீழ்த்தரமான வேலைகளில்கூட சிறீதரன் ஈடுபடுவார் என்பதை நினைக்கும்போது அவரது நேர்மையின் மீது சந்தேகம் வருகிறது.

இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் பொதுச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தற்போதைய வன்னி மாவட்ட வேட்பாளருமான ந.சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் செட்டித்தெருவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தமிழ் அரசுக் கட்சியின் பரப்புரைக் கூட்டத்தில் பேசிய, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், 1987 ஆம் ஆண்டு என்னை இந்திய இராணுவத்தினர் கைது செய்து தாக்கியதை விட அப்போது ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பினர் அடித்ததுதான் இன்றும் எனக்கு வலித்துக் கொண்டிருக்கின்றது என்று குறிப்பிட்டார்.

இந்த நிலையில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனது உரைக்கு மறுப்புத் தெரிவித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே, ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் பொதுச் செயலர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழரசுக் கட்சியின் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் பேசிய வேட்பாளர் சிறீதரன் 1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினர் தன்னைக் கைது செய்து தாக்கியதை விட அப்போதிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் வினர் தன்னைத் தாக்கியது தனக்கு இன்னும் வலித்துக் கொண்டிருப்பதாக ஓரு புதிய கதையை அவிழ்த்துவிட்டு அனுதாபம் தேட முற்பட்டுள்ளார்.

2010 ஆம் ஆண்டுத் தேர்தலின் போது இந்த வலியைப் பற்றிப் பொது மக்களுக்குச் சொல்லவேண்டிய அவசியம் ஏன் அவருக்கு ஏற்படவில்லை? அந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்பாக சுரேஷ் பிரேமச்சந்திரனின் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்) நாடாளுமன்ற இல்லத்துக்குச் சென்று தேர்தலில் போட்டியிடத் தனக்கு ஓர் ஆசனம் வேண்டுமென்று கேட்டபோதும் ஏன் வலிக்கவில்லை ?

தான் செய்தவற்றையும் செய்ய இருப்பதைப் பற்றியும் தனது கொள்கையையும் விபரித்து வாக்கு கேட்க முடியாமல், விருப்பு வாக்கில் பின்தள்ளப்பட்டு விடுவோமோ என்ற அச்சத்தில் கூட்டமைப்புக்குள்ளேயே சேறடிக்கும் முயற்சியை ஆரம்பித்துள்ளார். வட்டக்கச்சியில் துண்டுப் பிரசுரம் விநியோகிக்க முற்பட்ட சுரேஷ்பிரேமச்சந்திரனின் ஆதரவாளர்கள் சிறீதரனின் ஆள்களினால் அச்சுறுத்தப்பட்டுத் தாக்க முனைந்தபோது பொலிஸார் தலையிட்டுத் தடுத்து நிறுத்தினர். கூட்டமைப்பின் வேட்பாளர் சரவணபவனின் ஆதரவாளர்களுக்கும் இதே நிலை ஏற்பட்டிருந்தது. இவ்வாறான நடவடிக்கைகள் கூட்டமைப்பைச் சீர்குலைப்பதை நோக்கமாக கொண்டதா? என்ற கேள்வியும் எழுகின்றது.

குப்பி கடிக்காதவர்கள் போராளிகள் அல்ல என்று வவுனியாவில் அவர் பேசிய பேச்சொன்றை தான் அவ்வாறு பேசவில்லை, அவ்வாறு பேசி இருந்தால் அதனை நிரூபிக்கும்படியும் சவால் விட்டிருந்தார். ஆனால் அவர் அப்படித்தான் பேசினார். இதனை அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் உடனடியாகவே பத்திரிகைகளுக்கு அறிவித்திருந்தனர்.

இப்பொழுது சிறீதரனிடம் ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகின்றோம். 28 வருடங்களுக்கு முன்பு அதாவது 1987 ஆம் ஆண்டு எங்கே எப்பொழுது யார் ஏன் அவருக்கு அடித்தார்கள் என்பதை அவரால் நிரூபிக்க முடியுமா? அல்லது இவ்வாறு ஓரு புனை கதையைக் கூறினால் மக்கள் நம்பி விடுவார்கள். அதன் மூலம் தனது தவறுகளை மறைத்து அனுதாப வாக்குகளைப் பெறலாம் என்ற நரித்தனமா?

தேர்தலில் வாக்குச் சேகரிக்க இத்தகைய கீழ்த்தரமான வேலைகளில் கூட இவர் ஈடுபடுவார் என்பதை நினைக்கும்போது அவரது நேர்மையின்மீது சந்தேகம் வருகிறது. கூட்டமைப்பின் ஓர் அங்கமான தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் அவதானமாகப் பேசுவது நல்லது என்பதை அந்தக் கட்சியின் தலைவர்கள் புரிந்து கொண்டு வேட்பாளர்களுக்கு தகுந்த ஆலோசனைகளை வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம் – என்று அந்த அறிக்கையில் உள்ளது. (த-5)

# மக்களை உணர்ச்சி வசப்படுத்தித் தேர்தலில் வாக்குக் கொள்ளையடிக்க நாம் வரவில்லை

## ஆறாம் இலக்கத்தில் சுயேச்சைக் குழுவின் கேடயச் சின்னத்தில் போட்டியிடும் கணேஷ்வரன்

தேர்தல் பரப்புரை மேடையில் இது வரையும் நாங்கள் எந்த தமிழ் தலைமைத்துவம் தொடர்பாகவும் தாக்கிப் பேசியோ அல்லது கட்சிகளைப் பற்றி தாக்கிப் பேசியோ வாக்கு வேட்டையாட வரவில்லை. ஆனால் எங்களது சுயேச்சைக் குழுவை மக்கள் ஆதரித்து அணி திரள்வதைக் கண்டு எங்களைப் பற்றி தேர்தல் பரப்புரை மேடைகளில் கடுமையான விமர்சனம் செய்கின்றார்கள். மக்கள் மனதை வென்றுள்ள எங்களுடைய சுயேச்சைக் குழுவின் உறுதி செய்யப்பட்ட வெற்றியை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. நாங்கள் மக்களை உணர்ச்சி வசப்படுத்தி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை மோசமாகச் சித்தரித்து வாக்குகளைக் கொள்ளையடிக்கின்ற மோசமான அரசியல் செயற்பாட்டைச் செய்ய வரவில்லை. மக்களை வாழ வைப்பதற்காகவே வந்துள்ளோம் என்று ஆறாம் இலக்கத்தில் சுயேச்சைக் குழுவின் கேடயச் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் வே.கணேஷ்வரன் தெரிவித்தார்.

ஆறாம் இலக்கத்தில் சுயேச்சைக் குழுவின் கேடயச் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நெல்லியடி ராஜ கிராமத்தில் நடைபெற்றது . அந்த நிகழ்வில் உரையாற்றிய வேட்பாளர் வே. கணேஷ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

காலா காலமாக பெரும்பாலான அரசியல்வாதிகள் மக்கள் மத்தியில் பொய்யான கற்பனைகளை விதைத்து கடுமையாக விமர்சனம் செய்து மக்களை உணர்ச்சி வசப்படுத்தி தேர்தல் வெற்றியை இலக்காகக் கொண்டு வாக்குகளைக் கொள்ளையடிக்கின்ற கைங்கரியத்தை முன்னெடுத்து வருகின்றார்கள். ஆனால் நாங்கள் குடாநாட்டுத் தமிழ் மக்கள் படும் துன்பங்களைக் காரணங்கள் காட்டியே நாங்கள் தேர்தல் மேடைகளில் பரப்புரை செய்து வருகின்றோம். உண்மையிலேயே நாங்கள் குடா நாட்டில் பட்டினியால் வாடும் தமிழ் மக்களின் வயிற்றுப் பசியைப் போக்க வேண்டும் என்ற நோக்கிலேயே செயற்படுகின்றோம். கால காலமாக உணர்ச்சி வசப்படுத்தலைக் குறியாக வைத்துக் கொண்டு அரசியல் வியாபாரம் செய்ய வரவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த இனவாதத்தை கருப்பொருளாகக் கொண்டு வழக்கம் போல தேர்தல் மேடைகளில் பரப்புரை செய்து வருகின்றார். அவர் செய்யும் மோசமான அரசியலை நாமும் செய்யக் கூடாது. இந்த நிலை தொடர்ந்து முன்னெடுக்கப்படுமாயின் இந்த குடா நாட்டு தமிழ் மக்கள் மட்டுமல்ல முழு நாடே நாறிப் போகும். இந்த இனவாத தேர்தல் ஆயுதக் கலாசாரம் இல்லாதொழிக்கப்பட வேண்டும். உண்மையிலேயே எமது தமிழ் மக்களுடைய வளர்ச்சிக்கு உணர்ச்சியூட்டுதல் என்ற மையப்பொருள் எங்களுடைய பிரதேசத்தினுடைய அபிவிருத்திற்கு பெரும் முட்டுக் கட்டையாக இருக்கின்றன. இவற்றைத் துடைத்தெறிவதன் மூலமே எமது தமிழ் பகுதிகளில் சுவிட்சமானதொரு சமூகத்தைக் கட்டி எழுப்ப முடியும். அந்த வகையில் எமது குடா நாட்டு தேர்தல் பரப்புரைகளில் பேசப்படும் பொய்யான கட்டுக்கதைகளையோ உணர்ச்சி வசப்படுத்தலையோ எமது வாக்காளப் பெரு மக்கள் கவனத்தில் கொள்ளக் கூடாது. இவற்றை வைத்து பிழைப்பு நடத்த முனையும் அரசியல்வாதிகளுக்கு தக்க பாடம் புகட்ட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த)

# தாய்க் குலத்தின் கண்ணீரை போக்கவே களமிறங்கினேன்

## கூட்டமைப்பு வேட்பாளர் மதினி நெல்சன்

தாய்க் குலத்தின் கண்ணீரைப் போக்குவதற்காகவே நான் களமிறங்கியுள்ளேன். இந்தத் தேர்தலில் தேர்வு செய்யப்பட்டு, நாடாளுமன்றத்துக்குச் சென்றால், அவர்களின் பிரச்சினைகளை முழுமையாகத் தீர்ப்பதற்கு பாடுபடுவேன் என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்டங்களில் போட்டியிடும் ஒரே ஒரு பெண் வேட்பாளர் மதினி நெல்சன் தெரிவித்தார்.

நல்லூரிலுள்ள விடுதியில் நேற்று மதியம் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பல அழுத்தங்களின் மத்தியில் நான் களமிறங்கியுள்ளேன். எனக்கு மக்களின் ஆதரவு கிடைத்துள்ளது. இன்னமும் அவர்களின் ஆதரவை எதிர்பார்க்கின்றேன். நாடாளுமன்றத்துக்கு பெண் வேட்பாளர் ஒருவர் அனுப்பப்பட வேண்டும். அதற்காகத்தான் கட்சி என்னைக் களமிறக்கியது. என்னை மக்கள் தேர்வு செய்வார்கள்.

கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன், வேட்பாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்டிருந்தால், அவருக்கு முழுமையான ஆதரவு வழங்கி அவரின் வெற்றிக்காக பாடுபட்டிருப்போம். எமது தாய்க் குலம் இன்றும் கண்ணீரோடு இருக்கின்றனர். அவர்களின் கண்ணீர் துடைக்கப்பட வேண்டும்.

முன்னாள் பெண் போராளிகள், பெண் தலைமைத்துவ குடும்பங்கள், விசேட தேவை உடைய பெண்களுக்கு மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்கள் என்னிடம் உள்ளது. வெற்றி பெற்று, அவர்களுக்கு அந்த வேலைத் திட்டங்களின் அடிப்படையில் உதவிகளைச் செய்வேன்.

பெண்கள் அடக்கி ஒடுக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர். அவர்களை அதிலிருந்து மீட்டுக் கொண்டு வருவது எனது கடமைகளில் ஒன்றாக இருக்கும். 'கடந்த காலங்களிலும் இவ்வாறு தெரிவித்துதான் கூட்டமைப்பிலிருந்து பத்மினி சிதம்பரநாதன் உள்ளிட்ட பெண்கள் நாடாளுமன்றம் சென்றார்கள். அவர்கள் எதனையும் செய்யவில்லையே? என்று ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு,

அதைப் பற்றி நான் விமர்சிக்க விரும்பவில்லை. அவர்கள் சென்ற காலம் வேறு. நான் இப்போது நிற்கின்ற காலம் – சூழல் வேறு. தமிழ் மக்கள் நொருக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் நான் போட்டியிடுகின்றேன். இப்போது பெண்களின் நிலைமை வேறாக இருக்கின்றது – என்றார். (த-5)

## ஜனநாயகப் போராளிகள் கட்சி கூட்டத்துக்கு அனுமதி மறுப்பு

ஜனநாயகப் போராளிகள் கட்சி தனது தேர்தல் விஞ்ஞானபத்தை இன்று செவ்வாய்க்கிழமை (ஓகஸ்ட் 4 ஆம் திகதி) மாலை சுதுமலை அம்மன் கோயில் வீதிச் சுற்றாடலில் வைத்து வெளியிடத் தீர்மானித்திருந்த போதிலும், அதற்கான கூட்டத்துக்குரிய அனுமதியை வழங்க மானிப்பாய் பொலிஸார் மறுத்தமையை அடுத்து அந்த நடவடிக்கை தள்ளி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

28 ஆண்டுகளுக்கு முன்னர், 1987 இல் இதே ஓகஸ்ட் 4 ஆம் திகதியன்று இதே சுதுமலை அம்மன் கோயில் சுற்றாடலில் நடைபெற்ற கூட்டத்தில் வைத்துத் தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தமது முக்கிய அரசியல் முஷுகள் அடங்கிய உரையை ஆற்றியிருந்தார்.

அதே இடத்தில், அதே தினத்தில் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுவதற்கு முன்னாள் புலிகள் எடுத்த முயற்சி பொலிஸ் அனுமதி மறுப்புக் காரணமாகக் கைகூடாமல் போயுள்ளது.

தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீட்டு நிகழ்வு இடம்பெறும் புதிய இடம், திகதி குறித்து ஜனநாயகப் போராளிகள் கட்சி விரைவில் அறிவிக்கும் எனக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. ஜனநாயகப் போராளிகள் கட்சி யாழ். மாவட்டத்தில் சிலந்திச் சின்னத்தில் சுயேச்சையாகத் தேர்தலில் களமிறங்கியிருக்கின்றமை தெரிந்ததே. (த)

# ஓர் ஆசனத்தைப் பிடித்தாவது அமைச்சராகி விடலாம் என்று நினைப்போரைத் தமிழ் மக்கள் அடையாளம் கண்டுள்ளனர்

## சொல்கிறார் முன்னாள் எம்.பி சரவணபவன்

ஓர் ஆசனத்தையாவது பிடித்து அமைச்சராகி விடலாம் என்ற பதவிப் போதையில் வாக்கு கேட்பவர்களைத் தமிழ் மக்கள் நன்றாகவே அடையாளம் கண்டு கொண்டனர். இவர்களால் தொடர்ந்தும் மக்களை ஏமாற்ற முடியாது எனத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர் ஈ.சரவணபவன்.

நேற்று நயினாதீவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே இப்படிக் கூறினார். அங்கு அவர் தொடர்ந்து பேசுகை யில் கூறியதாவது,

2010ஆம் ஆண்டில் அடக்குமுறை அதிகாரத்துடன் விலை கொடுத்து வாங்கிய சிறிய அளவான வாக்குகளுடன் மூன்று பேர் நாடாளுமன்றம் சென்றனர். ஆனால் தொடர்ச்சியாக இடம்பெற்ற உள்ளூராட்சிச் சபை மற்றும் மாகாண சபைத் தேர்தலில் இவர்கள் ஆட் டம் கண்டனர். இறுதியாக இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது இந்த அரச அடிவருடிகள் தமிழ் மக்களால் முற்றாகவே ஓரம் கட்டப்பட்டனர்.

இவர்களுடைய நோக்கம் எல்லாம் எப்பாடுபட்டாவது ஓர் இடத்தைப் பிடித்து நாடாளுமன்றம் சென்று யார் காலை, கையைப் பிடித்தாவது அமைச்சராகிவிட வேண்டும் என்பதுதான். இதுதான் இவர்களின் மக்கள் சேவை. இவர்களை மக்கள் அடையாளம் கண்டு கொண்டனர். தொடர்ந்தும் மக்களை ஏமாற்ற முடியாது.

எனவே இந்த எட்டப்பர் கூட்டத்தை முற்றும் முழுதாக நிராகரித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 20 உறுப்பினர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவோம்–என்றார்.(த)

# போராளி அல்லாத ஒருவர் ஜனநாயகப் போராளி என தேர்தலில் போட்டியிட இடம் கேட்பது வேடிக்கை

## விசமத் தனம் என்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

**"பேரம் பேசக்கூடிய வல்லமை யாருக்கு உண்டு. ஐக்கிய தேசியக் கட்சியால் முடியுமா? அல்லது ஐக்கிய மக்கள் கூட்ட மைப்பினால் முடியுமா? இல்லையேல் இவர் களில் யார் வந்தாலும் அமைச்சராக முடியும் எனக் கனவு காணும் ஈ.பி.டி.பி யினரால் தான் முடியுமா? இவர்கள் எவராலுமே முடியாது. மக்களின் ஆணையைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பால் மட்டுமே முடியும்.**

நேர்கண்டவர்:
இரா. புத்திரசிகாமணி



போராளியாகவே இல்லாத ஒருவர் ஜனநாயகப் போராளிகளின் தலைவன் என்று கூறிக்கொண்டு வந்து தமது அமைப்பைச் சேர்ந்தவர்களுள் ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா இரண்டு பேருக்கு போட்டியிட இடம் தரவேண்டும் என்று கேட்பது வேடிக்கையானது மட்டுமல்ல விசமத்தனமானதுமாகும் என சாடுகின்றார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவரும் யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

அவர் உதயனுக்கு வழங்கிய செவ்வியின் போதே இப்படிக் குறிப்பிட்டார்.

சுயேச்சைகளாகவும், உதிரிக்கட்சிகளாகவும் தேர்தல் களத்தில் குதித்துள்ளவர்கள் தொடர்பாக என்ன கூறுகின்றீர்கள் எனக் கேட்ட போது சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் கூறியதாவது:–

சுயேச்சைகளாகக் களம் இறங்கி இருப்பவர்கள் யார்? அவர்களால் ஐந்து சதவீதமான வாக்குகளைக்கூட பெறமுடியாது என்பதை நன்கு அறிந்து கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைக்கும் வாக்குகளை சிதறடிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் வந்திருப்பவர்கள். இவர்களுடைய பசப்பு வார்த்தைகளுக்கும், பகட்டான பேச்சுக்களுக்கும் செவி சாய்த்து இந்த உதிரிகளுக்கு வாக்களிப்பது நமது வாக்குகளை நாமே துஷ்பிரயோகம் செய்வதற்கு சமமானதாகும்.

தமிழ் மண்ணுக்காக, தமிழ் மக்களுக்காக தமது உயிரைப் பணயம் வைத்துப் போராடிய போராளிகள் ஜனநாயக வழியில் நாடாளுமன்றம் வரவேண்டும் என்பதை நான் வரவேற்கின்றேன். ஆனால் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று இரண்டு நாள்களில் கூடி மூன்றாவது நாளில் வந்து மாவட்டங்கள் தோறும் இரண்டு பேருக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என முரண்டு பிடிப்பது சரியான அணுகுமுறையாகாது.

நாட்டுக்காகப் போராடி பல தியாகங்களைச் செய்த பல போராளிக் குழுக்கள் இருக்கின்றன. அவை அனைத்தும் ஒன்று கூடி மனம் விட்டுப் பேசி முடிவுகள் எட்டப்பட வேண்டும். அதன் பின்னரே இறுதியான கோரிக்கைகளை முன்வைக்கலாம்.

ஆனால் மிக மிகச் சொற்பமான சில போராளிகளை மட்டும் இணைத்துக்கொண்டு தனி ஒருவரின் சுயநல நோக்கத்துடன் களம் இறங்கி உள்ளது தமிழ்ப் போராளிகளையே கொச்சைப்படுத்தும் ஒரு செயலாகும். இவர்கள் திடீரென வந்து இரண்டு ஆசனங்கள் கேட்பது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது.

போராளிகள் ஒன்று கூடித் தாம் விரும்பிய எந்த ஒரு அரசியல் கட்சிகளிலும் இணையலாம். அல்லது தமக்காக தனி ஒரு கட்சியையும் உருவாக்கலாம்.

நாம் இன்றும் பல தேர்தல்களை எதிர்நோக்கி உள்ளோம். ஒரு இணக்கப்பாட்டுடன் செயற்பாட்டால் மட்டுமே பயன்கிட்டும். அதைவிட்டு சுயலாபம் கருதி ஒரு சிலரின் தூண்டுதலால் திடீர் குழுக்களாக தனித்து குதித்துள்ளது. எதிரிகளுக்கு வாய்ப்பளிப்பதாகவே அமையும். இந்தச் சுயேச்சைக் குழுக்கள் தொடர்பாக தமிழ் மக்கள் புரிந்து கொள்வார்கள் என நம்புகின்றேன்.

**கேள்வி:** கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களைப் பகிஷ்கரித்தவர்கள் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். இவர்களின் உண்மை நிலை என்ன?

**பதில்:** தன்னம்பிக்கை இன்மை, இயலாமை மக்களின் ஆதரவின்மை, வேட்பாளர்களைக் கண்டுபிடிக்க முடியாமை போன்ற காரணங்களினால் தான் சீ...சீ... இந்தப் பழம் புளிக்கும் என்பது போல் பகிஷ்கரிக்கிறோம் என்று கூறினர். இங்கே ஒன்றைக் கவனிக்க வேண்டும். முன்பு உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் போட்டியிட ஆள்கள் தேவை எனப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தும் எவரும் முன்வரவில்லை. ஆனால் இப்போது பல கோடிகளைச் செலவிட்டாவது ஒரு ஆசனத்தையாவது பிடிக்க வேண்டும் என்ற அசட்டுத் தனத்துடன் களம் இறங்கி உள்ளனர். இதுதான் உண்மை. இவர்கள் தொடர்பாகவும் நம் மக்கள் நன்கு அறிவார்கள் என நம்புகிறேன். வரும் தேர்தல் முடிவுகள் அவர்களை மீளவும் சிந்திக்க வைக்கும். தனித்து நின்று தமிழ் மக்களுக்காக எதையும் செய்துவிட முடியாது.

**கேள்வி:** தமிழ்த் தேசியம் என்று கூறிக் கொண்டும் சிலர் தேர்தலில் போட்டியிடுவதைப் பற்றி என்ன கூறுகின்றீர்கள்?

**பதில்:** இருதேசம் ஒரு நாடு இதுதான் நம் கோட்பாடு என்கின்றனர். இது ஒன்றும் புதியது அல்லவே. இதைத்தானே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆரம்பம் முதல் வடக்கு–கிழக்கு இணைந்த தமிழ் தாயகப் பிரதேசத்தில் தமிழ் மக்களுக்கான இறையாண்மையின் அடிப்படையில் சகல அதிகாரங்களையும் உடைய மாநில சுயாட்சி ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி வருகின்றது.

வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழ் மக்களின் தாயகம் அங்கீகரிக்கப்பட வேண்டும். அதுவே நமது இலட்சியம். இதற்காகவே போராடி வருகின்றோம். வெறும் வாய் வார்த்தைகளினாலும், கோட்பாடுகள் என கூச்சல் இடுவதிலும் எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை.

**கேள்வி:** நடைபெறவுள்ள தேர்தல் தொடர்பாக நம் மக்களுக்கு என்ன கூறுகின்றீர்கள்.

**பதில்:** தமிழர் உரிமைக்காக நீண்டகாலமாக நடத்திய அகிம்சைப் போராட்டம் 30 ஆண்டுகளாக இடம்பெற்ற ஆயுதப் போராட்டம் என்பன வெற்றி தரவில்லை. காட்டிக் கொடுப்பவர்களின் சதியால் மழுங்கடிக்கப்பட்டன. தமக்குள்ள பேரம் பேசும் ஆற்றலையும் பலம் இழக்கச் செய்ய முனைகின்றனர்.

போர் முடிந்து விட்டது. இன்னமும் இனப் பிரச்சினைக்கு தீர்வு கிட்டவில்லை. ஆறாயிரம் ஏக்கர் தமிழர்களின் காணி கபளீகரம் செய்யப்பட்டுள்ளது. ஒன்றரை லட்சம் இராணுவத்தினர் நம் தமிழ் மண்ணையும் மக்களையும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றனர். இடம் பெயர்ந்த மக்களால் மீள்குடியேற முடியவில்லை. காணாமற் போனோர் கண்டுபிடிக்கப்படவில்லை. அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை.

இவை தொடர்பாக பேசக் கூடியவர்கள் யார்? படிப்படியாக பேரம் பேசக்கூடிய வல்லமை யாருக்கு உண்டு. ஐக்கிய தேசியக் கட்சியால் முடியுமா? அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் முடியுமா? இல்லையேல் இவர்களில் யார் வந்தாலும் அமைச்சராக முடியும் எனக் கனவு காணும் ஈ.பி.டி.பியினரால் தான் முடியுமா?

இவர்கள் எவராலுமே முடியாது. மக்களின் ஆணையைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் மட்டுமே முடியும். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பேரம் பேசக்கூடிய சக்தி கூட்டமைப்புக்கு மட்டுமே உண்டு.

தென்னிலங்கையில் மும்முனைப் போட்டி நடைபெறுகின்றது. அங்கு எவராலுமே தனியாக ஆட்சி அமைக்க முடியாது. தமிழ்ப் பிரதிநிதிகளின் தயவும் ஆதரவும் அவசியம்.

எனவே தமிழ் மக்களின் சார்பில் நம் தரப்பிலிருந்து பேரம் பேச வலுவான பிரதிநிதித்துவம் தேவை.

தமிழ் மக்கள் தரப்பில் பலமிக்க ஒரு சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்க நாம் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்துக்கே வாக்களிக்க வேண்டும். இது நமது கட்டாயக் கடப்பாடு.

பகட்டான பரப்புரைகளுக்கு செவி சாய்க்கக் கூடாது. நாம் வந்தால் வீதி அபிவிருத்தி, கிராம அபிவிருத்தி, இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வாய்ப்பு எனப்பல சுலோகங்களுடன் களம் இறங்கியுள்ளனர். இவர்களால் 5 வீத வாக்குகளைக் கூட பெறமுடியாது. இப்படிப் பெறும் வாக்குகளும் செல்லுபடியற்றதாக நிராகரிக்கப்படும். இவர்களால் பேரம் பேச முடியுமா? இந்தச் சூழ்நிலையில் நாமே நமது வாக்குகளை துஷ்பிரயோகம் செய்தவர்களாகி விடக்கூடாது.

**கேள்வி:** உங்களுடைய ஆதரவுடன் தேசிய அரசு ஒன்று அமைக்கப்பட்டால் உங்களுடைய செயற்பாடுகள் எப்படி இருக்கும்?

**பதில்:** எவர் ஆட்சியிமைப்பர் என்பது எமக்கு இன்று கூறமுடியாது. எவர் வந்தாலும் நாம் எமது கொள்கையில் இருந்து விலகப் போவது இல்லை.

வடக்கு–கிழக்கு இணைந்த தமிழ் தாயகம் உருவாக்கப்பட வேண்டும். எமது இறையாண்மை, அடிப்படைச் சுதந்திரம் மற்றும் சுயமாக தீர்மானிக்கும் சுய நிர்ணயம், நீண்டு நிலைத்திருக்கும் கௌரவம், பாதுகாப்பு உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும் என்பதை மூன்றாம் தரப்புக்களின் வலுவான அழுத்தத்துடன் பேரம் பேசி உறுதியான தீர்வு காண்போம்.

இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பங்களிப்பு மிக மிக அவசியம். எனவே பேரம் பேசும் சக்தியை கொடுக்க வேண்டிய தமிழ் மக்களின் கடமை.

வடக்கு–கிழக்கில் சகல அதிகாரங்களும் கொண்ட ஓர் அரசு உருவாக்கப்படும் என்றால், மத்திய அரசுக்கு ஆதரவு அளிப்பது தொடர்பில் பரிசீலனை செய்ய இடமுண்டு.

எனவே, இன்று எமது கையில் இருப்பது வாக்காளர் அட்டை என்ற பெரிய ஆயுதம் மட்டுமே. எனவே சுயேச்சைகளினதும் உதிரிகளினதும் கபட வார்த்தைகளுக்கு செவிமடுக்காமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவளிப்பதே தமது தலையாய கடமை.

[illegible]

# போலி வைத்தியர்கள் வவுனியா மாவட்டத்தில்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

வவுனியா, ஓக.4

வவுனியா மாவட்டத்தில் அண்மைக் காலங்களில் போலி வைத்தியர்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளது. பொது மக்கள் வழங்கிய தகவல்களையடுத்து வவுனியா மாவட்ட அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் போலி வைத்தியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையினை எடுப்பதற்கு தயாராகி வருகின்றது என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வைத்தியர் எம்.எம்.எம். அனஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மைக்காலங்களில் போலி வைத்தியர்களின் செயற்பாடுகள் காரணமாக பொதுமக்கள் சில அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். பொது மக்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் போலி வைத்தியர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் ஆயுள்வேத வைத்தியர்கள் சிலர் நுண்ணுயிர் கொல்லி வில்லைகளை பொது மக்களுக்கு வழங்கியுள்ளனர். இந்தச் செயற்பாடு முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒரு நோயாளிக்கு ஆயுள்வேத வைத்தியர்கள் நுண்ணுயிர் கொல்லி வில்லைகளை வழங்குவதையோ, ஊசி மூலமான மருந்துகளையோ பயன்படுத்த முடியாது. குறைந்த பட்சம் வில்லைகளை நோயாளிக்கு வழங்கும்போது அளவுகள், அதன் தன்மை, செயற்பாடுகள் பற்றி தெரிந்திருக்கவேண்டும்.

இலங்கை மருத்துவச் சபையில் பதிவு செய்யப்படாமல் சிகிச்சையளிப்போர் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு செயற்படுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தயாராகி வருகின்றது. – என்றுள்ளது. (ற)

# சிகிச்சை கழிவகற்றலுக்கு ஆஸ்திரேலியா கடனுதவி

யாழ்ப்பாணம், ஓக.4

நாடு முழுவதுமுள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை நிலைய கழிவகற்றல் முகாமைத்துவ முறைமையைச் சிறந்த முறையில் மாற்றி அமைக்கும் செயற்திட்டத்துக்காக ஆஸ்திரேலியா அரசு கடனுதவி வழங்க முன்வந்துள்ளது.

அமைச்சரவை உப குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை கருத்திற் கொண்டு எடுக்கப்பட்ட இந்தக் கழிவகற்றல் நடவடிக்கையை முன்னெடுக்க ஆஸ்திரேலிய அரசு முன்வந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் வைத்தியசாலை அதிகாரிகள் முகம் கொடுக்கும் மிகவும் பாரதூரமான ஒரு பிரச்சினையாக சிகிச்சை நிலையங்களில் வெளியேற்றப்படும் கழிவுகள் முறையாக முகாமை செய்யப்படாமை காணப்படுகின்றது.

கழிவகற்றல் பிரச்சினைகளால் பல தொற்றுநோய் அபாயங்களும் நிலவிவருகிறது. மருத்துவ கழிவுகள் மிகவும் ஆபத்துக்களை உருவாக்ககூடியவை என்பதால் ஏனைய பொதுக்கழிவுகளை விடவும் சிகிச்சை நிலைய பொதுக்கழிவுகள் குறித்து அதிக அவதானத்துடன் இருக்க வேண்டும்.

அதற்காக சுகாதார மற்றும் மருத்துவ கழிவு முகாமைத்துவம் அந்தந்த வைத்தியசாலைகளின் மாகாண பிரதேச சபைகளுக்குரிய பொறுப்பு. அதனால் அரச வைத்தியசாலைகள் தொடர்பாக ஆஸ்திரேலிய அரசின் கடன் உதவியின் கீழ் முறைமையான சிகிச்சை நிலைய கழிவகற்றல் முகாமைத்துவ முறைடை உருவாக்குவதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை ஏற்கனவே வழங்கியுள்ளதுடன், குறித்த செயற்றிட்டம் தொடர்பாக சுருக்கமான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை ஒன்றை முன்வைப்பதற்கான அதிகாரம் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவுக்கு வழங்கப்பட்டிருந்தது.

குறித்த அமைச்சரவை உப குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு மேற்குறித்த செயற்றிட்டத்தை செயற்படுத்த சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய அமைச்சால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

## யாழில் இரு பொலிஸார் தற்காலிக இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஓக.4

யாழ்.பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ் ஒழுக்க நெறியை மீறினார்கள் என்ற குற்றச்சாட்டில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என தலைமைப் பொலிஸ் பரிசோதகர் யு.வூட்லர் தெரிவித்தார்.

பொலிஸ் கடமை நேரத்தில் பொலிஸ் நிலையத்திலிருந்த புறப்படும்போது பதிவேட்டில் பதிவு செய்த பின்னரே புறப்பட வேண்டும் என்பது வழமையான ஒன்றாக உள்ளபோதும் அதனை குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் செய்யவில்லை என்றும் வூட்லர் தெரிவித்தார்.

சுஜீவன் மற்றும் தென்னக்கோன் ஆகியோரே இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் அந்த இரண்டுபேரும் மணல் கொள்ளையில் ஈடுபடுபவர்களுக்கு உடந்தையாக இருந்தனர் என்றும், அதனால் அது பற்றிய விசாரணைக்காக அவர்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்னும் தகவலும் பொலிஸ் உத்தியோகத்தர்களிடையே வெளியாகியிருந்தது.

எனினும் அதனை மறுத்த தலைமைப் பொலிஸ் பரிசோதகர் வூட்லர் ஒழுக்க நெறியை மீறியதான குற்றச்சாட்டிலேயே அவர்கள் நிறுத்தபட்டுள்ளனர் என்று தெரிவித்தார். (ற-4,101,ரி4)

# தொழிநுட்ப அலுவலர்கள் இன்று கவனவீர்ப்புப் போர்

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 4

வடக்கு உட்பட நாடளாவிய ரீதியில் உள்ள தொழிநுட்ப அலுவலர்கள் தமது ஒன்றியங்கள் மற்றும் சம்மேளனத்துடன் இணைந்து இன்று கவனவீர்ப்புப் போராட்டத்திலும் ஊர்வலத்திலும் ஈடுபடவுள்ளதாக சம்மேளனத்தினர் தெரிவித்துள்ளனர்.

தமது கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தியே கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இன்று முற்பகல் 9 மணிக்கு இந்தப் போராட்டம் ஆரம்பமாகவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

4 நாள்கள் சம்பள அதிகரிப்பு, பதவியுயர்வு, போக்குவரத்துப்படி, தராதரத்தின்படி பதவியுயர் மற்றும் பணி நியமனங்கள், வரிவிலக்கற்ற வாகனம் பெறும் அனுமதி கோரியும் தமது கற்றலின் தரத்தைக் குறைக்க வேண்டாம் என்றும் பிரதேச செயலர்கள் பிரிவில் தமது தரத்தைக் குறைப்பதாக உரிய கற்றல் இல்லாதவர்களுக்கும் தமது தரமுடைய பதவி வழங்கப்பட்டமையை எதிர்ப்பதாகவும் சம்மேளனம் தெரிவித்துள்ளது. இவை உள்ளிட்ட பல கோரிக்கைகளையும் நிறைவேற்றும்படி கோரியே போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

போராட்டம் ஊர்வலமாக பொதுச் சேவைகள் ஆணைக்குழு அலுவலகம் முன்பாக நிறைவடையும் என்றும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கான கடிதங்கள் அங்கு வைத்து வழங்கப்படும் என்றும் சம்மேளனம் தெரிவித்துள்ளது. (ற-4)

# பஸ் குடை சாய்ந்து விபத்து: 35 பேர் வைத்தியசாலையில்

மட்டக்களப்பு, ஓக.4

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புனானை பிரதேசத்தில் பஸ் ஒன்று நேற்று அதிகாலை விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 35 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் காத்தான் குடியிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்டுச் சென்ற தனியார் பஸ்ஸே புனானை பிரதேசத்தில் சென்றுகொண்டிருக்கையில் ஒரு டயர் வெடித்ததில் பஸ் குடைசாய்ந்து இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் பயணம் செய்த 25 பேர் காயமடைந்து பொலனறுவை வைத்தியசாலை மற்றும் வாழைச்சேனை, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். சிகிச்சை பெற்ற சிலர் வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளதாக தெரியவருகின்றது.

இது தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

## ஆசிரியர்களுக்கு முன்சேவை பயிற்சி

வடமாகாணத்தில் தற்போழுது புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கான முன்சேவைப் பயிற்சி எதிர்வரும் 7ஆம் திகதி முதல் 14ஆம் திகதிவரையும், பின்னர் 20ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரையும் யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தற்போழுது புதிதாக நியமனம் பெற்று உரியகாலத்தில் அழைப்புக் கடிதங்கள் கிடைக்காத பட்டதாரி ஆசிரியர்கள் தமது நியமனக் கடிதத்துடன் பயிற்சிக்கு வருகை தருமாறும் மேலதிக விவரங்கள் தேவைப்படின் மாகாணக் கல்வித் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளுமாறும் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ற-422)

# போதைக் குற்றவாளிக்கு பிணை வழங்குவது குற்றம் செய்வதற்கு அனுமதிப்பது போன்றது

## யாழ்.நீதிமன்ற நீதிவான் மா.இளஞ்செழியன் சுட்டிக்காட்டு

கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ளவர்களுக்குப் பிணை வழங்கினால், அது மேலும் பல குற்றங்கள் புரிவதவதற்கு சந்தேக நபர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கியது போன்றதாகிவிடும் என யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தெரிவித்துள்ளார். அத்துடன் குறித்த வழக்குக்குப் பிணை வழங்காது விசாரணையை ஒத்திவைத்தார் நீதிபதி.

கிளிநொச்சியில் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் அங்கவீனர் ஒருவர் போதைப் பொருள் கட்டளைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அவரைப் பிணையில் விடுவிக்கக்கோரி யாழ். மேல் நீதிமன்றத்தில் பிணை மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவைத் தாக்கல் செய்த சட்டத்தரணி தனது விண்ணப்பத்தில்:

போதைப் பொருள் சட்டமானது, விதிவிலக்கான சந்தர்ப்பத்தில் மட்டும், போதைப்பொருள் சம்பந்தப்பட்ட வழக்கொன்றில் மேல் நீதிமன்றம் பிணை வழங்கலாம் என்று பரிந்துரை செய்திருக்கின்றது. அதன்படி இந்தப் பிணை மனு தாக்கல் செய்யப்படுகின்றது. வழக்கில் சம்பந்தப்பட்டவர் வலது குறைந்தவர், இயலாதவராக இருக்கின்றார். அதனால் அனுராதபுரம் சிறைச்சாலையில் அவதிப்படுகிறார். எனவே போதைப் பொருள் சட்டத்தின் 83 ஆம் பிரிவின் கீழ் பரிந்துரைக்கப்பட்டவாறு, வலது குறைந்தவர் என்ற ரீதியில் அவருடைய இயலாமையை விதிவிலக்கான காரணமாகக் கொண்டு அவருக்குப் பிணை வழங்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

நீதிமன்றத்தில் அப்போது முன்னிலையாகியிருந்த அரச சட்டத்தரணி, போதைப் பொருள் குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அந்த நபருக்குப் பிணை வழங்கக் கூடாது என ஆட்சேபனை தெரிவித்தார். அத்துடன், தனது ஆட்சேபனையை எழுத்து வடிவில் ஒரு மனுவாக நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசத்தையும் தவணையையும் கோரினார்.

இதனையடுத்து, நீதிபதி இளஞ்செழியன் பிணை மனு தாக்கல் செய்த சட்டத்தரணியை நோக்கி சில வினாக்களை வினவினார்.

போதைப் பொருள் குற்றம் புரிபவர்களுக்கு அங்கவீனம் என்பது பிணை விடுவதற்கு ஒரு சலுகையா அல்லது தகைமையா? விதிவிலக்கான காரணம் என இதனை ஒரு தகுதியாகக் கொள்ள முடியுமா? அங்கவீனமுடைய ஒருவர் போதைப் பொருள் குற்றம் புரிந்து இன்னுமொரு நபரை அங்க வீனராக ஆக்கலாமா? ஏனென்றால், போதைப் பொருளால் கண்கள் தெரியாமல் போகின்றன. உடற் பாகங்கள் வலுவிழக்கின்றன. மூளை செயலிழக்கின்றது. இறுதியில் சாவு சம்பவிக்கின்றது. எனவே. அங்கவீனர் என்ற காரணத்திற்காக போதைப் பொருள் உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள இந்த நபருக்கு சட்டப்படி பிணை வழங்க முடியுமா? இதைத்தானா விதிவிலக்கான சந்தர்ப்பம் அல்லது விதிவிலக்கான காரணம் என்று சட்டம் பரிந்துரை செய்கின்றது? – என நீதிபதி வினவினார்.

அத்துடன், கிளிநொச்சியில் போதைப் பொருள் மற்றும் கசிப்பு விற்பனை, கசிப்பு உற்பத்தி சமூக விரோதக் குற்றச் செயல்கள் அதிகரித்திருக்கின்றன. அவற்றை அடியோடு ஒழிக்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டிருக்கின்றனர். அதற்காக அத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை அவர்கள் கைது செய்து சட்டரீதியாக நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், மறியலில் உள்ள ஒருவருக்குப் பிணை வழங்குவதற்கு அவருடைய அங்கவீனத்தை ஒரு சலுகையாக அல்லது தகைமையாக எவ்வாறு கொள்ள முடியும்?– எனவும் நீதிபதி இளஞ்செழியன் வினவினார்.

குறித்த மனுத் தொடர்பில் ஆட்சேபனை செய்யவும், மனுத் தாக்கல் செய்யவும், விசாரணைக்காகவும் என அரச சட்டத்தரணி கால அவகாசம் கோரினார். இருதரப்பு விடயங்களையும் பரிசீலித்த நீதிபதி இளஞ்செழியன், பிணை மனு தொடர்பான விசாரணைகள் செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி நடைபெறும் எனக் கூறி வழக்கை ஒத்திவைத்தார். (ற-4)

## ராஜபக்ஷ ஏற்படுத்திய அபிவிருத்தியால் சாதாரண மக்களுக்கு பயனில்லை

கொழும்பு, ஓக.4
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடளாவிய ரீதியில் ஏற்படுத்தியதாகக் கூறப்படும் அபிவிருத்திகள், சாதாரண மக்களைச் சென்றடையவில்லையென பிரதியமைச்சர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள் ளார்.

புளுமெண்டல் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் உயிரிழந்த பெண்ணின் கணவர், பிரதமர் ரணிலை சந்தித்து தெரிவித்த கருத்துக்களின் மூலம் இவை தெளிவாகப் புலப்படுவதாக பிரதியமைச்சர் கூறியுள்ளார்.

அதாவது, குறித்த குடும்பம் எவ்வித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில், வீடின்றி வேறொரு வீட்டிலேயே வாழ்ந்து வந்ததாக அந்த நபர் குறிப்பிட்டிருந்தார்.

கொழும்பை ஆசியாவின் அழகிய நகரமாக்கி, அபிவிருத்தி செய்ததாக மஹிந்தவும், கோத்தாவும் கூறிவந்த நிலையில், இவையனைத்தும் பொய்யான கருத்துக்கள் என அவர் கூறியுள்ளார்.

முன்னாள் ஆட்சியாளர்கள் ஏற்படுத்தியதாகக் கூறப்படும் அபிவிருத்திகள் சாதாரண மக்களுக்கு நன்மை பயக்கவில்லையென குறிப்பிட்ட அவர், சாதாரண மக்களின் வாழ்க்கைத்தரம் அன்று போலவே இன்றும் உள்ளதெனவும் குறிப்பிட்டுள் ளார். (ற)

# மஹிந்தவை மின்சாரக் கதிரைக்கு அனுப்புவதில் கூட்டமைப்பு தீவிரம்

## இப்படிக் கூறுகிறது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

கொழும்பு, ஓக.4
போர்க் குற்றச்சாட்டுகள் மூலம் மஹிந்த ராஜபக்ஷவை மின்சாரக் கதிரைக்கு கொண்டுசெல்லும் முயற்சிகள் பலமடைந்து வருகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், அரசும், சர்வதேச அமைப்புகளும் மஹிந்தவைத் தண்டிக்க முயற்சிக்கின்றன.– இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மஹிந்தவைக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை உள்ளது. ஆனால் ரணில் மீது எமக்குத் துளியளவேனும் நம்பிக்கை இல்லை எனவும் அந்த முன்னணி குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான டிலான் பெரேரா கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:–

போர்க்குற்ற விசாரணைகளின் மூலம் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதும், மின்சாரக் கதிரை கதைகளும் பொய்யான கூற்றுக்கள் என்றே நாம் நினைத்தோம். ஆனால் இப்போதிருக்கும் நிலைமைகளைப் பார்க்கும்போது மின்சாரக் கதிரை கதைகள் பொய்யானவை அல்ல என்று தோன்றுகின்றது. போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றச்சாட்டுகளில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட முக்கிய நபர்களைத் தண்டிக்க வேண்டும் என சர்வதேச புலம்பெயர் அமைப்புகள் மற்றும் இங்குள்ள இனவாத தரப்புக்கள் தெரிவித்து வருகின்றன. அதனை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கையில் இடம்பெறும் அண்மைக் கால செயற்பாடுகள் அமைந்துள்ளன.

குறிப்பாக போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பில் சர்வதேச விசாரணையே அவசியம் என்றும், சர்வதேச விசாரணை அறிக்கையின் மூலம் குற்றங்கள் கண்டறியப்படுதல் அவசியம் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளது. எனினும் சர்வதேச விசாரணைக்கு அனுமதிப்பதில்லை என அரசு குறிப்பிட்டாலும் உள்ளக பொறிமுறைகள் மூலம் போர்க்குற்ற விசாரணைகளை முன்னெடுப்பதாகக் கூறுகின்றது. அதேபோல் உள்ளக விசாரணைப் பொறிமுறையின்போது வட மாகாண சபைக்கு முக்கிய பங்கை வழங்கப் போவதாக தெரிவித்துள்ளனர். இலங்கை மீதான சர்வதேச விசாரணைகள் தொடர்பில் சனல் –4 இன், அறிக்கை கசிந்துள்ளது. இதிலும் போர்க்குற்றவாளிகளை தண்டிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் கூறப்படுகின்றது. மிகவும் முக்கியமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அண்மைக் கால செயற்பாடுகள் மோசமானதாகவே அமைந்துள்ளன. எமது ஆட்சியில் 13ஆம் திருத்தச் சட்டத்தில் அதிகாரங்கள் போதுமென கூறியவர்கள் இப்போது 13க்கு அப்பால் சென்று சுயநிர்ணயக் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். ஆகவே மஹிந்தவை மின்சாரக் கதிரைக்கு கொண்டுசெல்லும் தீவிர முயற்சிகளை இவர்கள் மேற் கொள்கின்றனர். – என்றார்.

மஹிந்தவைத் தண்டிக்க அனுமதிக்க மாட்டோம் என பிரதமர் கூறியுள்ளாரே? என ஊடகவியலாளர்கள் கேட்டபோது–

மஹிந்த ராஜபக்ஷவை மின்சாரக் கதிரைக்குக் கொண்டுசெல்ல ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த பல சந்தர்ப்பங்களில் தெரிவித்துள்ளார். போர்க் காலகட்டத்தில் எம்முடன் இணைந்து வெற்றிக்கு வித்திட்டவர்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பங்கும் உள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் அவர் மஹிந்தவை மின்சாரக்கதிரைக்குக் கொண்டு செல்ல ஒரு போதும் அனுமதிக்க போவதில்லை என்பதைக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நாம் ஒரு போதும் நம்பப் போவதில்லை.

ரணில் விக்கிரமசிங்க அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் சர்வதேச பிரிவினைவாத அமைப்புகளுடனும் புலிகளுடனுமே செயற்பட்டவர். ஆகவே இப்போதும் அவர் சர்வதேச விசுவாசியாகவே செயற்பட்டு வருகின்றார். மஹிந்தவை மின் சாரக் கதிரைக்கு அனுப்ப அவர் நினைத்தாலும் இந்த நாட்டின் சிங்கள மக்கள் ஒருபோதும் அதற்கு அனு மதிக்க மாட்டார்கள். அதைத் தெரிந்து கொண்டே ரணில் இவ்வாறு கூறுகின்றார்.– என்றார். (ற)

# 100 நாள்கள் அரசால் மக்களுக்கு ஏமாற்றமே

## மஹிந்த கூறுகின்றார்

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது மக்கள் ஜனாதிபதியை மாற்றவே வாக்களித்தனர். ஆனால் ஜனாதிபதியுடன் சேர்ந்து அரசும் மாற்றப்பட்டு மக்கள் ஏமாற்றப்பட்டுவிட்டனர் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரச சேவைகளில் சீர்திருத்தங்கள் செய்யப்படும். நாட்டின் சமஷ்டி வாதக் கோரிக்கைள் முற்றாக நிராகரிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

காலி எல்பிட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கூறியுள்ளதாவது:–

100 நாள்கள் அரசு தேர்தல் பரப்புரை மேடைகளில் மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 100 திட்டத்தை முன்வைத்திருந்த போதும் ஆட்சி அதிகாரம் கிடைத்ததன் பின்னர் அதனை மறந்துவிட்டுப் பழி வாங்கும் படலத்தைத் தொடங்கியது.

அதன் பின்னர் விவசாயிகள் மற்றும் பெருந்தோட்டத் துறையினர், சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கும் தேயிலைக்கான நிர்ணய விலை அதிகரிக்கப்படும் என வழங்கிய வாக்குறுதிகளையும் ஐக்கிய தேசிய கட்சி மறந்துவிட்டது. இறப்பர், நெல் உற்பத்தியாளர்களும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் ஏமாற்றப்பட்டுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி மக்களுக்கு மிகப்பெரிய ஏமாற்றத்தையளித்தது. கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது நாட்டின் ஜனாதிபதியை மாற்ற வேண்டும் என்பதற்காகவே மக்கள் வாக்களித்தனர். ஆனால் ஜனாதிபதியுடன் சேர்ந்து அரசையும் மாற்றிவிட்டனர். அதனால் தான் அது மாற்றம் அல்ல. மக்களுக்கு கிடைத்த



ஏமாற்றம் என்று கூறுகின்றோம். அதனால் இந்த அரசை மாற்ற மக்கள் முன்வர வேண்டும். மக்கள் எமக்கு இம்முறை சந்தர்ப்பம் வழங்கினால் தேயிலையிக்கான விலை 90 ரூபாவாகவும், பாலின் விலை 70 ரூபாவாகவும், நெல்லின் விலை 50 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்படும். அரச சேவைகளில் சீர்திருத்தங்கள் செய்யப்படும். நாட் டின் சமஷ்டி வாதக் கோரிக்கைள் முற்றாக நிராகரிக்கப்படும்.– என்றார். (ற)





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** கடந்த கால உழைப்புக்கு நற்பலன் கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும். குடும்பத் தேவைகள் அனைத்தும் சிறப்பாக நிறைவேறும். புத்திரர், படிப்பில் நல்ல முன்னேற்றம் காண்பர்.

**இடபம்:** சமூகத்தில் நல்லவர் எனப் பெயர் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள், பணி நிமித்தமாக வெளியூர் செல்வர். மாணவர்கள், கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**மிதுனம்:** செயலில் பொறுமையைக் கடைபிடிப்பது நல்லது. தொழில், வியாபாரம் சார்ந்த பணி நிறைவேறத் தாமதமாகும். குடும்பச் செலவுக்குச் சேமிப்புப் பயன்படும். வாகனத்தில் மிதவேகத்தை கடைபிடிப்பது நல்லது.

**கடகம்:** மனதில் புதிய திட்டம் தீட்டுவீர்கள். தொழில், வியாபாரம் முன்னேற்றத்தை அளிக்கும். பெற்றோர் விரும்பியதை வாங்கித் தருவீர்கள். அரசியல்வாதிகள், புதிய பதவி பெறுவர்.

**சிங்கம்:** உடல் நலத்தில் அக்கறை கொள்வது நல்லது. நண்பரின் உதவி, தக்க சமயத்தில் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் சீரான வளர்ச்சி இருக்கும். வெளியூர் பயணத் திட்டத்தில் மாறுதல் ஏற்படும்.

**கன்னி:** அன்பு வழியை அதிகம் பின்பற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். இல்லறத் துணை விரும்பியதை வாங்கித் தருவீர்கள். ஓய்வு நேரத்தில் இசைப்பாடலை ரசித்து மகிழ்வீர்கள்.

**துலாம்:** தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். ஆடம்பர எண்ணத்துடன் செலவு செய்வீர்கள். ஒவ்வாத உணவு வகைகளைத் தவிர்ப்பது நல்லது. வெளியூர் பயணத் திட்டத்தில் மாற்றம் செய்வீர்கள்.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். உறவினர்களிடம் இணக்கம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். அரசியல்வாதிகளுக்குப் பொறுப்பான பதவி கிடைக்கும்.

**தனுசு:** மற்றவர் நலனில் அக்கறை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் அமோக விற்பனையால் இலாபம் கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள்.

**மகரம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். உறவினர் உதவிகரமாகச் செயற்படுவர். நீண்டநாள் எதிர்பார்ப்புக் கூட தற்போது நிறைவேறும்.

**கும்பம்:** பயன் உணர்ந்து செயலில் ஈடுபடுவது நல்லது. தொழில், வியாபார நடைமுறையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்துவீர்கள். வெளியூர் பயணத்தால் ஆதாயம் கிடைக்கும். உடலாரோக்கிய விடயத்தில் அக்கறை கொள்வீர்கள்.

**மீனம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கே என்ற எண்ணம் உருவாகும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். வீட்டு உபயோகப் பொருள்களை வாங்குவீர்கள். உறவினர் வருகையால், மகிழ்ச்சி அதிகரிக்கும்.

# தமிழ் சினிமாவின் ரியல் நண்பர்கள்





தமிழ் சினிமாவில் எப்போதும் இரண்டு நாயகர்களுக்கு இடையே ஒரு வகை போட்டி இருக்கும். இதனால் இவருக்கு ஒரு கூட்டம், அவருக்கு ஒரு கூட்டம் எனப் பெரிய ஆதரவுக் குழுக்கள் இருக்கும். தியேட்டர் சண்டை, போஸ்டர் சண்டை, பேனர் சண்டை எனச் சண்டைகள் தற்போது வலைத்தள சண்டை வரை வளர்ந்துள்ளன. இது ஒருவகை சினிமாக் கலாசாரம். ஆனால், உண்மையாகவே அந்த இரு நாயகர்களும் தங்களது தனிப்பட்ட வாழ்க்கையில் நல்ல நண்பர்களாகவே இருப்பார்கள். ஒரு சிலரின் தவறான தூண்டுதலால் ரசிகர்களுக்கு இடையே சண்டை வருகின்றது.

**எம்.ஜி.ஆர்-சிவாஜி**

பாகவதர் மட்டும் தமிழ் சினிமாவை ஆண்டு வந்த நிலையில், எம்.ஜி.ஆர்–சிவாஜி என இரண்டு நட்சத்திரங்கள் சினிமாவில் ஜொலிக்க ஆரம்பித்தனர். முதன்முறையாக இரண்டு நடிகர்களது ஆதரவாளர்கள் மோதல் இங்கு தான் தொடங்கியது. ஆனால், அவர்கள் ஒருவருக்கொருவர் எப்போதும் நல்ல நட்புடன் தான் கடைசி வரை இருந்தனர். இதன் காரணமாகவே ரசிகர்கள் சண்டை தீவிரமடையவில்லை.

**ரஜினி-கமல்**

இரசிகர்களின் மோதல் அதிகமானது இந்தக் கால கட்டத்தில் தான், இருவரும் சேர்ந்து பல படங்களில் நடித்தாலும், இவர்கள் பிரிந்து நடிக்கத் தொடங்கியவுடன் ரசிகர்களும் பிரிய ஆரம்பித்து விட்டனர். ஆனால், பல மேடைகளில் ரஜினி, கமலையும், கமல் ரஜினியையும் புகழ்ந்து பேச ரசிகர்களுக்குள்ளான சண்டை குறைந்தது. மேலும்,கமல் ஒரு விழாவில் ரஜினி–கமல் போல் சிறந்த நண்பர்கள் வேறு யாரும் இல்லை என கூறியது அனைவரையும் நெகிழ்ச்சியடைய வைத்தது.

**விஜய்-அஜித்**

நாங்கள் சொல்லி உங்களுக்குத் தெரிய வேண்டியது இல்லை. உச்சக்கட்ட போர் என்றால் அது விஜய். அஜித் ரசிகர்களின் சண்டை தான். அஜித்தும், விஜய்யும் தான் தற்போது தமிழ் சினிமாவில் எவராலும் அசைக்க முடியாத நடிகர்கள், ஏனெனில் அத்தனை பெரிய ரசிகர்கள் வட்டத்தை அவர்கள் வைத்துள்ளனர். மற்ற நடிகர்களைத் திட்டுபவர்கள் எனது இரசிகர்களாக இருக்கத் தகுதியில்லாதவர்கள் என அஜித் கூறினார், மற்ற நடிகர்களையும் நீங்கள் மதிக்க வேண்டும் என விஜய் கூறினார். ஆனால், இவர்களது இரசிகர்கள் சமூக வலைத்தளங் களில் அப்படி நடந்து கொள்வதில்லை என்பது தான் வருத்தம். அவர்கள் நட்புடன் இருந்தாலும், ஒரு சிலரின் தவறான செயல் களால் பெரிய போர் வெடித்து விடு கிறது. இனியாவது இவர்கள் தங்களது அபிமான நடிகர்களின் வார்த்தைகளுக்கு மரியாதை செலுத்த வேண்டும்.

**சிம்பு-தனுஷ்**

அடுத்த தலைமுறை இரசிகர்களுக்கான போட்டி நடிகர்கள் இவர்கள், ஆனால், பிரச்சினையை ஆரம்பத்திலேயே தங்களது நட்பால் கிள்ளிஎறிந்து விட்டனர். எனவே இவர்கள் நட்பைப் புரிந்துகொண்ட இரசிகர்கள் எவரும் தம்மிடையே சண்டையிட்டுக் கொள்வதில்லை. இருவகை கருத்து வெளிப்பாடுகள் எப்போதும் ஒன்று தான்.

*இதுபோல் அனைத்து நடிகர்களுமே நட்புடன் இருக்க, நாம் மட்டும் ஏன் சண்டையிட்டு கொள்ள வேண்டும்...*








**காதலி:** "நான் யாரையாவது லவ் பண்ணுறது தெரிஞ்சா அப்பா என் கையில சூடு வைப்பார்!"

**காதலன்:** இப்படிக்கூட செய்வாங்களா?"

**காதலி:** "இங்க பாருங்க... ஏற்கனவே அஞ்சு தடவை சூடு வாங்கியிருக்கேன்!"



# பரீட்சைக்குச் செல்லும் மாணவர்கள் கவனிக்க வேண்டியவை

க.பொ.த உயர்தர பரீட்சையில் தோற்றவுள்ள அனைத்துப் பரீட்சார்த்திகளும் பரீட்சை அனுமதி அட்டை, தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு என்பவற்றை பரீட்சை நிலையத்துக்கு எடுத்து வருவது அவசியம் என பரீட்சை ஆணையாளர் நாயகம் டப்ளியு. எம்.என்.ஜே புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

பரீட்சை நிலையத்துக்கு செல்ல முன்னர் தனது ஆவணங்கள் சரியாக உள்ளனவா என்பது தொடர்பில் மாணவர்கள் சரி பார்த்துக்கொள்ளல் அவசியம் எனவும் தோற்றவுள்ள பாடம், மொழி, கால அட்டவணை என்பவற்றையும் மாணவர்கள் சரிபார்த்து கொள்வதனூடாக காலதாமதங் களை தவிர்த்துக் கொள்ள முடியும் எனவும் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலதிக விவரங்கள் தேவைப்படுமாயின் பாடசாலை பரீட்சை ஏற்பாட்டுக் கிளைக்கு 0112784208 / 011 2784537 ஆகிய இலக்கங்களினூடாக அல்லது 1911 என்ற உடனடி இலக் கத்தினூடாக தொடர்புகொண்டு அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)


பாராளுமன்றத் தேர்தல் - 2015
யாழ் தேர்தல் மாவட்டம்
X 7
நேர்மை! எளிமை!! உறுதி!!!
7

எங்களில் ஒருவரான (முன்னாள் பா.உ அமரர் வி.தர்மலிங்கம் அவர்களின் புதல்வன்)
திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களை ஆதரிப்போம்.
- மானிப்பாய் தொகுதி மக்கள்
தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

4
சுரேஷ் க.பிறேமச்சந்திரன்
X 4
அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற
ஆக்கிரமிப்புக்களை அகற்ற
இழந்த வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க
வீட்டுச் சின்னத்திற்கும் இலக்கம் 4 இற்கும் வாக்களியுங்கள்

நாடாளுமன்றத் தேர்தல்-2015

தமிழ்த் தேசிய கூட்டமைப்பை ஆதரித்து
மாபெரும் தேர்தல் பரப்புரைக் கூட்டம்
இடம் : சுன்னாகம் மத்திய பஸ்நிலைய வளாகம்
காலம் : 05.08.2015 புதன்கிழமை மாலை 5.30 மணி
தலைமை: திரு.சி.குமரவேல் (தலைவர், சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்)

பரப்புரையாளர்கள்
திரு.மாவை சேனாதிராஜா (முதன்மை வேட்பாளர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
திரு.தர்மலிங்கம் சித்தார்த்தன் (மாகாணசபை உறுப்பினர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
திரு.சுரேஸ் பிரேமச்சந்திரன் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
திரு.ந. ஸ்ரீகாந்தா (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
திரு.ந.அனந்தராஜ் (முன்னாள் தவிசாளர், நகரசபை வல்வெட்டித்துறை)
திரு.ஈ.சரவணபவன் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
திரு.க.அருந்தவபாலன் (அதிபர்,டிறிபேக் கல்லூரி)
திரு.ம.ஆ. சுமந்திரன் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
திரு.சி.சிறிதரன் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
திருமதி மதினி நெல்சன் (முன்னாள் நகரசபை உறுப்பினர்,பருத்தித்துறை)
தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்கள், முன்னாள் பிரதேசசபை தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களும் கலந்து சிறப்புரை ஆற்றுவார்கள்
அனைவரும் திரண்டு வாரீர்! கருத்துக்களை செவிமடுப்பீர்!! சிந்தித்து செயலாற்றுவீர்!!!
X
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

# விபத்தில் தினமும் இறக்கும் மாடுகள் சரியாகப் புதைக்கப்படாததால் சிரமம்

## தென்மராட்சி பிரதேச மக்கள் குற்றச்சாட்டு

தென்மராட்சி, ஓக.4
தென்மராட்சி பிரதேசத்தில் சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வாகனங்கள் மற்றும் ரயில்களால் மோதுண்டு சாவடையும் மாடுகள் உரிமை கோரப்படாத நிலையில் வீதி ஓரங்களில் காணப்படுகின்றன என்று கூறும் பொதுமக்கள், இதுகுறித்து சாவகச்சேரி பிரதேச சபைக்கு அறிவிக்கும்போது அவர்கள், மாடுகள் இறந்து கிடக்கும் இடங்களுக்கு அருகிலேயே அவற்றைப் புதைக்கின்றனர் என்றும், அவற்றை கட்டாக்காலி நாய்கள் கிளறி எடுத்து விடுகின்றன என்றும் கூறப்படுகிறது. அதனால் அந்தப் பகுதிகளில் துர்நாற்றம் வீசுவதுடன், சுகாதாரச் சீர்கேடுகளும் ஏற்படுகின்றன என்றும் குற்றஞ் சாட்டப்படுகிறது.
கட்டாக்காலிகளாக அலையும் மாடுகள் வாகனங்களாலும் ரயில்களினாலும் மோதுண்டு சாவடையும் சம்பவங்கள் பெரும்பாலும் நாளாந்தம் இடம் பெற்ற வருகின்றன. அவற்றின் உரிமையாளர்கள் உரிமை கோரத் தவறுவதால் இரண்டு மூன்று தினங்களின் பின்னர் பிரதேச சபைக்கு அறிவிக்கப்படுகிறது. மாடுகள் புதைப் பதற்குரிய பொதுவான இடம் இல்லாததாலும், சாவடைந்த மாடுகளின் உடல்கள் பழுதடைந்து காணப்படுவதாலும் தூர இடங்களுக்குக் கொண்டு செல்ல முடியாத நிலையில் அருகில் உள்ள வெற்றுக் காணிகளில் பிரதேச சபைப் பணியாளர்கள் அவற்றைப் புதைத்து விட்டுச் செல்கின்றனர். இந்த நிலையில் அப்பகுதி நாய்கள் இரவிரவாக புதைத்த இடங்களைக் கிளறி மாட்டின் எச்சங்களை வெளியே எடுப்பதால் துர் நாற்றம் வீசுகிறது. இதனால் அயலில் உள்ள குடியிருப்பாளர்கள் சுகாதாரச் சீர்கேடுகளை எதிர்நோக்கு வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இது தொடர்பாக பொதுச் சுகாதார பரிசோதகருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,
வளர்ப்பு மாடுகள், வாகனங்கள், ரயில்கள் போன்றவற்றினால் மோதுண்டு சாவடைந்தால் அதன் உரிமையாளர் அவற்றை அப்புறப்படுத்திப் புதைக்கவேண்டும். வீட்டுக்கு அருகே தனது மாடு வாகனங்களால் மோதுண்டு இறந்தாலும், அதனைப் புதைப்பதற்கு உரிமையாளர் முன் வருவதில்லை. அது தொடர்பாக பொலிஸாருக்கோ அல்லது பிரதேச சபைக்கோ அறிவிப்பதில்லை. இந்த நிலையில் அந்த இடத்திலேயே மாடுகள் கிடந்து பழுதடைந்து துர்நாற்றம் வீசும் வேளையிலேயே அயலில் உள்ள வர்களால் பிரதேச சபைக்கு அல்லது பொது சுகாதார பரிசோதகருக்கு அது குறித்து அறிவிக்கப்படுகிறது. சாவடைந்த மாடுகளை குறிப்பிட்ட ஆழத்துக்கு வெட்டியே புதைக்க வேண்டும். ஆனால் ஆழம் குறைந்த நிலையில் மாடுகளைப் புதைக்கும் போது அதனை நாய்கள் கிளறி வெளியே எடுக்கின்றன. இதனால் துர்நாற்றம் வீசுகிறது. மாட்டின் உரிமையாளர் மாடு சாவடைந்ததும் உரிய நடவடிக்கைகளை மேற் கொண்டு ஆழமாக வெட்டிப் புதைத்தால் நாய்கள் கிளறி வெளியே எடுக்கும் வாய்ப்பு இல்லாமல் போகும்.– என்றார்.
இது தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபையிடம் கருத்துக் கேட்ட போது,
ஏ–9 வீதியிலும், ரயில் பாதையிலும் அடிக்கடி மாடுகள் வாகனங்களாலும் ரயில்களாலும் மோதுண்டு சாவடையும் வேளை பிரதேச சபைக்குகிடைக்கும் முறைப்பாட்டையடுத்து அப்பகுதியிலிருந்து மாடுகளின் உடல்களை அப்புறப்படுத்தி புதைக்கின்றோம். அதன் பின்னர் அது தொடர்பான முறைப்பாடுகள் கிடைப்ப தில்லை. பிரதேச சபையின் பல்வேறு வேலைகளுக்கு ஊழியர்களும் வாகனங்களும் அனுப்பப்படுவதால்பெரும்பாலும் நாளாந்தம் சாவடையும் மாடுகளைப் புதைப்பதற்கு ஊழியர்களையும் வாகனங்களையும் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. – என்று தெரிவிக்கப்பட்டது. (ற–9)


அனலைதீவு ஐயனார் ஆலய தேர்த் திருவிழா கடந்த வியாழக்கிழமை பெருந்திரளான பக்தர்கள் மத்தியில் நடைபெற்றது. (ற–9)

# போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஓக.4
நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு யாழ்.மாநகரசபையின் சைவ சமய விவகாரக் குழுவால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சிறுகதைப் பல்தேர்வு வினா விடைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.
வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக கடந்த ஜூலை 31ஆம் திகதி யாழ்ப்பாண மாநகர பொதுநூலக கேட்போர் கூடத்தில் இந்தப் போட்டிகள் நடத்தப்பட்டிருந்தன.
மேற்பிரிவில் முதலாமிடத்தை யாழ்.மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி பு.லக்சனாவும், இரண்டாம் இடத்தை யாழ்.மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலய மாணவி சீ.விதுசாவும், மூன்றாம் இடத்தை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாண வன் அ.அபிநந்தனும் பெற்றுக் கொண்டுள்ளனர்.
மத்திய பிரிவில் முதலாம் இடத்தை யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் கி.ஆரூரனும், இரண்டாம் இடத்தை யாழ்.கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயமாணவி மா.அனஸ்ரிகாவும், மூன்றாம் இடத்தை யாழ். வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலய மாணவி வி.யானுசாவும், கீழ்ப்பிரிவில் முதலாம் இடத்தை யாழ்.இந்துக்கல்லூரி மாணவன் சு.திவானனும், இரண்டாம் இடத்தை யாழ்.நீர்வேலி றோமன் கத்தோலிக்க பாடசாலை மாணவி ஞா.பதுசாவும், மூன்றாம் இடத்தை யாழ். வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலய மாணவன் க.நிலக்சனும் பெற்றுக் கொண்டுள்ளனர். (ற–ரி6)


## கண்ணீர் அஞ்சலி

J.P.E.செல்வராசா அடிகளார்
(எமது முன்னாள் போஷகர் (CHAIRMAN)

எமது நிறுவனத்தின் வளர்ச்சிப் படிகளில் முக்கிய பங்கு வகித்தவர் இவரை நாம் என்றும் மறக்க முடியாது. இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.



பதிவாளர், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், மாணவர்கள்
PATRICIAN INSTITUTE

## 2 ஆம் ஆண்டு நினைவு

அமரர் சண்முகநாதன் பிரசாத்

தோற்றம் 05 11 1993



மறைவு 27 07 2013

என் செல்வமே பிரசாத் இரண்டு ஆண்டுகள் ஓடி மறைந்தபோதும்
இன்றும் என்றும் எங்களுடன் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறாய்
கண்மணியில் ஆடுகிறாய் புன்னகையால் வாட்டுகிறாய்
தினமும் உன் பெயரை எம் உதடுகள் உச்சரிக்கிறது ஆனால் !
உன் குரல் கேட்க முடியாமல் அன்ரி துடிப்பதை நீ அறிவாயா
என் செல்வமே பிரசாத் பெற்றோருக்கு ஐந்தாவது குழந்தையாகவும்
5ஆம் தேதியில் பிறந்து நாம் எல்லோரையும் ஆனந்தம் காணவைத்தாய்.
கடைக்குட்டியாகவும் செல்லப்பிள்ளையாகவும் வளர்ந்தாய்
நான் குண்டுத்தாக்குதலில் அம்மாவைப்பறிகொடுத்து
கதறி அழுத நேரமெல்லாம்
அன்ரி மடிமேல் உட்கார்ந்து உன்பிஞ்சு கரங்களால்
என் கண்ணீரை துடைத்து ஆறுதல் அடைய வைத்தாயே!
இன்று உன் ஆசைகள் நிறைவேற்ற
அன்ரி தவறியதால் இறைவனிடம் சென்றாயோ?
அன்ரி செய்த குற்றமா? விதி செய்த சதியா?
இருபதாவது வயதை எட்டிப்பிடித்த போதும்
ஒரு நாள் கூட உன் குரல் கேட்காமல் இருக்க மாட்டேன்.
எப்படி அன்ரியை விட்டுச் சென்றாய்.
நிச்சயம் உன்னோடு வந்து சேருவேன் உன்குரல் கேட்டிடுவேன்
செல்லமே என் உயிரே பிரசாத்.

(உன் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.)

உன் பிரிவால் துயருறும் :

பத்திரகாளி கோயிலடி,
பொலி கண்டி கிழக்கு,
வல்வெட்டித்துறை.

சிறியதாய் (சோதிமலர்)
பெற்றோர்
சகோதரர்கள்.


# பொதுத்தேர்தலை உன்னிப்பாக அவதானிக்கின்றது சர்வதேசம்

## த.தே.கூ. வேட்பாளர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.4
இலங்கையில் இடம்பெறவுள்ள தேர்தலை சர்வதேச நாடுகள் உன்னிப்பாக அவதானித்து வருவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
மட்டக்களப்பில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–
நாம் எதிர்கொள்ளவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை இலங்கையில் ஐக் கிய நாடுகள் சபை நடத்துகின்ற தேர்தலாக நாம் கருத வேண்டும்.
இந்தத் தேர்தலின் முடிவுகள் கடந்த காலங்களில் தாயக மண்ணிலே நடைபெற்ற இனப் படுகொலையைக் கண்டித்து ஐக்கிய நாடுகள் சபையிலே கொண்டு வரப்படும் பிரேரணைக்கு சார்பான வாக்கு களாக அமைந்திட வேண்டும். அந்த ஓர் எண்ணத்துடன் நாம் செயற்பட வேண்டும்.
எமது இளைஞர்கள் விடுதலையைப் பெற்றுத்தருவதற்காக செய்த தியாகங்களை நாம் எளிதில் மறந்து விட கூடாது. அந்தத் தியாகங்களை பொறுத்துக் கொள்ள முடியாமல் மிகப்பெரிய வீர வரலாற்றை தாயக மண்ணிலே புதைத்து விட்டார்கள். எங்களுடைய உரிமைகள் அவ்வாறு நசுக்கப்படக் கூடாது.
நாங்கள் எங்களது உரிமைகளுக்காக நியாயமான முறையில் போராடும் இனம். எங்கள் மண்ணிலே உரிமையுடன் சுதந்திரமாக வாழ வேண்டும். அதற்காக தமிழர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள். தேசிய சிங்களக் கட்சிகளிலும் தமிழ் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளார்கள்.
அவர்களில் பலர் உங்கள் உற வினர்களாகவும் இருக்கலாம். அவர்களுக்கு நீங்கள் வழங்கும் வாக்குகள் மூலம் ஒரு தமிழ்ப் பிரதிநிதியை தெரிவு செய்ய முடியாது, மாறாக எமது வாக்குகளினால் முஸ்லிம்களே தெரிவு செய்யப்படுவார்கள். இது கடந்த காலப் படிப்பினைகள். இம்முறை தேர்தலில் உறவுக்காக வாக்களிக்காமல் உரிமைக்காக வாக்களியுங்கள். – என்றார். (ற)

# ஐ.தே.க. சூறாவளி பரப்புரை

தென்மராட்சி, ஓக.4
ஐக்கிய தேசியக் கட்சியின் தென்மராட்சி பிரதேசத்துக்கான பொதுத் தேர்தல் சூறாவளிப் பரப்புரை எதிர்வரும் ஏழாம் திகதி காலை தொடக்கம் மாலை வரை பத்துக்கு மேற்பட்ட இடங்களில் நடத்தப்படவுள்ளது.
ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் உட்பட ஐ.தே.க. வேட்பாளர்கள் இவற்றில் கலந்து கொள்வர் என கட்சியின் தென்மராட்சி அமைப்பாளர் கு.சர்வானந்தா அறிவித்துள்ளார். (ற–9)

# நண்டு, இறால், கணவாய் விலைகள் உச்சத்தில்

யாழ்ப்பாணம், ஓக.4
யாழ்ப்பாணத்திலுள்ள முக்கிய சந்தைகளில் நண்டு, இறால் மற்றும் கணவாய் என்பவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் அவற்றின் விலைகள் உயர்வடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
ஒரு கிலோ சிவப்பு இறால் 800 ரூபா தொடக்கம் 900 ரூபா வரையிலும், ஒரு கிலோ கறுப்பு இறால் ஆயிரம் ரூபா முதல் ஆயிரத்து நூறு ரூபா வரையிலும், நண்டு கிலோ 550 ரூபா முதல் 600 ரூபா வரையிலும், கணவாய் கிலோ 500 ரூபா முதல் 600 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்படுகின்றன.
கடந்த காலங்களைவிட தற்போது கிலோவுக்கு 100 முதல் 300 ரூபா வரையில் இவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன என்று கூறப்படுகின்றது. விடுமுறையில் வெளிநாடுகள் மற்றும் வெளிமாவட்டங்களில் இருந்து வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன் அவர்களில் பெரும்பாலானவர்கள் நண்டு, இறால் மற்றும் கணவாய் என்பவற்றின் மீது அதிக நாட்டம் கொள்வதால் அவற்றின் விலைகள் உயர்வடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

## ரயில் கடவையில் எச்சரிக்கை விளக்கு எரியாததால் அபாயம்

தென்மராட்சி, ஓக.4

ரயில் வருவதற்கான சமிக்ஞை ஒலி ஒலித்த போதிலும் அபாய விளக்கு எரியாததால் ரயில் கடவையைக் கடக்க முயன்ற வாகனம் நூலிழையில் தப்பியது.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு சாவகச்சேரி ஆதார மருத்துவமனை முன்பாக உள்ள கந்தையா வீதியில் இடம்பெற்றது.

இந்த வீதியில் பொருத்தப்பட்டிருந்த ரயில் கடவை அபாய விளக்கின் வயர்கள் இனந் தெரியாதோரால் அறுக்கப்பட்டதால் இந்த நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இனந்தெரியாதோரால் கடந்த மாதம் இந்தக் கடவையில் பொருத்தப்பட்டிருந்த அபாய விளக்கின் வயர்கள் அறுக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பொது மக்கள் கொடுத்த முறைப்பாட்டையடுத்து அண்மையில் ரயில்வே திணைக்கள தொழில்நுட்பவியலாளர்கள் அதனைச் சீரமைத்துச் சென்றனர். அதன்பின்னரும் அபாய விளக்கின் வயர்கள் அறுக்கப்பட்டதால் சிவப்பு விளக்கு எரியாதுள்ளது. இதனால் விபத்து ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.(ற-9)

## துணிச்சலுடன் போராடி திருடர்களைப் பிடித்த வயோதிபர்கள்

தென்மராட்சி, ஓக.4

ஆயுத முனையில் அச்சுறுத்தி தங்க நகைகள், உடைமைகளை அபகரித்த திருடர்களுடன் போராடி அவர்களை அயலவர் களுடன் சேர்ந்து பிடித்துக் கொடுத்தனர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த வயோதிபர்கள். இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு வரணி வடக்கில் நடந்துள்ளது.

இரவு படுக்கைக்குச் செல்ல முன்னர் வீட்டினுள் புகுந்த திருடர்கள் வீட்டிலிருந்த வயோதிபக் குடும்பத்தைத் தாக்கி ஆயுதமுனையில் அச்சுறுத்தி அவர்களிடமிருந்த தங்க மோதிரம் மற்றும் கையடக்கத் தொலைபேசி ஆகியவற்றைத் திருடிச் செல்ல முற்பட்டனர். ஆயினும் வீட்டிலிருந்த ஆண், திருடர்களுடன் போராடிக் கொண்டிருக்க பெண்கள் கூக்குரலிட்டுள்ளனர். அதையடுத்து அயலவர்கள் ஓடி வந்து வீட்டுக்குள் வைத்து திருடர்களை மடக்கிப் பிடித்தனர்.

இதில் காயமடைந்த இதே இடத்தைச் சேர்ந்த கதிரவேலு சதாசிவம் (வயது–64)அவரது மனைவியானசதாசிவம்பரமேஸ்வரி(வயது –63), சகோதரியான சதாசிவம் பரமேஸ்வரி ஆகியோர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களால் பிடிக்கப்பட்ட திருடர்கள் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற–9)

## சுற்றுலா விசாவில் வியாபாரம்: இந்தியர் கைது

யாழ்ப்பாணம், ஓக.4

சுற்றுலா நுழைவிசைவில் நாட்டுக்குள் வந்து சட்டவிரோதமான முறையில் புடைவை வியாபாரத்தில் ஈடுபட்ட இந்திய பிரஜை ஒருவரை, கடந்த வெள்ளிக்கிழமை மாலை தாம் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் பண்டத்தரிப்பு பகுதியில் புடைவை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த போதே கைது செய்யப்பட்டதாகவும், இவ்வாறு கைதானவர் தமிழ்நாடு, மதுரையை சேர்ந்த செட்டியார் கறுப்பையா (வயது – 42) எனவும் தெரிவிக்கப்பட்டது.

அவரிடம் இருந்து 20 சல்வார், 10 புடைவைகளும் மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

## ஹைஏஸ் மோ.சைக்கிள் விபத்தில் மூவர் காயம்

தென்மராட்சி, ஓக.4

வேறொரு வீதியிலிருந்து வேகமாக வந்த மோட்டார் சைக்கிளை பிரதான வீதியில் வந்த வாகனம் மோதியது. மோ.சைக்கிளில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்து, இருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை மாலை மீசாலை புத்தூர் சந்தியில் இடம்பெற்றது.

மீசாலை புத்தூர் வீதியூடாக மூவரை ஏற்றி வந்த மோட்டார் சைக்கிள், புத்தூர் சந்தி – ஏ–9 வீதியில் நுழைந்தபோது பிரதான வீதியில் வந்த ஹைஏஸ் வாகனம் மோட்டார் சைக்கிள் மீது மோதியது. அதில் மோட்டார் சைக்கிளில்பயணித்த மூவரும் காயமடைந்தனர். காயமடைந்த மூவரும் சாவகச்சேரி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு இருவர் மேலதிக சிகிச் சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

வரணி வடக்கைச் சேர்ந்த கமலேஸ்வரன் துவாரகன் (வயது–23), அவரது சகோதரியான கமலேஸ்வரன் கோபிகா (வயது–21), உறவினரான சூரியபிரகாஸ் சொகுஸானந்தி (வயது–9) ஆகியோரே காயமடைந்தவர்களாவார்கள். (ற–9)












## தவறிவிட்டது

இரத்தினம் தில்லைநாதன் என்பவரின், கீழ்குறித்த இலக்கமுடைய வாகன சாரதி அனுமதிப்பத்திரங்கள் (இல.2170151415 ,B 2054581) முறிகண்டி- கிளிநொச்சிப் பகுதிக்கிடையில் தவறியுள்ளது. கண்டவர்கள் கீழ்கண்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 071 919 5581

## Vacancies
### Sales Representative (விற்பனை பிரதிநிதி )

யாழின் பிரபல தனியார் தொலைத் தொடர்பாடல் நிறுவனத்துக்கு விற்பனை பிரதிநிதிகளுக்கு உடனடியாக வெற்றிடம் காணப்படுகிறது. இதற்கு பின்வரும் தகைமைகள் எதிர்பாக்கப்படுகின்றன.

01. கல்வித் தகைமை.
02. உந்துருளியுடன் கூடிய சாரதி அனுமதிப்பத்திரம்.
03. முன் அனுபவம்( தொலைத்தொடர்பாடல், (Sales Field) வேலை செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்படி தகைமையுடையோர் 62/33 Stanly Road எனும் முகவரியிலுள்ள Hutch அலுவலகத்துடனோ அல்லது 078 500 0580 என்ற இலக்கத்துடன் உடனடியாக தொடர்பு கொள்ளவும் .


# நாய்களுக்கு கருத்தடை

தென்மராட்சி, ஓக.4

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக் குட்பட்ட பகுதிகளில் வளர்க்கப்படும் பெண் நாய் களுக்கு இலவச கருத்தடை செய்யும் நடமாடும் சிகிச்சை முகாம் பணிகள் இன்று முதல் நடை பெறவுள்ளன.

இன்று கொடிகாமம் பகுதியிலும், நாளை வரணிப் பகுதியிலும், வளர்ப்புப் பெண் நாய்களுக்கு கருத் தடைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக வும் திணைக்கள வாகனங்கள் மூலம் அறிவிக் கப்படும் நிலையங்களுக்கு வளர்ப்பு நாய்களைக் கொண்டு வருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் கருத்தடை சிகிச்சை முகாம் நடத்தப்படவுள்ளதால் தத்தமது பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோத கருடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப் பட்டுள்ளது. (ற-9)

# விவசாயப் பயிற்சி நிலையத்தின் வயல் விழா

யாழ்ப்பாணம், ஓக. 4

திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் புதிய மற்றும் பயன்தரு விதைகளை அறிமுகம் செய்வது தொடர்பாகவும், விவசாயத் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் விதமாகவும் வயல்விழா என்னும் தொனிப்பொருளில் இன்றைய தினம் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்துள்ளது.

குறித்த பயிற்சி நிலையத்தில் மு.ப. 10 மணியளவில் ஆரம்பமாகும் இந்தநிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண விவசாயப் பணிப் பாளர் சி.சிவகுமார் கலந்துகொள்கின்ற அதேநேரம் சிறப்பு விருந் தினர்களாக யாழ்.மாவட்டகமநல சேவை உதவி ஆணையாளர் ஆர்.நிசாந் தனும், யாழ். விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி ரி.கருணைநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம)

# தாக்குதலில் காயமடைந்த நால்வர் வைத்தியசாலையில்

வாள் மற்றும் உடைந்த போத்தல் என்பவற்றால் தாக்கப்பட்ட நால்வர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை மட்டுவிலில் இடம்பெற்றது. சம்பவத்தில் காயமடைந்த மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த பிரபாகரன் மதிவதனன் ( வயது-25 ), சிவகடாட்சம் பிரசன்னா (வயது-27 ), தெய் வேந்திரன் திருஈஸ்வரன் (வயது-32 ), சரசாலை வடக்கைச் சேர்ந்த சுந்தரராஜா சுரேஸ் (வயது 24 ) ஆகியோரே சாவகச்சேரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர் இவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக் காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை அயல் வீட்டுக்காரரால் குப்பை வாரியால் தாக்கப்பட்ட குடும் பஸ்தர் ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மீசாலைதெற்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றசம்பவத்தில் இதே இடத்தைச்சேர்ந்த மாந்தை செல்வராசா ( வயது 55 ) என்பவரே காயமடைந்த வராவார். (ற-9)


## பணிநிலை வெற்றிடம்

கிளிநொச்சி நகரில் இயங்கிவரும் தன்னார்வத்தொண்டு நிறுவனமான மனிதாபிமான புனர்வாழ்வு செயற்பாடுகளுக்கான தேசிய சங்கத்தின் (NAHRO) கீழ்வரும் பணிநிலைகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. அலுவலக உதவியாளர் (ஆண்/பெண்)
2. வெளிக்களப்பணியாளர் (ஆண்/பெண்)

தகைமைகள் - க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்
கணினி பயன்பாட்டறிவு (MS office)
சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல்வேண்டும்.
வயதெல்லை 22 - 40

கிளிநொச்சி மாவட்டத்தினை சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். விண்ணப் பங்கள் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்பட்ட தங்கள் சுயவிவரத் தினை இல.203 பொதுச்சந்தை அருகில், கண்டி வீதி, கிளிநொச்சி எனும் அஞ்சல் முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது நேரில் அல்லது nahrongo@gmail.com என்னும் மின்னஞ்சலுக்கு 10.08.2015 முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும்.

தொ.பே. இல : 021 228 3659

கௌரவ தலைவர், மனிதாபிமான புனர்வாழ்வு செயற்பாடுகளுக்கான தேசிய சங்கம் , கிளிநொச்சி.

## பெயர்மாற்றம்

கோப்பாய் மத்தி, கந்தசுவாமி கோவிலடியைச் சேர்ந்த மகாதேவன் யோகசுஸ்பரி ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை மகாதேவன் யோகேஸ்வரி என பெயர்மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையெப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

மகாதேவன் யோகேஸ்வரி

## Kidney உடன் தேவை

"O" Negative Kidney உடன் தேவை. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு : 077 268 5414
077 371 6461

## உடனடி வேலை வாய்ப்பு

கிளிநொச்சி நகரில் இயங்கும் பிரபல எரிபொருள் நிலையத்திற்கு எரிபொருள் நிரப்புனர்கள் தேவை. நேர்முகப் பரீட்சைக்கு உடன் சமுகமளிக்கவும்.

தொடர்பு :077 150 6850
077 710 2153

## பெயர் மாற்றம்

முதலாம் கட்டை,புலோலி மத்தி, பருத்தித்துறை என்ற முகவரியில் வசிக்கும் **செல்வி சதாசிவம் சத்தியதேவி** ஆகிய யான் இன்று முதல் (03.08.2015) எனது பெயரை **செல்வி சதாசிவம் சத்தியா** எனப் பெயர் மாற்றம் செய்துள்ளேன். இலங்கை ஜனநாயக சோஸலிச குடியரசின் சட்டதிட்டங்களுக்கமைய எனது சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரான **செல்வி சதாசிவம் சத்தியா** என்ற பெயரையே பாவிப்பேன் என இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

செல்வி சதாசிவம் சத்தியா
முதலாம் கட்டை,
புலோலி மத்தி, பருத்தித்துறை

## கோண்டாவில் சிவபூமி பாடசாலை மாணவர்கள் அமெரிக்காவில் வரலாற்று சாதனை

SIVA POOMI

Special Olympics WORLD GAMES LOS ANGELES 2015

**எங்கள் பாடசாலை மாணவர்கள் அமெரிக்கா லோயஞ்சஸ் மாநிலத்தில் நடைபெற்ற சர்வதேச விசேட ஒலிம்பிக் போட்டியில் பங்கு பற்றி பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.**



அதிபர்
திருமதி
கலைவாணி குகதாசன்

செல்வன்
ஜெயச்சந்திரன்
மனோஜன்
100M ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கம்.



பயிற்சியாளர் ம. இளம்பிறையன் உடன் மாணவர்கள்

செல்வன்
அரசகுலசூரியன்
மயூரன்
100M ஓட்டப் போட்டியில் வெங்கலப் பதக்கம்.



செல்வி
ராதை அருளம்பலம்
(பயிற்சியாளர்)

எமது மாணவர்களின் வரலாற்றுச் சாதனை குறித்து மிகவும் ஆனந்தமடைகிறோம். பிள்ளைகள் பெற்ற வெற்றிக்கு நல்லருள் வழங்கிய இறைவனுக்கும், நல்லாசி வழங்கிய பெரியோர்களுக்கும், அயராது உழைத்த பாடசாலை அதிபர் திருமதி கலைவாணி குகதாசன் மற்றும் ஆசிரியர்களுக்கும், யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி விஞ்ஞான அலகு விரிவுரையாளர்களாகிய திரு.ம.இளம்பிறையன், செல்வி ராதை அருளம்பலம் ஆகியோருக்கும், எமது கொழும்பு இணைப்பாளர் திரு.மு.பாலச்சந்திரன் அவர்களுக்கும், தென்னிலங்கையில் நடைபெற்ற போட்டிகளுக்கு அழைத்துச் சென்ற திரு.க.நவநீதன் (நிர்வாக அலுவலகர்) அவர்களுக்கும் எமது சிவபூமி பாடசாலை வளர்ச்சிக்கு உதவிக்கரங்களை நீட்டிய உள்நாட்டு வெளிநாட்டு நல்லுள்ளம் கொண்ட அன்பர்களுக்கும் இதய பூர்வமான நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்கிறோம்.

கலாநிதி ஆறு. திருமுருகன்
தலைவர்.
சிவபூமி அறக்கட்டளை.

நிர்வாக சபை
சிவபூமி அறக்கட்டளை

# குறைந்த விலையில் பிற்நெஸ் டிராக்கர் (Fitness Tracker)



உடல் ஆரோக்கியம், உடற் பயிற்சி என்பவற்றைக் கண்காணிக்க உதவும் Fitness Tracker சாதனங்களை பல்வேறு நிறுவனங்கள் அறிமுகம் செய்து வருகின்றன. இந்த நிறுவனங்களின் வரிசையில் ஏசர் (Acer) நிறுவனமும் இணைந்து, Liquid Leap+ எனும் சாதனத்தை வடிவமைத்து அறிமுகம் செய்துள்ளது.

100 டொலர்கள் பெறுமதியான இந்தச் சாதனத்தைக் குறிப்பிட்ட காலத்துக்கு 80 டொலர்கள் எனும் சலுகை விலையில் ஏசர் நிறுவனம் விற்பனை செய்யவுள்ளது. இதில் மின்னஞ்சல்கள், பாடல்கள், குறுஞ்செய்திகள் போன்றவற்றைக் கையாளும் வசதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

மேலும் கறுப்பு, பச்சை, இளம் சிவப்பு ஆகிய நிறங்களில் கிடைக்கும் இந்தச் சாதனத்தில் 0.94 அங்குல OLED தொடுதிரை வசதிகளும் காணப்படுகின்றது.

இவை தவிர இந்தச் சாதனத்தை அன்ரோயிட் மற்றும் iOS சாதனங்களுடன் இணைத்தும் பயன்படுத்த முடியும்.

# மொபைல் சாதனங்களில் புதிய கைரேகை (Fingerprint)



டேப்லட் மற்றும் ஸ்மார்ட் கைபேசிகள் போன்ற மொபைல் சாதனங்களில் சேகரிக்கப்படும் தகவல்களைப் பாதுகாப்பதற்காக அவற்றில் Fingerprint தொழில்நுட்பம் தரப்பட்டுள்ளமை பலரும் அறிந்ததே.

இந்தத் தொழில்நுட்பம் Home பொத்தானில் இணைக்கப்பட்டுள்ள .விசேட சென்சாரின் உதவியுடன் செயற்படக்கூடியதாக இருக்கின்றது.

ஆனால் Sonovation எனும் நிறுவனம் Gorilla Glass திரையின் அடிப் பகுதியில் Ultrasonic Biometric சென்சார்களைக் கொண்ட Finger print தொழில்நுட்பத்தைஅறிமுகம்செய்துள்ளது. மேலும், முப்பரிமாண ஸ்கான் நுட்பத்தைக் கொண்டுள்ள இந்தப் புதிய Fingerprint தொழில்நுட்பத்தின் ஊடாக மேடு பள்ளங்களைக் கொண்ட கை ரேகைகளை இலகுவாக உள்ளெடுக்கக்கூடியதாக இருக்கின்றது.

# அஸ்தமனத்தை நோக்கி Google+ Photos

கூகுள் நிறுவனம் சில மாதங்களுக்கு முன்னர் Google Photos எனும் பிரத்தியேக அப்பிளிக்கேஷன் ஒன்றை அன்ரோயிட் சாதனங்களுக்காக அறிமுகம் செய்திருந்தது. Google + சமூக வலைத்தளத்தினூடாக புகைப்படங்களை பகிரும் சேவையை இன்றிலிருந்து நிறுத்தவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளதே இதற்கு காரணமாகும்.

இந்தச் சேவை நிறுத்தமானது முதலில் அன்ரோயிட் சாதனங்களில் ஆரம்பித்து iOS சாதனங்கள், இணையத்தளங்கள் என்பவற்றிலும் எதிர்வரும் மாதங்களில் தொடரவுள்ளது. புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள அப்பிளிக்கேஷனில் எல்லையற்ற சேமிப்பு வசதி, பேக்கப், எடிட், புகைப்படங்களை பகிருதல் போன்ற பல வசதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தப் புதிய அப்பிளிக்கேஷனை நிறுவி கூகுள் பிளஸ் தளத்திலுள்ள புகைப்படங்களைப் பேக்கப் செய்வதன் ஊடாக அவற்றைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.




# யாழ். இந்து பழைய மாணவர்களால் கணித பாடப் பயிற்சி நூல் வெளியீடு

வலி.வடக்கு, ஓக.4

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 1992ஆம் ஆண்டு க.பொ.த. உயர் தரத்தில் கல்வி கற்று தற்போது ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் பழைய மாணவர்களால் இலங்கையில் வாழும் தமிழ் மாணவர்களின் கணிதத் துறையை மேம்படுத்தும் வகையில் முன்னோடியாக கணித பாட பயிற்சி நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு உட்பட மத்திய மலைநாடு என தமிழ் மக்கள் வாழும் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மாணவர்கள் குறிப்பாக க.பொ.த. சாதாரண தர மாணவர்கள் பயன் பெறும் வகையில் இந்த செயல்முறைநூல் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நூல் வெளியீட்டு விழா கடந்த வியாழக்கிழமை 3 மணியளவில் யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரி கேட்போர் கூடத்தில் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ்.சுந்த ரேஸ்வரன் தலைமையில் நடை பெற்றது.



இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் கலந்துகொண்டார். யாழ்ப்பாணம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் தெய்வேந்திரராசா, முல்லைத்தீவு கலவ வலய கல்விப் பணிப்பாளர் திருமதி யோ.முனீஸ்வரன், யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரி அதிபர் எஸ்.தயானந்தராசா, வைத்திய கலாநிதி அ.ஜெயக்குமரன் உட்படப் பலர் நிகழ்வில் கலந்து கொண் டனர்.

நூலை பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ்.சுந்தரேசன் வெளியிட, முதற் பிரதியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் எஸ்.தயானந்தராசா பெற்றுக் கொண்டார். கல்லூரி மாணவாகளுக்கும் நூல்கள் வழங்கப்பட்டதுடன் வடக்கு, கிழக்கு உட்பட மாவட்ட தமிழ் மொழி மூல ஏனைய பாட சாலைகளுக்கும் நூல்கள் வழங்கப் படவுள்ளன.

(ற-86)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் 'உயர்த்தும் கரங்கள்' திட்டத்தின் கீழ் கிளிநொச்சிப் பிரதேசத்தில் குடும்பத் தலை வரை இழந்த குடும்பம் ஒன்றுக்கு 15 ஆயிரம் ரூபா பெறுமதியான புதிய சைக்கிள் ஒன்று வழங்கப்பட்டது. (ஐ)

# பெண் தலைமைக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கல்

கிளிநொச்சி, ஓக.4

பெண்களைத் தலைமத்துவமாக கொண்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு மாந்தைகிழக்கு பிரதேச செயலாளர் ரி. பிருந்தாகரன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்துக்கு உட்பட்ட பெண்களை குடும்பத்தலைமைத்துவமாக கொண்ட சுமார் 30 பெண்களுக்கே இந்த உதவித்திட்டம் வழங்கப்பட்டது.

இவ் உதவித்திட்டமானது நிலையான விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் பெண்களுக்கு சுயதொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டு அதற்கான உபகரணங்களும் வழங்கப் பட்டன.

நிகழ்வில் மாந்தை கிழக்கு பிரதேச



செயலாளர், நிலையான விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் லயனல் வீரக்கோன், நிலையான விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் வடமாகாண இணைப்பாளர் நா.தேவகிருஷ்ணன் மற்றும் பிரதேச செயலகத்தின் கிராம சேவை அலுவலர்கள், சமூகசேவை உத்தியோகத்தர் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ற-21,421)





ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவின் சொந்த ஊரான நெல்லை மாவட்டம் சங்கரன்கோவில் தாலுகா வில் உள்ள கலிங்கப்பட்டியில் மதுக்கடைகளை அகற்றக் கோரி, வைகோவின் தாயார் மாரியம்மாள் தலைமையில் வைகோ உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

## இந்திய மீனவர்கள் 163 பேர் விடுதலை

கராச்சி,ஓக.4

11 வயது சிறுவன் உட்பட, 163 இந்திய மீனவர்களை பாகிஸ்தான் அரசு, நேற்று விடுதலை செய்துள்ளது. அண்மையில், ரஷ்யாவின் உபா நகரில், பிரதமர் மோடியும், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீபும் சந்தித்துப் பேசினர். இதையடுத்து, இரு தரப்பு சிறைக் கைதிகளையும், விடுதலை செய்ய முடிவு செய்யப்பட்டது. முதற்கட்டமாக, பாகிஸ்தான் சிறை களில் இருந்து, 11 வயதுச் சிறுவன்உட்பட 163 இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

## கிளர்ச்சியாளர்களால் பிடித்து வைக்கப்பட்டோர் பெருவில் மீட்பு



பெரு,ஓக.4


பெரு நாட்டின் ஒதுக்குப்புறமான காட்டுப் பகுதியில் "ஷைனிங் பாத்" எனப்படும் கிளர்ச்சிக் குழுவினருக்கு எதிராக அரசு மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கை ஒன்றின் போது, அந்தக் கிளர்ச்சிக்காரர்களால் பிடித்துவைக்கப்பட்டிருந்த பெரியவர்கள் மற்றும் சிறுவர்களில் மேலும் பதினைந்து பேரைத் தாம் விடுவித்துள்ளதாக அந்த நாட்டின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்டவர்களில் பெரும் பான்மையானோர் அஷனின்கா என்ற பூர்வகுடியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் சிலர், தசாப்தக் கணக்கில் அடிமைகளாக நடத்தப்பட்டு வந்துள்ளனர் என்றும், இவர்களைப் விவசாயச் செய்கையில் கொத்தடிமைகளாக நடத்தியும், அவர்களது பிள்ளைகளைத்தமது கெரில்லாப் படையில் சண்டையிட வைத்தும் கிளர்ச்சிக்காரர்கள் துஷ்பிரயோகம் செய்து வந்ததாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மீட்கப்பட்டவர்களில்சிலர்காசநோய், போஷாக்கின்மைமற்றும்ஒட்டுண்ணி தொற்றுக்களால் பாதிக் கப்பட்டுள்ளனர் என அந்த நாட்டின் பயங்கரவாத ஒழிப்பு பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# இந்தியா–பாக். இடையே 2 நாள் பேச்சு டில்லியில்



இஸ்லாமாபாத்,ஓக.4

இந்தியா–பாகிஸ்தான் இடையே தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் மட்டத்திலான இரு நாள் பேச்சுக்கள் எதிர்வரும் 23 ஆம் மற்றும் 24 ஆம் திகதிகளில் திகதி டில்லியில் நடைபெறவுள்ளன.

பிரதமர் நரேந்திர மோடி, ரஷ்யாவில் உபா நகரில் நடந்த பிரிக்ஸ் உச்சி மாநாடு, ஷங்காய் ஒத்துழைப்பு மாநாடு ஆகியவற்றுக்கு சென்றிருந்தபோது, அங்கு சென்றிருந்த பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பை சந்தித்து பேசினார்.

அப்போது இரு நாடுகளுக்கும் இடையே உள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும், பேச்சு மூலம் தீர்வு காண்பதற்கும், இரு நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் டில்லியில் சந்தித்து பேசுவதற்கும் முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, டில்லியில் இரு நாடுகளுக்கும் இடையேயான பேச்சுக்கள் 2நாள்கள் நடைபெறவுள்ளன. இதில் இந்தியாவின் சார்பில் தேசிய பாது காப்பு ஆலோசகர் அஜித் டோவலும், பாகிஸ்தான்சார்பில் பிரதமரின் தேசிய பாதுகாப்பு மற்றும் வெளியுறவுத்துறை ஆலோசகர் சர்தாஜ் அஜிசும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அதே நேரத்தில், இதுகுறித்து பாகிஸ்தான் இன்னும் உறுதி செய்யவில்லை என்றும், பேச்சின்போது இடம்பெற வேண்டிய அம்சங்கள் பற்றி முடிவு செய்யவில்லை என்றும் சர்தாஜ் அஜிஸ் கூறியதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

இந்தப் பேச்சின்போது எல்லை தாண்டிய தீவிரவாதம், மும்பை தாக்குதலில் மூளையாக செயல்பட்ட ஜாகி உர் ரகுமான் லக்விக்கு பாகிஸ்தான் நீதிமன்றம் பிணை வழங்கியமை, பிற பாதுகாப்பு விடயங்கள், எல்லையில் அமைதியையும், சமாதானத்தையும் கடைப் பிடிக்க வேண்டியதன்அவசியம்உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## நான்கு மாநிலங்களில் வெள்ளம்; 88 பேர் இந்தியாவில் சாவு



புதுடில்லி,ஓக.4

மேற்கு வங்காளம், குஜராத், ராஜஸ்தான், ஒடிஸா ஆகியநான்குமாநிலங்களிலும்பெய்துவரும்கனமழைகாரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் 88 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கக்கடலில் உருவான கோ மென் புயலால் ஏற்பட்ட காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக மேற்கு வங்காளம், ராஜஸ்தான், குஜராத், ஆந்திரா மாநிலங்களில் கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து கன மழை பெய்து வருகிறது. நான்கு மாநிலங்களில் மேற்கு வங்காளம் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த மாநிலத்தில் 12 மாவட்டங்கள் வெள்ளம் மற்றும் நீர் தேக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. 3.6 மில்லியனுக்கு அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 1.1 மில்லியனுக் கும் அதிகமான மக்கள் நிவாரண முகாம்களில்தஞ்சம்அடைந்துள்ளனர். இதே போன்று ராஜஸ்தான் மாநிலத்தில் கனமழையால் சுமார் 28 பேர் உயிரிழந்துள்ளனர். குஜராத் மாநிலத்தில் சுமார் 14 மாவட் டங்களில் சுமார் 40 லட்சம்பேர்பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மக்களின் உணர்வுக்கு மதிப்பளித்து நடவுங்கள்

### கருணாநிதி வலியுறுத்தல்



சென்னை, ஓக.4

மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு, தமிழகத்தில் உடனடியாக மதுவிலக்கை நடைமுறைப் படுத்த வேண்டும் என்று கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து, தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

மதுவிலக்கை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் அண்மைக் காலத்தில் மக்களின் உணர்வுகள் பெருகி வருகின்றன. அதை முன் கூட்டியே புரிந்து கொண்டுதான் தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால், மதுவிலக்கை நடைமுறைப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று நான் அறிவித்தேன்.

ஆனால்உடனடியாகமதுவிலக்கைக் கொண்டு வந்து நடைமுறைப்படுத்திட வேண்டும்என்பதற்கானபோராட்டம் ஆங்காங்கு தொடங்கிவிட்டது. மதுக்கடையை மூட வேண்டும் என்ற கோரிக்கைக்கு மிகச்சிறந்த காந்தியவாதியான சசிபெருமாள் தன்னுடைய உயிரையே விலையாகத் தந்திருக்கிறார். அவருடைய குடும்பத்தினர் போராட்டம் நடத்தத் தொடங்கி விட்டார்கள்.

தி.மு.க. ஆட்சிக்கு வந்தால், தமிழகத்தில் மதுவிலக்கை நடை முறைப் படுத்த நடவடிக்கை மேற்கொள்ளும் என்று நான் அறிவித்திருந்த போதிலும், தற்போது தமிழகத்தில் எழுந்துள்ள நிலைமை மாற்று யோசனை எதற்கும் இடம் கொடுக்காமல் உடனடியாகவே மதுவிலக்கை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதற்கு பேராதரவாகவே உள்ளது.

எனவே சசிபெருமாள் போன்று மேலும் பலரது உயிர்களைக் காவு கொடுக்காமல் காப்பாற்ற அ.தி.மு.க. அரசு இனியும் தாமதிக்காமல், மதுவிலக்கை உடனடியாக தமிழகத்தில் கொண்டு வருவதற்கான அறிவிப்பைச் செய்ய வேண்டும் என்று தி.மு.க. சார்பில் வலியுறுத்துகிறேன். இவ்வாறு கருணாநிதி கூறியுள்ளார். (ஐ)

## புருண்டியில் இராணுவத் தளபதி சாவு

புஜும்புரா,ஓக.4

புருண்டியின் முக்கிய இராணுவத் தளபதிகளில் ஒருவரான அடோல்ப் இன்ஷிமிரிமனா கொல்லப்பட்டுள்ளார் என அந்த நாட்டின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் புஜும்புராவில் அவரது கார் மீது நடத்தப்பட்ட ராக்கெட் தாக்குதலில் அவர் கொல்லப்பட்டுள்ளார் என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. கொல்லப்பட்ட அடோல்ப் இன்ஷிமிரிமனா, முன்னர் உளவுத்துறையின் தலைமை அதிகாரியாகச் செயற்பட்டு வந்துள்ளார். அவர் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டபோதிலும், நாட்டின் முக்கியஸ்தர்களில் ஒருவராகவே அவர் தொடர்ந்தும் இருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வெள்ளத்தில் தத்தளிக்கிறது மியன்மார்

## ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிப்பு



யங்கோன்,ஓக.4
மியன்மாரில் மழைப் பாதிப்பால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 27 ஆக உயர்ந்தது. மேலும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் பல்வேறு வகைகளிலும் பாதிக் கப்பட்டுள்ளனர். வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்தியாவின் அண்டை நாடான மியன்மாரில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருகிறது. வெள்ளப்பெருக்கால் வீடுகள், கட்டடங்கள் பலத்த சேதமடைந்துள்ளன. வாகனங்கள், குடிசை வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. பல்வேறு இடங்களில் வீதிகள், துண்டிக்கப் பட்டதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. கனமழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளது. சில இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது.
42 நகரங்களில் மக்கள் தங்களது வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்றனர். வீடுகள் சேதமடைந்தமை மட்டுமன்றி, விவசாய நிலங்களும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. சின், ராகின், சகைங், மாக்வே ஆகிய பகுதிகள் கனமழையால் பெரிதும் பாதிப்புக் குள்ளான இடங்கள் என்று மியன் மார் அரசு அறிவித்துள்ளது. கயின், மோன், பகோ ஆகிய இடங்களில் முகாம்கள் அமைக்கப்பட்டு மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உணவு, குடிதண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மருத்துவ வசதிகளும் செய்யப்பட் டுள்ளன.
ஐ.நா. சபை சார்பில் இயங்கும் அமைப்புகள், வெளிநாடுகளைச் சேர்ந்த பல்வேறு தொண்டு நிறுவனங்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்து வருகின்றன. எனினும் இன்னமும் ஏராளமானோருக்கு உதவிகள் சென்றடையவில்லை. பல்வேறு இடங்களில் மீட்புப் பணி மந்தமாக நடைபெறுவதாக மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ஐ)



## ஆபிரிக்க இளைஞர்கள் ஒபாமாவுக்குப் பதிலடி

வொஷிங்டன்,ஓக.4
ஆபிரிக்க நாடான கென்யாவுக்குச் சுற்றுப்பயணம் சென்று உரை நிகழ்த்திய அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவிடம் கென்யா மற்றும் எதியோப்பிய இளைஞர்கள் சூடான கேள்விகள் எழுப்பி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளனர்.
ஜனாதிபதி ஒபாமாவின் தந்தை பிறந்த நாடான கென்யாவுக்கு ஒபாமா சில தினங்களுக்கு முன்னர் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பொதுமக்களைச் சந்தித்து உரை நிகழ்த்தியுள்ளார்.
ஒபாமாவின் உரையில், ஆபிரிக்க மக்கள் மீது தனக்குள்ள அன்பு மற்றும் மனித உரிமைகளைப் பற்றி ஒபாமா உணர்ச்சிபூர்வமாக பேசியுள்ளார்.
கென்யாவில் உள்ள நைரோபியில் நடந்த அந்த நிகழ்வுக்குப் பின்னர், ஒபாமாவின் உரை அந்த நாட்டு மக்களிடையே எந்தவித தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.
அதன்போது பாடசாலை, தேவாலயம் எனகாணும் இடங்களில் எல்லாம் கறுப்பின மக்களாகிய எங்களது சகோதர, சகோதரிகளைச் சுட்டுக் கொல்லும் அந்த வன்முறையை தீர்த்த பின்னர், ஆபிரிக்க நாடுகள் மீது அமெரிக்கா கவனம் செலுத்தட்டும் என இளைஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ஐ)

## ஜேர்மனியில் குடியேற்ற விரும்புவோர் அதிகரிப்பு

பெர்லின்,ஓக.4
ஜேர்மனி வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் குடியேற்ற அனுமதி கோருபவர்களின் எண்ணிக்கை முதன்முதலாக பெரிய அளவில் உயர்ந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
ஜேர்மனியின் அகதிகள் புலம் பெயர்வு அமைச்சகத்தின் தலைவர் கடந்த வெள்ளிக்கிழமை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.
அதில், ஜேர்மனியில் குடியேற்ற அனுமதி கோரி கடந்த ஜூலை மாதத்தில் விண்ணப்பித்துள்ளவர்களின் எண்ணிக்கை மட்டும் 79 ஆயிரமாக உயர்ந்துள்ளது எனத் தெரிவித்துள்ளார்.
ஜேர்மனியின் வரலாற்றிலேயே முதன் முறையாக ஒரே மாதத்தில் அதிக அளவில் விண்ணப்பங்கள் கிடைத்திருப்பது இதுவே முதல் முறையாகும். அதுமட்டுமல்லாமல், 2015 ஆம் ஆண்டின் இறுதிக்குள் ஜேர்மனியில் குடியேற விண்ணப்பம் செய்துள்ள வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை 4 லட்சத்து 50 ஆயிரமாக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.
அதிகரிக்கும் இந்த எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் விதமாக, தென்கிழக்கு ஐரோப்பாவில் இருந்து பெறப்படும் விண்ணப்பங்களைத் திருப்பி அனுப்புவதில் கவனம் செலுத்தப்படும் என்றும், அந்தப் பணி இன்னமும் 8 வாரங்களுக்குள் முடிந்துவிடும் எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.
சர்வதேச அளவில் இருந்து விண்ணப்பங்கள் பெற்றிருந்தாலும் கூட, அல்பேனியா நாட்டு குடிமக்களுக்கு முதல் உரிமை அளிக்கப்படவுள்ளதாகவும், இதுவரை அந்த நாட்டைச் சேர்ந்த சுமார் 30 ஆயிரம் நபர்கள் விண்ணப்பம் செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தற்போதுவரை கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களில் சுமார் 2 லட்சத்து 9 ஆயிரம் விண்ணப்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. (ஐ)

## ரியூனியன் தீவில் கிடைத்த பாகம் மாயமான மலேசியா விமானத்தினதே

### மலேசிய அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்

கோலாலம்பூர்,ஓக.4
ரியூனியன் தீவுகளில் கிடைத்த பாகம் 239 பயணிகளுடன் மாயமான எம்.எச்.370 போயிங் 777 விமானத்துடையதே என்று மலேசிய அதிகாரிகள் உறுதியாகத் தெரிவித்துள்ளனர். மலேசியாவிலிருந்து பீஜிங் நோக்கி, கடந்த 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சென்ற மலேசிய விமானம் எம்.எச்.370 ராடரிலிருந்து திடீரென மறைந்தது.
அதனைத் தேடும் பணிகள் 16 மாத காலங்களாக நீடித்து வந்த நிலையில், அது இந்தியப் பெருங்கடலில் விழுந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது. கடந்த வாரம் ரியூனியன் தீவின் கரையில் விமான பாகம், இறக்கை ஆகியவை ஒதுங்கின. இதைய டுத்து அந்தப் பாகங்கள் காணாமற் போன மலேசிய விமானத்தினுடையது என்று பிரான்ஸில் பரிசோதனை நடத்தப்பட்டது.
அந்தப் பரிசோதனையில், அது போயிங் 777 எம்.எச்.370 விமானத்தினுடையது என்று உறுதியான தகவல்கள் வெளியாகியுள்ளன. இது குறித்து மலேசிய போக்குவரத்து துறை அமைச்சர் லியோவ் தியாங் வெளியிட்ட அறிக்கையில்; கண்டெடுக் கப்பட்ட இறக்கை போயிங் 777 விமானத்தினுடையது என்பது அதிகாரபூர்வமாக உறுதியாகியுள்ளது. பிரான்ஸில் செய்யப்பட்ட சோதனையில், போயிங் விமானத் தயாரிப்பாளர்கள் மற்றும் மலேசிய எயர்லைன்ஸ் சிவில் ஏவியேஷன் துறையினரும் இதனை உறுதி செய்தனர் என்று குறிப்பிட்டுள்ளார்.



இதன் மூலம் 16 மாதகாலம் உலகை உலுக்கிய அந்த துயரச் சம்பவத்தின் புதிர் முடிச்சு அவிழ்ந்துள்ளது என்று மலேசியா தெரிவித்துள்ளது. (ஐ)

## ரியூனியன் தீவில் உலோகத் துண்டு மீட்பு

புதுடில்லி,ஓக.4
இந்தியப் பெருங்கடலில் உள்ள ரியூனியன் தீவுகளில் மேலும் ஒரு உலோகத் துண்டு கரை யொதுங்கியுள்ளது.
காணாமற்போன மலேசியன் எயார் லைன்ஸ் விமானத்தினது என நம்பப்படும் விமான இறக்கை ஒன்றின் பாகம் கரையொதுங்கிய அதே கடற்கரையில் இந்தத் துண்டும் கரையொதுங்கியுள்ளது. ஆனாலும் இந்தத் துண்டை தடயமாகக் கருதிக் கையாளவில்லை என அதிகாரிகள் கூறுகின்றனர்.
தற்போது கிடைத்துள்ள துண்டில் சீன எழுத்துகளும் திசை காட்டும் குறிப்புகள் என்று கருதப்படக்கூடிய சில குறிப்புகளும் உள்ளன. (ஐ)

■ வந்தியத்தேவர்

## வேலணையில் சிறப்பாக இடம்பெற்ற

# ஆடிப் பிறப்பு பண்பாட்டு விழா

சூரிய பகவானின் ஓட்டத்திற்கமைய உத்தராயணம் தட்சணா யனம் என ஒரு வருடம் வகுக்கப்பட்டு ஆடி மாதத்தில் தட்சணாயன காலம் தொடங்குகின்றது. இந்த நாளை புனித மிக்க நாளாகக் கொண்டு தமிழ் மக்கள் அதனைக் கொண்டாடுகிறார்கள். எமது பண்பாட்டு விழுமியங்களைப் பேணும் வகையில் வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு திட்டமிட்ட முறையில் செயற்பட்டு வருகின்றது. என்னதான் விஞ்ஞானம், கணினி யுகம் எனக் கூறிக் கொண்டாலும் எமது கலாசாரப் பண்பாடுகளின் மூலமே மக்கள் துன்பங்களிலிருந்து விலகி ஒரு நிறைவான மன நிம்மதியைப் பெற முடியும். எங்களது நடவடிக்கைகளில் ஏற்பட்ட மாறுதல்களால் இன்று பலதரப்பட்ட சமூகச் சீரழிவுகளுக்கு இளம் தலைமுறையினர் உள்ளீர்க்கப்படுகின்றார்கள். மது மற்றும் போதைப் பொருள்கள் பாவனையால் வழி தவறிக்கொண்டிருக்கிறார்கள். இங்கே காண்பிக்கப்பட்ட குறும் படம் மதுப் பயன்பாட்டினால் ஏற்படக்கூடிய இடர்பாடுகளைத் தெளிவுபடுத்தக் கூடிய வகையில் இந்தப் பிரதேச மக்களுக்கு மட்டுமன்றி ஏனையோருக்கும் காண்பிக்கப் பட வேண்டும். மிகவும் பின் தங்கிய ஒரு கிராமத்தில் இது போன்ற ஒரு குறும் படத்தைச் சிறப்பாகத் தயாரித்து வெளியிட முன்வந்த பிரதேச செயலருக்கும், பிரதேச கலாசார பேரவை மற்றும் குறும் படத்தில் பங்கு கொண்டவர்களுக்கும் எனது பாராட்டுக்கள் என கூறி மற்றும் பிரதேச

செயலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் தனது நன்றியை யும் மகிழ்ச்சியையும் மனப்பூர்வமாக வழங்கினார் பிரதம விருந்தின ராகக் கலந்து கொண்ட யாழ் மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனன். முன்னதாக அவர் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

ஆடி உழவு தேடி உழு என்பது தத்து வார்த்தம் நிறைந்த வார்த்தை. தற்போது மழைகாலம் ஆரம்பமாக இருப்பதனால் விவசாயிகள் தமது நடவடிக்கைகளை முன்னெடுக்க உகந்த மாதமாகக் கொள்ளப்படுகின்றது. எமது பண்பாட்டுக்கமைய தமிழ் மக்கள் ஆடி முதல் நாளை, ஆடிப்பிறப்பாகக் கொண்டாடி எமது பாரம்பரிய உணவுப் பழக்கங்களை எமது தலைமுறையினர் தொடரக் கூடியதாகக் கைக்கொண்டு வந்துள்ளனர்.

தீவக மக்கள் ஒரு காலத்தில் நல்ல முறையில் இந்த விழாவைக் கொண்டாடி வந்துள்ளனர். இன்று மக்கள்



தொகையும் குறைந்து கலாசாரப் பண்பாடுகளுள் பேணப்படுவதும் அருகி வருவதே சீரழிவுகளுக்கும் அவலங்களுக்கும் காரணமாகிறது. நாங்கள் எமது பாரம்பரியங்களை பேணுவதன் மூலம் ஒரு சிறந்த சமூகத்தைக் கட்டி எழுப்பவும் அபிவிருத்திகளை முன்னெடுக்கவும் கூடியதான அர்ப்பணிப்புக்களை வழங்கவேண்டும் என வேலணைப் பிரதேச செயலரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தமது ஆழமான கருத்துக்களை முன் வைத்தார்.

வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் வேலணைப் பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய ஆடிப்பிறப்புப் பண்பாட்டு விழாவும், 'ஒரு வழிப்பாதை' குறும்பட வெளியீட்டு விழாவும் கடந்த 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேலணைப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. தமிழர் வாழ்வியலில் ஆடிப்பிறப்புப் பண்பாடு பற்றி சிறப்புரையாற்றிய எஸ்.மனோஜ்குமார் மேலும் தெரிவிக்கையில்,



எமது சமயப் பண்பாடுகள் ஒவ்வொன்றும் அர்த்த ரீதியானவை. மாவிலை, வாழை, தோரணம் கட்டுகின்றோம். அவற்றிலிருந்து வெளிப்படும் தன்மைகள் ஒவ்வொன்றும் எமது உடல் ரீதியான பாதுகாப்புக்கு உந்து சக்தியாக அமைகின்றன. எம்மைப் பூரண சுகமுள்ளவர்களாக ஆக்குகின்றன. நாங்கள் வாழையடி வாழையாக எமது பண்பாடுகளைக் கைக்கொள்ள வேண்டும் என்ற தத்துவத்தையும் மங்கலமுடையவர்களாக, உயர்வுடையவர்களாக இருக்க வேண்டும் என்பதையும் தோரணம் வெளிப்படுத்துகின்றது. சிலப்பதிகாரம் சொல்லும் தத்துவம் தமிழ் சமயப் பண்பாடுகளாகும்.

நவாலியூர் சோமசுந்தரப் புலவர் எமது வாழ்வியலோடு இணைந்து தான் ஆடிப்பிறப்புக் குறித்துப் பாடியுள்ளார்.

ஆடிப்பிறப்பினூடாக அனைவரும் கூடி மகிழ்ந்து கொள்வதுதான் தாடிப்புலவர் தந்த கவி என அழகாக எடுத்து உரைத்தார்.

கலை நிகழ்வுகளாக நந்தனார் இசை நாடகத்திலும், அரிச்சந்திர மயான காண்டத்திலும் சில காட்சிகள் தனிநபர் நடிப்பாக நடித்துக்காட்டப்பட்டதோடு, நகைச்சுவை நாடகமும் இடம்பெற்றது. ஒரு வழிப்பாதை குறும்பட இறுவட்டை திருமதி மஞ்சுளாதேவியிடம் இருந்து மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனன் பெற்றுக் கொண்டதுடன், அவர் பரிசில்களையும் சான்றிதழ் களையும் வழங்கினார். மிகவும் சிறப்பாக இடம் பெற்ற ஆடிப்பிறப்பு நிகழ்வுகளை ரசித்த அனைவரையும் ஆடிக் கூழ், கொழுக்கட்டைகளையும் ருசிக்க வைத்து பிரதேச செய லரும் கலாசார பேரவையினரும் அசத்த, கலாசார உத்தியோகத்தர்களான ராஜி தங்கலிங்கம், ஜெய தா..., கிராம அலுவலர் யோகேஸ்வரன் ஆகியோர் எல்லோரையும் வரவேற்றதுடன் நன்றியையும் தெரிவித்துக் கொண் டனர்.



## புதிய 'சுப்ரீம்' கொள்கை ஆயுள் காப்புறுதி

ஆயுள் காப்புறுதி கொள்கை ஒன்றின் போது இணங்கப்படும் முதிர்ச்சிக் கால அடிப்படை கொடுப்பனவுத் தொகை நன்மையில் எந்த விதமான குறைப்பும் செய்யாமல் அதில் ஐம்பது வீதம் வரை நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை வழங்கும் உன்னதமான புதிய காப்புறுதி திட்டம் ஒன்றை செலிங்கோ லைஃப் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. இது ஆயுள் காப்புறுதித் துறையில் புதிய ஆர்வத்தை த்தூண்டியுள்ளது.

'செலிங்கோ லைஃப் சுப்ரீம்' என அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்தப் புதிய காப்புறுதி கொள்கை பரவலான ஆயுள் காப்புறுதியை வழங்குகின்றது. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை மொத்தக் கொடுப்பனவு, முதிர்ச்சி காலத்தில் சராசரியை விட கூடுதலான பெறுமானம், கடுமையான நோய்களின் போது ஆஸ்பத்திரியில் அனுமதித்தல் அல்லது பிரதான சத்திர சிகிச்சைக்கான உதவி என தெரிவுக்குட்பட்ட காப்பீடு என்பனவற்றையும் இந்தப் புதிய திட்டம் உள்ளடக்கியுள்ளது.

இது ஏனைய ஆயுள் காப்புறுதித் திட்டங்களில் இருந்தும் வித்தியாசமானது. முதிர்ச்சியின் போது அல்லது எதிர்பாராத முன்கூட்டிய மரணத்தின் போது உறுதி செய்யப்பட்ட மொத்த தொகையில் எந்த விதமான குறைப்புக்களும் இல்லாமல் உறுதி செய்யப்பட்ட தொகை அல்லது திரண்ட நிதி மீதி இதில் எது கூடியதோ அதற்கான கொடுப்பனவுக்கு இது உறுதி அளிக்கின்றது.

'இந்த உன்னதமான கொள்கை மூலம் ஆயுள் காப்புறுதி சற்றுதிகில் மிக்கதாக மாறியுள்ளது' என்று கூறினார் செலிங்கோ லைஃப் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஆர்.ரெங்கநாதன். 'உறுதி செய்யப்பட்ட மொத்தத் தொகையில் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை பத்து முதல் இருபது வீதம் வரை வழங்கப்படுவதன் மூலம் காப்புறுதியாளர் நாட்டில் காப்புறுதி பிரிவில் தலைமை தாங்கும் நிறுவனத்திடம் இருந்து பாதுகாப்பை பெற்றுக் கொள்ளும் அதேவேளை, கணிசமானதோர் தொகையை சம்பாதிக்கவும் முடிகின்றது' என்றார்

எனவே 'செலிங்கோ லைஃப் சுப்ரீம்' என்பது ஒரு காப்புறுதி திட்டம் மட்டுமன்றி, ஒரு முதலீட்டுத் திட்டமாகவும் உள்ளது. இது பாதுகாப்பை வழங்குவதோடு மட்டும் அன்றி ஒருவரின் அபிலாஷைகளை யதார்த்தமாக்கும் நிலையையும் வழங்குகின்றது' என்று அவர் மேலும் கூறினார்.

12 ஆண்டுகளுக்கான இந்த செலிங்கோ லைஃப் சுப்ரீம் கொள்கை உறுதி செய்யப்பட்ட தொகையில் 20 வீதத்தை நான்காம் மற்றும் எட்டாம் ஆண்டுகளில் வழங்குகின்றது. 12வது வருட இறுதியில் முதிர்ச்சிக் காலத் தொகையை முற்றாக வழங்குகின்றது. 16 வருடங்களுக்கான ஒரு கொள்கையில் உறுதி செய்யப்பட்ட தொகையின் 15 வீதத்துக்கு சமனான தொகையை நான்காம், எட்டாம், 12ஆம் ஆண்டுகளில் வழங்குகின்றது. முதிர்ச்சிக் கால கொடுப்பனவும் புறம்பாக வழங்கப்படும். 20 வருடங்களுக்கான ஒரு காப்புறுதி கொள்கைக்கு முதல் 16 வருடங்களுக்கு ஒவ்வொரு நான்காண்டிலும் 12 வீத கொடுப்பனவு வழங்கப்படும்.

இந்த அடிப்படையில் 30 வயதான ஒருவர் அடிப்படை காப்பீட்டுத் தொகையான ஐந்து லட்சம் ருபாவை 30 ஆண்டுகளுக்கான ஒரு காப்பீடாகப் பெற்றுக் கொள்கின்ற போது ஒவ்வொரு நான்காண்டிலும் 60ஆயிரம் ரூபா வீதம் மொத்தம் 240000 ரூபாவை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது. இது அவர் காப்பீடாகப் பெற்றுக் கொள்ளும் தொகை அல்லது திரண்ட நிதிக்கு மேலதிகமான தொகையாகும். இந்தத் தொகையானது, வருடாந்த பங்குலாப தொகையாகக் கிடைக்கும் ஏழு வீதத்தோடு சேர்த்து சுமார் 950000 ருபா வரையில் செல்லக் கூடியது. இதேபோல் 24 வருட கொள்கைக்கு நான்காம் மற்றும் 12ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பத்து வீதம் கொண்ட ஐந்து கட்டக் கொடுப்பனவு வழங்கப்படும். காப்புறுதி கால முடிவில் மொத்த முதிர்ச்சித் தொகையும் வழங்கப்படும். (த)

## இனியாவது சிந்திப்பார்களா இளைஞர்கள்?

**யாழ்.** நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீது தாக்குதல் நடத்தியவர்களில் ஒரு தொகுதியினர் தொடர்ந்தும் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இறுதியாக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவர்களின் உறவினர்கள் ஏக்கத்துடனும், அங்கலாய்ப்புடனும் அங்கு கூடி நின்ற காட்சி வேதனை தருவதாக இருந்தது.

தடுத்து வைக்கப்பட்டவர்கள் இளைஞர்கள் என்பதால் அவர்களது எதிர்காலம் குறித்த கவலைகளும் எழுந்துள்ளன. விளைவுகள் தொடர்பாகச் சிந்திக்காது இந்த இளைஞர்கள் செயற்பட்டதன் பயனைத் தற்போது அனுபவித்து வருகின்றனர்.

ஒரு நாட்டில் மிகவும் உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றப்படுவது நீதித்துறையாகும். நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் பேணுவதில் அதன் பங்களிப்பு அளப்பரியது. இலங்கையில் ஜனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரங்கள் வழங்கப்பட்டதால் நீதித்துறையின் கௌரவம் சற்று மங்கியிருந்தமை என்னவோ உண்மைதான்.

என்னதான் இருந்தபோதிலும் நீதித்துறை தலை நிமிர்ந்துதான் நிற்கின்றது. நீதியை மக்களுக்கு வழங்குகின்ற உன்னத இடங்களாக நீதிமன்றங்கள் விளங்குகின்றன. மக்கள் தமது குறைகளுக்கு நீதி கேட்டு நீதிமன்றங்களையே நாடுகின்றனர்.

இந்த நிலையில் எந்தவிதமான காரணமுமின்றி யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீது மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதல் சம்பவத்தை எவருமே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இந்தத் தாக்குதலின் பின்னணியில் எவர் இருந்தாலும் தாக்குதலில் ஈடுபட்ட இளைஞர்கள் இதனால் ஏற்படப் போகின்ற சாதக, பாதகங்களை ஒரு கணம் சிந்தித்துப் பார்த்திருக்க வேண்டும். இதேவேளை யாழ். மேல்நீதிமன்ற நீதிபதியாகப் பொறுப்பேற்றுக்கொண்ட இளஞ்செழியன் அவர்கள் மேற்கொண்ட கடுமையான நடவடிக்கைகள் காரணமாக யாழ் .குடாநாட்டில் குற்றச் செயல்களின் வீதம் குறைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. யாழ்ப்பாணத்தின் பெருமைக்கு வேட்டு வைக்கும் விதமாக இங்கு வாள்வெட்டுக் கலாசாரமும், போதைப் பொருள்களின் பாவனையும், இளைஞர்களின் அடாவடித்தனங்களும் அதிகரித்துக் காணப்பட்டன. இவை காரணமாக இங்கு வசிக்கின்ற மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. எந்த வேளையிலும் எதுவும் நடக்கலாம் என்ற அச்ச நிலைதான் இங்கு காணப்பட்டது. நியாயத்தைத் தட்டிக் கேட்பதற்குக் கூட மக்கள் அஞ்சி நடுங்கினர். இதற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போன்று புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலைச் சம்பவம் இடம்பெற்று முடிந்தது. இந்தச் சம்பவத்தை முழு நாடுமே கண்டித்தது. பல்வேறு இடங்களிலும் ஆர்ப்பாட்டங்களும், கண்டனப்பேரணிகளும் இடம்பெற்றன. இன, மொழி, மத பேதங்களைக் கடந்து அனைத்து மக்களும் இந்தக் கொடிய சம்பவத்தைக் கண்டித்தனர்.

இந்த நிலையில்தான் யாழ். குடாநாட்டில் வித்தியாவின் கொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஹர்த்தால் போராட்டம் இடம்பெற்றது. இதில் அனைத்து மக்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். இளைஞர்கள், முழு உத்வேகத்துடன் ஹர்த்தால் வெற்றி பெறுவதற்கு உழைத்தனர். .ஆனால் சில எல்லை மீறிப்போன காரியங்கள் சிக்கலை ஏற்படுத்தி விட்டன. காப்பெற் வீதிகளில் ரயர்களைப் போட்டுக் கொளுத்தியதையும், நீதிமன்றத்தின் மீதான தாக்குதலையும் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

உணர்ச்சி வசப்படுவது மனித இயற்கைதான் என்றாலும் எதிர்காலத் தலைவர்களான இளைஞர்கள் சிந்தித்து செயற்பட்டிருந்தால் இன்று சிறைச்சாலையில் வாடுகின்ற அவலத்திலிருந்து விடுபட்டிருக்க முடியும். இளைஞர்கள் இனியாவது சிந்தித்துச் செயற்பட்டால் அவர்களது எதிர்காலம் வளமாக அமையும்.

*மா.திருமாவளவன், காரைநகர்*

## கழிவுகள் போடுவதால் அசௌகரியம்


நல்லூர்ப் பிரதேச சபையின் கீழ்வரும் கருவேப்புலம் வீதியில் குப்பைகள் மற்றும் கழிவுகள் போடப்படுவதால் பலரும் அசௌகரியங்களுக்கு ஆளாகி வருகிறார்கள். மேற்படி இடத்தில் குப்பைகள், பழைய உரப்பைகள், கழிவு உணவுப்பொருள்கள், பழுதடைந்த சூட்கேஸ் பெட்டிகள், கடதாசிப் பொருள்கள், தேசிமரக் கொப்புகள், வீட்டில் வெட்டிய புற்கள், வாழைமரக் கழிவுகள், தென்னோலை, திருமண வைபவங்களில் மிஞ்சும் உணவுகள், குழந்தைப்பிள்ளைகளின் கழிவு, மாதவிடாயின் போது பெண்கள் அணிபவை, உணவகங்களில் வீசப்படும் மிகுதி உணவுகளுடனான பொலித்தீன் உட்பட, வெற்றுத் தகரங்கள், வெற்றுப் போத்தல்கள், பழைய செருப்புகள், பாவனைக்கு உதவாத வீட்டுப் பாவனைப் பொருள்கள், என்பன தாறுமாறாக வீசப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. பழைய பொருள்களைச் சேகரிக்க வருபவர்களும் அங்குள்ளவற்றைக் கிண்டிக் கிளறித் தமக்குத் தேவையானவற்றைச் சேகரித்த பின்னர் ஏனையவற்றை வீசிவிட்டுச் செல்கின்றனர். இதனால் அந்த இடம் ஒரே குப்பையும், கழிவுப் பொருள்களும் நிறைந்தாகவும் மாறிவிட்டது. மேலும் அந்த வீதி முழுவதுமே இவை சிதறுண்ட நிலையில் காணப்படுகின்றன. இதனால் இந்த வீதியைப் பயன்படுத்துபவர்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் முன்னால் அமைந்துள்ளது. இந்தச் கூற்றாடலில் மாணவர்கள் அதிகமான வீடுகளில் தங்கியுள்ளனர். இந்த வீதியில் கழிவுப்பொருள்கள் போடப்படுவ தால்




நாய்களின் தொல்லை அதிகம். தொற்றுநோய் பரவும் வாய்ப்பும் உண்டு. போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் உள்ளோம். இந்த விடயம் சம்பந்தமாக பல தடவைகள் பிரதேச சபைக்கு அறிவித்தும் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. தற்பொழுது பிரதேச சபை கலைக்கப்பட்டு உள்ள படியால் அதிகாரிகள் நட வடிக்கை எடுப்பார்கள் என நம்புகிறோம். ***கொக்குவில் வாசி***

### கேலிச் சித்திரம்




நன்றி: மவபிம

# அதிகரிக்கும் வன்முறைகள்

நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னமும் சரியாக இரு வாரங்களே உள்ள நிலையில், தேர்தல் வன்முறைகளில் தீவிரமும் அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளதைக் காண முடிகின்றது. எந்தவழி யிலேனும் தேர்தலில் வென்றாக வேண்டும் என்ற பதவியை மையமாகக் கொண்ட ஆசையே இந்த வன்முறைகளுக்குக் காரணமாக அமைகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை தலைநகர் கொழும்பின் சன நெருக்கம் மிகுந்த கொட்டாஞ்சேனைப் பகுதியில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டிருந்தவர்கள் துப்பாக்கித் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கின்றனர். இந்தத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 13 பேர் காயமுற்றிருக்கின்றனர். பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் ஆதரவாளர்களான மக்கள் சிக்கிக்கொண்டிருக்கின்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. தமது தேர்தல் பரப்புரை வேலைகளுக்காக பாதாள உலகக் குழுவினரின் உதவியை நாடும் அரசியல்வாதிகளின் வங்குரோத்து நிலை கவலையளிக்கவைப்பதுடன் கடும் கண்டனத்திற்குரியதாகவும் அமைகின்றது. இவ்வாறான அரசியல்வாதிகளை மக்கள் இனங்கண்டு தமது வாக்குகளூடாக தக்க பாடம் புகட்ட வேண்டும்.

இதேவேளை- தேர்தல் விதிமுறைகளை மீறும் நடவடிக்கைகள் கடந்த வாரம் பல மடங்காக அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து, மேலும் வன்முறை கள் இடம் பெறலாம் என தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் எச்சரித்துள்ளன.

தேர்தல் வன்முறைகள் தொடர்பாக 301 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள பொலிஸார் இவர்களில் 151 பேர் இந்த வாரமே கைது செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர். கடந்த நான்கு நாள்களில் தேர்தல் வன்முறைகள் தொடர்பான பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'கபே' தெரிவித்துள்ளது. இதில் கொழும்பிலேயே அதிகளவு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன 767 முறைப்பாடுகளில் 131 முறைப்பாடுகள் கொழும்பிலிருந்தே கிடைத்துள்ளன என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

எனினும், தற்போதைய நிலை கட்டுப்படுத்த முடியாத அளவுக்குத் தீவிரமடையும் எனத் தாங்கள் கருதவில்லை என அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார். நிலைமையை சமாளிப்பதற்கு சட்ட ஒழுங்குக்குப் பொறுப்பான அதிகாரிகள் தயாராக உள்ளனர் எனக் கருதுகின்றோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சனிக்கிழமை வரை 804 சம்பவங்கள் இடம்பெற் றுள்ளதாக 'கபே' தெரிவித்துள்ளது. இதில் 750 சம்பவங்கள் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பானவை. ஏனையவை தேர்தல் வன்முறைகள் தொடர்பான கொழும்பு, குருநாகல், கம்பஹா, அம்பாறை, புத்தளம் ஆகிய இடங்களிலேயே தீவிர வன்முறைகள் இடம்பெற்றுள்ளதாக கபே குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை- கொழும்பு மற்றும் குருநாகல் பகுதிகளிலேயே அதிகளவான வன்முறைகள் இடம் பெற்றுள்ளதாக மற்றுமொரு தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் தெரிவித்துள்ளது. கொழும்பில் 72 சம்பவங்களும், குருநாகலில் 57 சம்பவங்களும் இடம் பெற்றுள்ளதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள் ளது. தேர்தல் வன்முறைகள் காரணமாக இதுவரை 28 பேர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாங்கள் விரும்பும் கட்சிக்கும் வேட்பாளருக்கும் ஆதரவளிப்பதற்கான உரிமை மக்கள் ஒவ்வொருவருக்கும் உள்ளது. ஆனால், தேவைக்கு மாத்திரம் மக்களைப் பயன் படுத்திவிட்டு தேர்தல் முடிந்ததும் கண்டு கொள்ளாமல் விட்டுவிடும் அரசியல்வாதிகளை பெரும்பான்மையாகக் கொண்ட எமது நாட்டில், மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவேண்டியது அவசியமாகும். தமது சொந்தக் குடும்பத்துக்குப் பின்னரே அனைத்துவிடயங்களும் என்பதை ஒரு போதும் மறந்துவிடக்கூடாது. தேர்தல் வன்முறைகளில் நீங்கள் பாதிக்கப்படுமிடத்து அதனையும் தமது வாக்கு வங்கியை அதிகரிக்கப் பயன்படுத்தும் அரசியல்வாதிகள் நிறைந்த இந்நாட்டில் எதிலுமே ஓர் எச்சரிக்கையுடன் கூடிய செயற்பாட்டை மக்கள் முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.

பத்தி எழுத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அமைதி காத்து பொறுப்புடன் தேர்தலை எதிர்கொள்வோம்

இது சிந்திக்க வைக்கிறது. அரசியலில் எதிர்ப்புகளும் எதிர்க் கோஷங்களும் ஆர்ப்பாட்ட போராட்டங்களும் இடம்பெறுவது வழமைதான். ஆனால் ஒருவர் நடத்தும் கூட்டத்தில் இன்னொரு சாரார் புகுந்து குழப்பம் விளைவிப்பதும் அடாவடிகளில் இறங்குவதும் நாகரிகம் ஆகாது. அது ஜனநாயகம் என்று சொல்லப்படும் உன்னதமான கோட்பாட்டுக்கு உகந்ததும் இல்லை.

மேற்கு நாடுகளிலும் தேர்தல்கள் நடைபெறுகின்றன. அங்கெல்லாம் கொள்கைக்கு கொள்கை, கோட்பாடுகளுக்கு கோட்பாடு என்ற முறையில் மோதல்கள்-முரண்பாடுகள் இடம்பெறுவதே மேலோங்கி நிற்கிறது. எதிர்தரப்பு அலுவலகங்களை அடித்து நொறுக்குவது, தீயிட்டுக் கொளுத்துவது, துப்பாக்கிப்பிரயோகம் செய்து அப்பாவி மக்களைக் கொலை செய்வது போன்ற செய்திகள் வெளிவருவது மிகமிக அரிது.

ஆனால் எமது நாட்டில், புளுமெண்டால் சம்பவத்தில் ஒரு பெண் உட்பட அப்பாவிகள் இருவர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பலர் படுகாயமடைந்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறார்கள்.

சம்பவத்தையடுத்து உடனடியாகவே கருத்து வெளியிட்டிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரமுகர் ஒருவர் இரு பாதாளக்குழுக்களுக்கிடையிலான பலப்பரீட்சையே அது என்று குறிப்பிட்டிருந்ததுடன், அந்தச் சம்பவத்தில் அரசியல் தொடர்பு கிடையாது என்பதாக கூறியிருந்தார்.

தேர்தல் களம் நாம் எதிர்பார்த்ததைவிட படுசூடான ஒரு கட்டத்துக்கு தள்ளப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஆங்காங்கே சிறுசிறு அசம்பாவிதங்கள் இடம் பெறுவது ஒருபுறம். மறுபுறம் அமைதியாக தேர்தல் நடந்து முடிவதற்கான அறிகுறிகள் குறைந்து வருகின்றனவோ என்ற சந்தேகமே ஏற்படுவதாக உள்ளது.

கொட்டாஞ்சேனையில் புளுமெண்டால் பகுதியில் ஐ.தே.கவின் வேட்பாளரான நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு ஆதரவாக நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் இனந்தெரியாதவர்கள் நடத்தியுள்ள துப்பாக்கிப்பிரயோகம் பாதுகாப்புத் துறையினரையும் தேர்தல் ஆணையாளர் திணைக்களத்தையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது.

கல்வி அறிவு குறைந்த, இலகுவில் சமய, சாதி, இன மற்றும் மொழி ரீதியான உணர்ச்சிகளுக்கு வசப்படகூடியவர்களான மக்கள் அதிகமாக வாழுகின்ற கிராமப் பகுதிகளில் இது நடந்திருப்பின் அதனைப் புரிந்து கொள்ளலாம். ஆனால் கல்வி அறிவு மிகுந்த நாகரிகம் செறிந்த ஒரு நகரப் பகுதியில், அதுவும் இந்த நாட்டின் தலை நகரத்தில் இந்தச் சம்பவம் நடந்திருப்பது கவலையளிப்பது ஒரு புறமிருக்க, கொழும்பு அரசியல் நாகரிகம் எந்த அளவுக்கு கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்பதையும் வெளிப்படுத்தி உள்ளது. சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்ட நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, மஹிந்த ராஜபக்ஷ காலத்து வெள்ளை வான் கலாசாரத்தின் ஓர் அம்சமே இது என்று குறிப்பிட்டதுடன் மஹிந்த தரப்பினரே இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்றும் குற்றஞ்சாட்டினார்.

இவ்வாறான குற்றச் சம்பவங்கள் நிச்சயமாக திரைமறைவில் திட்டமிடப்பட்டே அரங்கேற்றப்படுகின்றன. இவை ஒன்றில் சம்பந்தப்பட்ட அரசியல் வாதிகளைக் குறிவைத்து அல்லது அச்சுறுத்துவதற்காக நடத்தப்படுவதாக இருக்கும், இல்லையெனில் பரப்புரைக் கூட்டங்களில் பெருவாரியாகக் கலந்து கொள்ளும் பொதுமக்களை அச்சுறுத்துவதற்காகச் செய்யப்படுவதாய் இருக்கலாம். பாதாள குழுக்கள் மோதிக் கொள்வதாய் இருப்பின் தேர்தல் கூட்டத்தில் அவ்வாறு செயற்பட வேண்டும் என்பதில்லை.

எனவே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறும் போது குறிப்பாக தேர்தல் பரப்புரைகள் நடைபெறும் காலத்தில் அவசரப்பட்டு தலைவர்கள் தத்தமது கோபதாபங்களை வெளியிடுவதானது வெறும் தேர் தல் உள்நோக்கத்தை காட்டுவதாக அமைந்து விடும்.

சம்பவத்துக்கான காரணங்களைக் கண்டுபிடிப்பதும் சூத்திரதாரிகளை குற்றச் கூண்டில் நிறுத்துவதும் சட்டத்தை செயற்படுத்தும் அதிகாரிகளின் பொறுப்பு என்றாலும் கடந்த காலத்தில் நடந்துள்ள சம்பவங்கள் மற்றும் அவைகளுக்குப் பின்புலனாக இருந்தவர்கள் பற்றியெல்லாம் மக்கள் மத்தியில் பலமான அபிப்பிராயங்கள் உண்டு. எனவே பரப்புரைக் காலத்தில் இனந்தெரியாதவர்கள் நடத்தும் இம்மாதிரியான குரூர சம்பவங்களுக்கு எதிர்தரப்பினர் மீது சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாத ஒன்றே.

தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் சில தினங்களே, குறிப்பாகச் சொல்வதானால் 13 நாள்களே பாக்கியுள்ளன. எனவே எப்போதையும்விட அசம்பாவிதங்கள் குறைந்த வகையில் தேர்தலை தேர்தல் ஆணையாளர் வெற்றிகரமாக நடத்திமுடிக்கவும், பொதுமக்கள் அமைதியாகத் தமது ஜனநாயகக் கடமைகளை உணர்ந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு அச்சமின்றி சென்று வாக்களிக்கவும், உகந்த சூழ்நிலை களை தோற்றுவிக்க வேண்டும். அது அதிகாரிகளுக்கு மட்டுமல்ல தேர்தலில் போட்டியிடும் கட்சிகளுக்கு மான உள்ள முக்கிய பொறுப்பு.

# ஒற்றையாட்சி முறையே தமிழினத்துக்கு சாபக்கேடு

மு.ஈழத்தமிழ்மணி

தமிழ்த் தேசிய மக்களில் பெரும்பான்மையோரின் அங்கீகாரம் பெற்ற கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகும். இது சுருக்கமாக ரீ.என்.ஏ. என்ற அடைமொழியுடன்தமிழ்மக்களால் அழைக்கப்படுவதையும் காணலாம். தமிழர் ஒரு தேசிய இனம் என்பதை தமிழ்த் தேசியம் உயிர்த்துடிப்புள்ள சொற்களினால் ஒவ்வொரு தமிழ் மக்கள் மத்தியில் வெளிப்படுத்தி நிற்கின்றது. தேசிய இனம் என்ற கருத்தை பெரும்பான்மையினக் கட்சிகள் தங்களது சொல்லாடல்களில் நாட்டுப் பிரிவினையாகவும், தனிநாட்டுக்கு அர்த்தம் கொடுக்கின்ற சொற்றொடராகவும் பார்க்கின்றனர். அதே போன்று சிங்கள தேசிய இனம் தமிழ்த் தேசிய இனத்தை பல ஆண்டுகளுக்கு முன்பே அடையாளம் கண்டு கொண்டது. தமிழ்த் தேசியத்தை ஏற்றுக்கொண்டது.

மகாவம்சம் நூலைத் துருவித் துருவிப் படிக்கின்றவர்களுக்கு பெரிய தொரு உண்மை வெளிப்படும். சிங்களத் தேசிய இனம், விஜயன் வழிமூலம் தோன்றியது. தமிழ்த் தேசிய இனம் விஜயனின் மனைவியான தமிழ் வளர்த்த பாண்டி நாட்டின் ராணி வழி மூலம் வந்தது. ஆகவே தாய் வழி வந்தது தமிழ்த் தேசிய இனம். தந்தை வழி வந்தது சிங்களத் தேசிய இனம். மகாவம்சத்தின் 59, 60 ஆவது பக்கங்களை வாசித்தால் இந்த உண்மைகள் புலப்படும். மகாவம்ச காலத்திலேயே சிங்களத் தேசிய இனம் தமிழ்த் தேசிய இனத்தை ஏற்றுக் கொண்டது. பல நூற்றாண்டு களின் பின் அன்று சிங்களத் தேசிய இனத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமையை மீண்டும் நிலை நாட்டுவதே இன்றைய தேவையாகும்.

தமிழ்த் தேசியத்தையும் சமஷ்டிக் கோரிக்கையையும் உறுதியாகக் கையிலெடுத்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2015ஓகஸ்ட் 17ஆம் திகதி நடைபெறுகின்ற பொதுத்தேர்தலில் இதனை நிலைநிறுத்த வேண்டும். சுயநிர்ணய உரிமையுடன் கூடிய வடக்கு – கிழக்கு தாயகம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இலங்கையில் நீண்ட காலமாக நிலைத்திருக்கின்ற இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இந்தத் தீர்வுத்திட்டமே உகந்த வழியென 2009 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களால் யோசனையும் முன்வைக்கப்பட்டது என்பதை இங்கு சொல்லியாக வேண்டும்.

பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் முன்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் வைக்கப்பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டித் தீர்வுதான் தமிழினத்தின் பிரச்சினைகள் தீர்வதற்கு ஒரேவழி என உரத்துக் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் சமஷ்டி அரசமைப்பு தான் சிறந்தது என முதல் குரல் கொடுத்தவர் முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகாவின் தந்தையும், சுதந்திரக்கட்சியின் ஸ்தாபகரும், பிரதமராக இருந்தவருமான எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க ஆவார். பண்டாரநாயக்க லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் உயர் கல்வியை முடித் துக் கொண்டு இலங்கைக்குத் திரும்பி வந்ததும் சமஷ்டி அரசியல் முறை தான் இலங்கைக்கு உகந்தது என இலங்கைமுழுவதும் பரப்புரை செய்தவர். யாழ்ப்பாணம் வந்தபோதும் சமஷ்டி கொள்கையின் நன்மைகள் பற்றி எடுத்து விளக்கியிருந்தார். ஆனால் அன்றைய தமிழ்த் தலைவர்கள் சமஷ்டிக் கொள்கையை ஏற்கவில்லை. சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்திய பின்பு பண்டாரநாயக்க சமஷ்டிக் கொள்கையைக் கைவிட்டுவிட்டார்.

வடக்கு –கிழக்கு தமிழர்களுக்கு ஒரு சமஷ்டி அரசியல் அலகு வேண்டும். சமஷ்டி முறை ஆட்சியை டொனமூர் ஆணைக்குழு முன் கண்டியக் சிங்களவர் முன்வைத்திருந்தனர். வடக்கு – கிழக்கு மாகாணங்களை இணைத்து தமிழர்களுக்கு உரித்தான அரசியல் அலகாக கொடுக்கப்பட வேண்டுமென முன்மொழிந்தனர். 1918ஆம் ஆண்டு தமிழர்கள் ஒரு தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை அன்றே ஏற்றுக் கொண் டனர்.

இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதியிலிருந்து இற்றை வரையில் தமிழர்கள் உரிமைகளை இழந்து மீண்டும் அந்த உரிமைகளைப் பெறு வதற்கும், தமிழ்த் தேசியத்தை நிலை நிறுத்துவதற்கும் போராடி வருகின்றனர். இலங்கை அரசும்,விடுதலைப் புலிகளும் ஒஸ்லோ பிரகடனத்தை உருவாக்கினர். கையெழுத்திட்டனர்.அந்த நேரம் ஒஸ்லோ பிரகடனத்தின் மூலம் தமிழர்களுக்கென ஒரு அரசியல் தீர்வு இலங்கை அரசால் முன்வைக்கப்பட்டது. பிரிவடையாத இலங்கைக்குள் சமஷ்டி அரசியல் முறையும் உள்ளக சுயநிர்ணய உரிமையும் தமிழர்களுக்கு தீர்வாக முன்வைக்கப்பட்டது. இந்தத் தீர்வுகள் யாவும் பௌத்த சிங்கள பேரினவாத அரசியல்வாதிகளாலும் அரசுகளாலும் அப்போது முன் வைக்கப்பட்டவைகளேயாகும். அவர்களால் முன்வைக்கப்பட்ட தீர்வுகள் யாவும் இலங்கையின் இறைமைக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாதவாறு முன்வைக்கப்பட்டவை யாகும். நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில் சமஷ்டிக் கொள்கையை தேர்தல் விஞ்ஞாபனத்தில் மீண்டும் தெளிவாக முன் வைத்துள்ளது.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் வடக்கு–கிழக்கு அலகைக் கொண்ட சமஷ்டிக் கட்டமைப்புக்குள் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதே பிரதான கொள்கையாக இதில் முன் வைக்கப்பட்டுள்ளது. பகிரப்பட்ட இறையாண்மையின் அடிப்படையில் உருவாக்கப்படும் அதிகாரப் பகிர்வு ஏற்பாடு நிலத்தின் மீதும், தமிழ் மக்களின் பாதுகாப்பை உறு தி செய்யும்வகையிலும்சட்டம் ஒழுங்கு என்பனவற்றின்மீதானதாகவும்இருக்க வேண்டும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன் வைத்தது.

தமிழ்க் கூட்டமைப்பினரால் வெளியிடப்பட்டுள்ள சமஷ்டிக் கோரிக்கை குறித்து தென்னிலங்கையிலுள்ள சிங்கள தேசியக் கட்சிகள் யாவும் கடுமையான கருத்தை வெளியிட்டுள்ளனர். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தரப்பு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள தேர்தல்விஞ்ஞாபனத்தை வட்டுக்கோட்டையில் 1976ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியால் மேற் கொள்ளப்பட்ட பிரகடனத்துக்கு ஒப்பானது என சுட்டிக்காட்டியிருக்கின்றது. அதுமட்டுமன்றி அது நல்லிணக்கத்தையும் பாதிக்குமெனவும், பிரிவினை வாதத்தைத் தூண்டும் என்றும் மஹிந்த தரப்பு கூறியுள்ளது. ஒருபடி மேலே போய் நாட்டைத் துண்டாடுவதற்கு தமிழ்க் கூட்டமைப்பு முயற்சி செய்கின்றது. சிங்கள மக்கள் இது தொடர்பில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் எனவும், இந்தக் கொள்கையை ஒரு போதும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒற்றையாட்சி வரையறைக்குள்ளேயே தீர்வு எனவும் தமது அரசில் சுயாட்சி என்ற கதைக்கே இடமில்லை எனவும் கடந்த 23ஆம் திகதி செய்தியாளர் சந்திப்பின்போது அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்திருந்தார். நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு சமஷ்டி முறைத் தீர்வு பொருத்தமற்றதென ஜேவி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவும், கிழக்கில் முஸ்லிம்களின் ஆதரவையும் பெற்று வடக்கு – கிழக்குப் பகுதிகளை இணைத்து சட்டத்துக்குப் புறம்பான சமஷ்டி முறை ஒன்றை ஏற்படுத்த முனைவது ஏற்றுக்கொள்ள முடியாதென தேசப்பற்றுள்ள தேசிய இயக்கமும் குற்றம் சாட்டியுள்ளதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.


தென்னிலங்கையிலிருந்து சகல சிங்களக் கட்சிகளால் எழுப்பப்படும் பிற்போக்குத்தனங்களும், குறுகிய சிந்தனைகளும் இலங்கை நாட்டுக்கு உகந்ததாக இருக்காது. 67ஆண்டுகளாக நாட்டின் தேசியப் பிரச்சினையான தமிழர் பிரச்சினையைக் தூண்டியவை, ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியுமாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல்விஞ்ஞாபனத்தில்கூறப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவையாகும். தமிழினம் ஒற்றையாட்சியை எக்கால கட்டத்திலும் ஏற்றுக்கொள்ளவே மாட்டாது. மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற வீணைக்கட்சியின் கொள்கையை இதுவரை காலமும ஏற்றுக்கொள்ளாதவர்கள் தங்களைத் தாங்களே ஆளும் உரிமையைக் கொண்டவர்களாகவே என்றும் இருப்பார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனி நாட்டு கோரிக்கையை எந்தவொரு தேர்தல் விஞ்ஞாபனத்திலும் முன் வைக்கவேயில்லை. பிரிவுபடாத இலங்கைக்குள் ஓர் நிரந்தரமான அரசியல் தீர்வை முன் வைக்கின்றனர். இலங்கை சுதந்திரமடைந்த காலப் பகுதியில் அப்போதைய தமிழ்த் தலைவர்கள் எதையுமே கேட்கவில்லை. இரண்டாம் உலகப் போரின் பின் சுதந்திரம் பெற்ற பல நாடுகளிலும் சமஷ்டி அரசியல் முறைமை உருவாக்கப்பட்டது. எமது தலைவர் சமஷ்டி அரசியல் முறையைக் கூடக் கேட்கவில்லை.

ஒற்றையாட்சி முறையில் அமைந்த பெரிய பிரித்தானியாவுக்குள் ஸ்கொட்லண்ட் சிற்றரசாகத் திகழ்கின்றது. அப்படிக்கூட வடக்கு – கிழக்கை இணைத்து தனியரசாக உருவாக்கித்தரும்படி கேட்கவில்லை. இந்தியா சுதந்திரமடைந்த போது பாகிஸ்தானின் தந்தையான ஜின்னா பாகிஸ்தான் பிரிந்துபோக வேண்டும் – என்றார். பாகிஸ்தானைப் பிரித்தெடுத்தார். எமது தலைவர்கள் அந்தக் காலப்பகுதியில் தமிழீழம் கேட்கவில்லை. இந்தியாவில் மொழி வாரியாக மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. எமது தலைவர்கள் அப் போது கூட இதுபற்றி சிந்திக்கவேயில்லை. இந்திய அரசமைப்பில் பரந்த, விரிந்த அடிப்படை அரசியல் உரிமைகள் சேர்க்கப்பட்டுள்ளன. அப்போதைய தலைவர்கள் அவ்வாறான உரிமைகளைக் கூட கேட்கவே யில்லை.தனிச் சிங்கள மந்திரிசபை அமைத்த டி.எஸ். சேனநாயக்கவின் வாக்குறுதிகளை நம்பிய படியினால்தான் அப்போது ஒற்றையாட்சி முறையை ஏற்றுக்கொண்டனர். அந்த ஒற்றையாட்சி முறையே இன்றும் தமிழினத்துக்கு சாபக் கேடாக அமைந்துள்ளது. ஒற்றையாட்சி முறை தமிழரது இருப்பை அடியோடு இல்லாதொழிக்கின்ற ஆட்சிமுறை என்பதை எந்தவொரு தமிழனுக்கும் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

# இலக்கை எய்தும் பொறுப்பு மக்களது கைகளிலேயே





சிங்களமூலம் – லங்காதீப
தமிழில் – வீஎஸ்ரீ

கடந்த காலகட்டத்தில் அரசியல் முதிர்ச்சியடைந்த ஆசியப் பிராந்திய நாடுகள் மத்தியில் இலங்கை மற்றும் மியன்மார் நாடுகள் முக்கிய இடம் வகிக்கின்றன. இலங்கையில் நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் எதிர்வரும் ஓகஸ்ட் 17ஆம் திகதியும், மியன்மார் நாட்டின் நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 8 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன.

இலங்கையில் கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதியன்று இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் எவரும் எதிர்பாராத வகையில் வெற்றியீட்டிய மைத்திரிபால சிறிசேன, நாட்டின் புனர்நிர்மாணப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல வேண் டிய பொறுப்பை ஏற்றுள்ளார். அதேசமயம் மியன்மார் நாட்டில் ஆங்சான் சூகியின் கட்சி, தற்போது அந்த நாட்டில் நடைமுறையிலுள்ள இராணுவ தலைமைத்துவ நிர்வாகத்தை மாற்றியமைத்து நாட்டில் ஜனநாயக ரீதியிலான நிர்வாகத்தை நிலைநிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

இந்த இரு நாடுகளிலும் இடம்பெறவுள்ள தேர்தல்கள், தென்னாசிய வட்டகை மட்டத்தில் மட்டுமன்றி, உலகளாவிய ரீதியிலும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்த இரு நாடுகளும் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் துரிதமாக வளர்ச்சியடையும் முக்கியத்துவம் மிக்க நாடுகளாகக் கொள்ளப்படுகின்றன. பெரும்இலாபம் தரும் முதலீடுகளுக்கு ஏற்புடைய நாடுகளாக அடையாளப்படுத்தப்படுகின்றன. இந்த இரு நாடுகளதும் மொத்த தேசிய உற்பத்தி 6 சதவீதத்துக்கும் மேற்பட்டதாகும். இந்த இரு நாடுகளும் ஜனநாயக நடைமுறைக்கு மதிப்பளிக்கும் நோக்கில் திறந்த பொருளாதாரக் கொள்கை தமக்கு ஏற்புடையது என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளன.

இலங்கையில் கடந்த 10 ஆண்டுகளாக மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்து நாட்டை நிர்வகித்துள்ளார். 2009 ஆம் ஆண்டில் இலங்கை பாதுகாப்புப் படையினர் தமிழ் தீவிரவாதிகளை முற்றுமுழுதாகத் தோற்கடித்திருந்தனர். போரின் இறுதிக் கட்டத்தில் பொதுமக்கள் தரப்பில் ஆயிரக் கணக்கான உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. அது தொடர்பாக வருத்தம் தெரிவிப்போ, விளக்கமளிப்போ அரசினால் மேற்கொள்ளப்படவில்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேன்மேலும் தமது அதிகாரபலத்தைப் பெருக்கிக்கொள்ள முயன்றாரே ஒழிய, தோல்வி கண்ட சிறுபான்மையின தமிழர்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள அக்கறை காட்டவில்லை. அரச அனுசரணையுடன் தமது குடும்ப உறுப்பினர்களுக்கும் உறவினர்களுக்கும் தத்தமது வளங்களை முடிந்த அளவுக்குப் பெருக்கிக் கொள்ள வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தார். மஹிந்த அரசை விமர்சித்த நபர்கள் பாதுகாப்புப் படையினரது அச்சுறுத்தல்கள், கடத்திச் செல்லப்படுதல் என்பவற்றுக்கு உட்பட்ட நேர்ந்ததுடன் சில சமயங்களில் உயிரிழப்பையும் சந்திக்க நேர்ந்தது. மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதிப் பதவியை வகிக்க மஹிந்த மேற்கொண்ட முயற்சியை முறியடித்த வாக்காளர்கள் அவரைத் தேர்தலில் தோற்கடித்து மைத்திரிபால சிறிசேனவை நாட்டின் ஜனாதிபதியாக ஆக்கி வைத்தனர்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதிப் பதவியை ஏற்ற கையோடு நாட்டில் மீண்டும் ஜனநாயக நடைமுறையை ஏற்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் நாட்டில் அதிகாரச் சமநிலையை ஏற்படுத்தவும் நடவடிக்கை மேற்கொண்டார். எதிர்பார்க்கப்படும் பலதரப்பட்ட புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள மக்களது ஆணையைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில், நாடாளுமன்றத் தேர்தலை நடத்தவும் நடவடிக்கையை மேற்கொண்டார்.

**அமெரிக்காவின் "சசகாவா" நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரியான அட்மிரல் டெனிஸ் சீ.பிளேயர், இலங்கை மற்றும் மியன்மார் நாடுகளின் அரசியல் நிலவரம் குறித்து வெளியிட்டுள்ள கருத்து இது.**

மஹிந்தவும் அவரது ஆதரவாளர்களும் ஜனாதிபதி மைத்திரிபாலவின் நிர்வாகச் செயற்பாடுகளுக்கு பலதரப்பட்ட இடையூறுகளை ஏற்படுத்தி வருவதுடன், தமது தரப்புக்குள்ளேயே பிரிவினைகளை ஏற்படுத்திக் கொண்டு மீண்டும் ஏகாதிபத்திய நிர்வாகத்தை நாட்டில் உருவாக்கும் நோக்குடன் அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சித்து வருகின்றனர்.



நீண்ட காலமாக இராணுவ நிர்வாகத்தின் கீழ் செயற்பட்டு வந்த மியன்மார் நாடு படிப்படியாக ஜனநாயக ரீதியான நிர்வாகத்தில் கால் பதிக்க நேரிட்டுள்ளது. இராணுவத் தரப்பால் நீண்ட காலமாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த அந்த நாட்டின் பெண் அரசியல் வாதியான ஆங்சான் சூகியை இராணுவத் தரப்பு கடந்த 2010 ஆம் ஆண்டில் வீட்டுக் காவலில் இருந்து விடுவித்தது. இரா ணுவ அரசின் பல இராணுவ ஜெனரல்கள் தமது இராணுவச் சீருடையிலிருந்து அமைச்சர்களாகவும் அரசியல் வாதிகளாகவும் மாறிக் கொண்டனர்.

இராணுவத் தரப்பினால் மேற்கொள்ளப்படும் ஜனநாயக ஆட்சி முறையின் கீழ் தற்போது ஆங்சான் சூகியின் தலைமையிலான கட்சி யும், வேறு சிறுபான்மை இனக் கட்சிகளும் கடந்த பல ஆண்டு க ளாக உள் நாட்டுப் போர் இடம்பெற்று வந்த மியன்மார் நாட்டில், இடம்பெறவுள்ள தேர்தலில் இந்த முறை போட்டியிடவுள்ளன. இராணுவத் தரப்பு நிர்வாகத்துக்கு எதிராக களம் இறங்கியுள்ள இந்த எதிர்க் கட்சிகள் இடம்பெறப் போகும் பொதுத் தேர்தலில் அதிக ஆசனங்களைக் கைப்பற்றும் என்பது தெளிவான ஒன்றாகும். இதனால் மியன்மார் நாடு மீண்டும் ஏகாதிபத்திய நிர்வாகத்துக்கு மாறு வதற்கான வாய்ப்புக் குறை வாகவே காணப் படுகிறது.

சமாதானச் சூழலை உருவாக்குதல் மற்றும் ஜனநாயகவாத புனர்நிர்மா ணத்தை நடைமுறைப்படுத் தல் என்பவையே தற்போது மியன்மார் நாடு எதிர்நோக்கி யுள்ள சவாகளாகும். இராணுவத்தரப்பு நிர்வாகத்துக்கோ நாட்டின் ஸ்திரத்தன்மையை நிலை நிறுத்த வேண்டிய அவ சியம்உள்ளது. ஆனால் அதனை நிலைநிறுத்தும் நோக்கில் அதிகாரங்களைக் கையளிப்பதற்கு இடையூறு ஏற்படுத்த இராணுவத் தரப்பால் நடவடிக்கை மேற்கொள்ள இயலும். இருந்த போதிலும் இராணுவ நிர்வாகத் தரப்பினர், கடைசியில் அந்த நாட்டின் அரசமைப்பில் தாம் கொண்டுள்ள நாடாளுமன்ற ஆசனங்கள் மற்றும் வர்த்தகத் தொடர்புகளைக் கைவிட்டு ஜனநாயக அரசின் இரண்டாம் நிலையை அதாவது நாடாளுமன்றத்தில் எதிரணியாகச் செயற்பட நேரக் கூடும்.

இலங்கை மற்றும் மியன்மார் நாடுகளது நெருக்கமான மற்றும் நீண்ட எதிர்காலத்துக்கு வேறு நாடுகளும் அழுத்தம் ஏற்படுத்தக்கூடும். குறிப்பாக சீனா, இலங்கையின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவுவது போன்றே இராணுவமயச் செயற்பாடுகளுக்கு குறிப்பாக இலங்கையில் தமது நீர்மூழ்கிக் கப்பல்களைத் தரிக்க வைப்பிப்பது போன்றே நடவடிக்கைகளுக்கும் மியன்மாருக்கான ஆயுத விற்பனை மற்றும் இராணுவப் பயிற்சி என்பவற்றுக்கு ஆதரவு வழங்கி வருகிறது. சீனாவால் வழங்கப்படும் பொருளாதார உதவி ஒத்தாசைகளை ஏற்றுக்கொண்டாலும் முன்னைய மேலாண்மைவாத நிர்வாகம் தொடர்பாக ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து சீனா குறித்து கடும் நம்பிக்கை கொள்ள இயலாது.

இலங்கையில் மஹிந்தவின் நாசகார நிர்வாக வேளையில்கூட அமெரிக்கா – இலங்கை மீது பெரிய அளவில் தலையீடு மேற்கொள்ளாத போதிலும் இலங்கை அரசுடன் நெருக்கமற்ற உறவையே பேணிவந்தது.. மைத்திரிபால சிறிசேனவினது வெற்றியையடுத்து, அமெரிக்க இராஜாங்கச் செய லாளர் ஜோன் கெரி இலங்கைக்குப் பயணமொன்றையும் மேற்கொண்டிருந்தார்.

இலங்கை ஆட்சியாளர்கள் ஜனநாயக ரீதியிலான நிர்வாகத்தை மேலும் உறுதியான வகையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்பதே அமெ ரிக்காவின் எதிர்பார்ப்பு. போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற கொலைகள் தொடர்பாக பொறுப்புடன் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம் நாட்டின் இனங்களுக்கு இடையேயான புரிந்துணர்வை அதிகரிக்க வைக்க இயலும். இலங்கையில் அமைதி நிலவவேண்டும் என்பதுடன் பொருளாதார முதலீடுகளும் அத்தியாவசிய மானதொன்றே. இலங்கைக்கு பிரகாசமான எதிர்காலம் அமையவேண்டு மென்பதே அமெரிக்காவின் எதிர்பார்ப்பாகும்.

சுதந்திரமான, அமைதியான நிலைநோக்கி நாட்டை முன்னெடுத்துச் செல்வது, பொருளாதார இருப்பை நிலைநிறுத்துதல் மற்றும் ஜனநாயகவாதத்துக்கு மதிப்பளிக்கும் அரசியல் தலைவர்களை உருவாக்குதல் என்பவை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. எதிர்வரும் தேர்தல்கள் மூலம் அதனை மேற்கொள்ளும் வாய்ப்பு இலங்கை மற்றும் மியன்மார் நாடுகளின் பொதுமக்களுக்குக் கிட்டியுள்ளது. வாழ்க்கையில் நலிவுற்றுள்ள அந்த மக்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்திச் செயற்படுவதன் மூலம் தமது இலக்கு நோக்கிய பயணத்தைத் தொடர இயலும். அந்தப் பொறுப்பு மக்களது கைகளிலேயே தங்கியுள்ளது.

## தியானத்தின் சக்தி எது?

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



எல்லாவற்றையும் தவிர்க்கும் சக்தியைக் கொடுப்பதுதான் தியானம். பார் அங்கே.. அதோ ஒரு அழகான பொருள் என இயற்கை கூறுகிறது. கண்களே பார்க்காதீர்கள்! என்று நான் கண்களுக்கு உத்தரவிடுகிறேன். கண்கள் பார்ப்பதில்லை. இதோ நல்ல நறுமணம், இதை முகர்ந்து பார் என இயற்கை கூறுகிறது. அதை முகராதே! என நான் எனது மூக்குக்கு உத்தர விடுகிறேன். மூக்கு அதை முகர்வதில்லை. இயற்கை ஒரு கொடிய காரியம் செய்கிறது. எனது குழந்தைகளில் ஒன்றைக் கொல்கிறது. இப்போது என்ன செய்வாய்? மடையா உட்கார்ந்து அழு. துக்கத்தின் ஆழத்துக்குப்போ! என்று இயற்கை சொல்கிறது. ஆனால் நான் சொல்கிறேன், நான் போகவேண்டியஅவசியம்இல்லை! என்று குதித்து எழுந்து சுதந்திரமாக இருக்க வேண்டும். இதைப் பயிற்சி செய்து பாருங்கள். ஒரு நொடியில் தியானத்தில் இந்த இயற்கையை நீங்கள் மாற்ற முடியும். இந்தச் சக்தி உங்களுக்குக் கிடைத்தால் அதுவே பரலோகமாகாதா? சுதந்திரமாகாதா? தியானத்தின் சக்தி அதுதான்.

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 800 | 700 | 700 | 600 |
| நண்டு | 250 | 400 | 400 | 400 | 200 | 500 |
| கணவாய் | 600 | 600 | 700 | 700 | 700 | 600 |
| பாரை | 600 | 500 | 600 | 600 | 500 | 450 |
| சுறா | 600 | 500 | 500 | 700 | 550 | 550 |
| சீலா | 300 | 400 | 400 | 450 | 400 | 350 |
| விளை | 700 | 400 | 450 | 500 | 600 | 400 |
| மூரல் | 300 | 400 | 300 | 400 | 400 | - |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | - | 350 |
| கிழாக்கன் | 550 | 800 | 700 | 450 | - | - |
| ஒரா | 400 | 400 | 300 | 300 | - | - |
| திரளி | 250 | 300 | 200 | 250 | 250 | 300 |
| நகரை | 200 | 300 | 300 | 300 | - | 300 |
| சூடை | 150 | 200 | 150 | 200 | 100 | 80 |
| ஒட்டி | 300 | 300 | 300 | 200 | 300 | 250 |
| திருக்கை | 150 | 350 | 200 | 150 | 300 | 150 |
| பாலை | 400 | 350 | 400 | 400 | 500 | - |
| வாளை | 100 | 250 | - | 300 | - | 300 |
| கொய் | 100 | 200 | 150 | 120 | 200 | - |
| மதனம் | 150 | 250 | 200 | 250 | 300 | 250 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 60 | 40 | 60 | 60–80 | 60 | 60 | 40 |
| கத்தரி | 80 | 60 | 90 | 60 | 40–60 | 80 | 80 | 50 |
| கரட் | 140 | 120 | 100–120 | 120 | 200 | 200 | 180 | 120 |
| மரவள்ளி | 60 | 50 | 60 | 50 | 60 | 60 | 60 | 45 |
| பயிற்றை | 30 | 30 | 60 | 70 | 80 | 40 | 140 | 50 |
| பாகல் | 80 | 120 | 100 | 80 | 100–130 | 100 | 140 | 100 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 | 80–140 | 120 | 140 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 120 | 110 | 90 | 120 | 130 | 90 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 100 | 100 | 70 | 120 | 140 | 70–80 |
| பூசணி | 40 | 30 | 50 | 50 | 40 | 60 | 60 | 40 |
| தக்காளி | 120 | 120 | 120 | 100 | 120 | 140 | 130 | 100 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 50 | 40 | 40 | 60 | 35 |
| கீரை | 15 | 30 | 30 | 10 | 20 | 20 | 35 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 20 | 20 | 30 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 150 | 250 | 220 | 280 | 400 | 250 | 120–150 |
| புடோல் | 40 | 50 | 40 | 40 | 40 | 60 | 60 | 50 |
| கோவா | 80 | 100 | 70 | 80 | 80 | 100 | 80 | 70 |
| வெண்டி | 40 | 50 | 40 | 40 | 80 | 60 | 70 | 30–40 |
| போஞ்சி | 160 | 120 | 180 | 150 | 160 | 200 | 200 | 180 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 100 | 110 | 200 | 200 | 90 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 50 | 40 | 40 | 50 | 35 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 90 | 90 | 90 | 100 | 120 |
| தேசிக்காய் | 80 | 60 | 70 | 40 | 60 | 80 | 100 | 80–90 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 10 | 40 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 120 | 150 | 120 | 180 | 260 | 200 | 200 | 130 |
| இராசவள்ளி | 120 | 140 | – | 160 | 160 | 120 | 180 | 90 |
| முருங்கைக்காய் | 120 | 100 | 120 | – | 220 | 130 | 140 | 120 |

## நாளை

**ஆடி-20**
**புதன்கிழமை**
**05.08.2015**

திதி: ஷஷ்டி
பி.இ. 03.36 வரை
நட்சத்திரம்: ரேவதி
பி.இ.02.25 வரை
சுபநேரம்:
04.34–06.04 வரை
இராகுகாலம்:
12.04–01.34 வரை



## இளமைக்கு வழிவகுக்கும் திராட்சை

திராட்சைப் பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் தோல் புற்றுநோயைத் தவிர்க்கலாம். அது மட்டுமல்லாமல் முன் கூட்டிய வயோதிபத்தை தடுக்கவும் திராட்சை உதவுகிறது என ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். திராட்சையில் உள்ள கூட்டுப் பொருள்கள் சூரியனில் இருந்து வரும் புற ஊதாக் கதிர்களின் கதிர்வீச்சில் இருந்து செல்களைப் பாதுகாக்க உதவுகின்றன. புற ஊதா கதிர்கள் தோல் புற்றுநோயை ஏற்படுத்தக் காரணமாக உள்ளன. புற ஊதா கதிர்வீச்சுப் பாதிப்பை தவிர்க்க திராட்சையில் உள்ள ப்ளேவனாய்ட் உதவுகிறது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | | 8 | 5 | | | |
| | | | | 6 | | 8 | | 4 |
| | | | 2 | | | 9 | 5 | 7 |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| 4 | 9 | 1 | | | | | | |
| 5 | 2 | 3 | | | 7 | | | |
| 1 | | 6 | | 9 | | | | |
| | | | 1 | 5 | | | 2 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 9 | 8 | 6 | 4 | 2 | 5 | 1 |
| 5 | 8 | 1 | 2 | 3 | 9 | 7 | 4 | 6 |
| 6 | 4 | 2 | 7 | 1 | 5 | 9 | 8 | 3 |
| 1 | 9 | 3 | 6 | 8 | 2 | 5 | 7 | 4 |
| 2 | 6 | 7 | 4 | 5 | 3 | 1 | 9 | 8 |
| 8 | 5 | 4 | 9 | 7 | 1 | 3 | 6 | 2 |
| 4 | 2 | 6 | 3 | 9 | 7 | 8 | 1 | 5 |
| 7 | 1 | 8 | 5 | 2 | 6 | 4 | 3 | 9 |
| 9 | 3 | 5 | 1 | 4 | 8 | 6 | 2 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங் கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க் கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# ஆங்கில எழுத்துக்களின் பெயர்ப் பலன்கள்



**நீதியின் மறுவடிவம் C**

C என்ற ஆங்கில எழுத்தைத் தங்களது பெயரின் முதலெழுத்தாகக் கொண்டவர்கள் சீரும், சிறப்பும், பக்தியும் கொண்டு விளங்குவர். சூரியக்கதிர்கள் இவ்வெழுத்தில் பட்டு கிரகிக்கப்பட்டு பெயரின் மற்ற எழுத்துகளுக்கும் சக்தியைத் தருவதால் எங்கும் பிரபலமாக ஜொலிப்பர். இந்தக் கில்லாடிகள் செய்யும் அல்லது செய்யப் போகும் காரியங்கள் இவர்களுக்கு மட்டுமே தெரிந்திருக்கும். பார்வைக்கு அசடாகத் தெரியும் இவர்களின் மனவலிமையை, யாராலும் எடைபோட இயலாது. எதிலும் தீர்க்கமான முடிவு எடுப்பார்கள். இவர்கள் சொல்வது அப்படியே நடக்கும். தன்னலத்தை விட நாட்டின் நலமே இவர்களுக்குப் பெரிது. எப்பொழுதும். எதையாவது சிந்தித்துக் கொண்டேயிருப்பர். இவர்களின் மகோன்னதமான கட்டளைகளுக்காக நாடே காத்துக்கொண்டிருக்கும் அளவுக்கு செயற்கரிய காரியங்களைச் செய்வர். இவர்கள் நீதியின் மறுவடிவம். ஆய்வுப் பணிகள் இவர்களுக்கு அல்வா சாப்பிடுவது மாதிரி. நீதித்துறையிலும், ஆராய்ச்சிப் பணியிலும், அரசுப் பணியிலும் ஆன்மிகத்திலும் முத்திரை பதிப்பர். மக்களுக்காக அதிக நேரம் ஒதுக்கும் இவர்கள் குடும்பத்தாருக்கும் நேரம் ஒதுக்குவது நல்லது. தினமும் வீட்டுக்குச் செல்ல நேரமில்லாமலோ சென்றாலும் குடும்பத்தை யாராவது பார்த்துக் கொள்வார்கள் என்ற குருட்டு நம்பிக்கையிலோ இருப்பார்கள். மூளைபலம் மிகுந்த இவர்கள் நேர்மையாளராக இருப்பதால் மக்களுக்கு இவர்களை அதிகம் பிடிக்கும். கணினித்துறையில் வல்லவர்கள். எப்படி வியூகம் அமைத்தால், யாரை எளிதில் கவிழ்க்கலாம் என்று திட்டமிடுவதில் சமர்த்தர்கள். பண விடயத்தில் சிக்கனமான இவர்கள், பிறரிடம் பணத்தை எதிர்ப்பார்ப்பதில்லை. தமது பொருளாதார நிலையை உயர்த்திக்கொள்வதில் வல்லவர்கள். நியாயமான கோபம் அடிக்கடி ஏற்படும். சொந்த வேலைகளை எவரிடமும் சொல்வதில்லை. பிறர் செய்தாலும் பிடிப்பதில்லை.



மாமிச உணவை வெறுப்பர். இனிப்பை விரும்புவர். இருந்த இடத்திலிருந்தே மலையையும் தகர்க்கும் அறிவு இவர்களுக்கு உண்டு. C இல் முதல் எழுத்து அமைவது ஜென்ம புண்ணியம் எனலாம். நிச்சயம் பல சிறப்புகளைத் தொடர்ந்து தந்து கொண்டேயிருக்கும். C இல் பெயர் ஆரம்பித்து 6ஆம் எண்ணில் கூட்டுத்தொகை அமைந்துவிட்டால் மட்டும் வாழ்வு முழுக்க போராட்ட நிலை ஏற்படலாம். இவர்களுக்கு திருமணத் தடை. தொழில் முடக்கம், பதவி உயர்வு இல்லாமை, வேலை வாய்ப்புத் தடை, மக்களிடம் மரியாதைக் குறைவு போன்றவை ஏற்படலாம். முதல் எழுத்தாக C யைப் பெற்றவர்கள் மேன்மையாளர்கள்.

# இல்லறம் இனிதாக வேண்டுமா?



கணவன், மனைவி இருவருக்குள்ளும் நல்ல விட்டுக்கொடுக்கும் மனபக்குவம் வேண்டும். அதற்கு சில வழிமுறைகள் உள்ளன.

**பெண்களுக்கு :**

உங்கள் துணைவருக்கு பிடிக்கும் விதத்தில் உங்களை மாற்றிக்கொள்ளுங்கள். அவருக்குப் பிடித்த உணவுகளை சமைத்துக்கொடுங்கள்.

வேலைக்கு போய் வரும் ஆண்களிடம் வீட்டுக்கு வந்தவுடன் படபடவென்று வீட்டில் நடந்த விடயங்களை உளறக் கூடாது. அலுவலகம் முடிந்து கணவர் வீடு வரும்போது முகத்தில் புன்னகை ஏந்தி ஆர்வத்துடன் அவரை எதிர்கொள்ள வேண்டும். எந்த நேரத்தில் என்ன விடயம் பேசினாலும் பொறுமையுடன், இனிமையாகவும் அமைதியாகவும் எடுத்துக் கூற வேண்டும்.

எந்த ஒரு சூழ்நிலையிலும் மனைவி கணவரையோ, கணவர் மனைவியையோ மற்றவர்களுடன் ஒப்பிட்டு பேசக்கூடாது. எல்லா நேரங்களிலும் கணவர் கூடவே இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள்.

கணவரின் குடும்பத்தாரை உங்களது குடும்பம் போல் பார்க்க வேண்டும்.

கணவருக்குப் பணிவிடைகள் செய்வதை மகிழ்ச்சியாகச் செய்ய வேண்டும். கணவரின் வேலைகளை விருப்பத்துடன் நாம் செய்ய வேண்டும்.

கணவருக்குப் பிடித்தமான உடைகளைத் தெரிவு செய்ய வேண்டும். மேலும் கணவருக்குப் பிடித்த உடைகளை அணிந்து கொள்ளவேண்டும். அவ்வப் போது கணவருக்கு சிறு சிறு பரிசுகள் கொடுக்கலாம். மேற்கண்டவற்றைச் செய்து வந்தாலே கண வன்மார்கள் உங்கள் வசம் ஆவது உறுதி.

**ஆண்களுக்கு:**

உங்களது விடுமுறை நாள்களில் மனைவியைச் சந்தோஷமாக வெளியே அழைத்துச் செல்லுங்கள்.

விடுமுறை நாள்களில் மனைவியுடன் சமையல் வேலைகளைப் பகிர்ந்துக்கொண்டால் மனைவிக்கு ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. மனைவிக்கு வீட்டு வேலைகளில் சின்னச் சின்ன உதவிகள் செய்யலாம். உரிமையுடன் இந்தக் காய்கறிகளை நறுக்கி கொடுங்கள், கொஞ்சம் வீட்டைச் சுத்தம் செய்யுங்கள் என்று அன்பாகச் சொல்லும் மனைவி மீது கோபப்படாமல் சிறு சிறு உதவி செய் யுங்கள்.

கணவர்மார்கள் மனைவி செய்யும் சமையலைப் பாராட்ட வேண்டும். உப்பு, காரம் கூட இருந்தாலும் அதை பக்கு வமாக எடுத்துச் சொல்லுங்கள்.

சின்னச் சின்னப் பரிசுகள் வாங்கிக் கொடுங்கள். மனைவியிடம் தனித் திறமை இருந்தால் அதை ஊக்குவிக்க மறக்காதீர்கள்.



**இருவருக்கும் :**

இருவருக்குள்ளும் எந்த ஒரு சந்தேகப் பேயும் உள்ளே நுழையாமல் பார்த்துக்கொள்ளவும். அப்படியே ஏதாவது சந்தேகம் வந்தாலும் மனம் விட்டு ஒளிவு மறைவில்லாமல் பேசித் தீர்த்துக்கொள்ளுங்கள். எந்த விடயங்கள் நடந்தாலும் 4 சுவர்களுக்குள் மட்டுமே இருக்கட்டும். இருவருக்குள்ளேயே பகிர்ந்துக் கொள்ளுங்கள். சிறு தவறுகள் நடந்தாலும் சகிப்புத் தன்மையுடன் ஏற்றுக்கொள்ளுங்கள்.

> "இருவருக்குள்ளும் எந்த ஒரு சந்தேகப் பேயும் உள்ளே நுழையாமல் பார்த்துக்கொள்ளவும். அப்படியே ஏதாவது சந்தேகம் வந்தாலும் மனம் விட்டு ஒளிவு மறைவில்லாமல் பேசித் தீர்த்துக்கொள்ளுங்கள்.

இருவீட்டாரையும் மதிக்க வேண்டும். உறவினர்கள் எந்த நேரத்தில் வீட்டுக்கு வந்தாலும் முகம் சுழிக்காமல் அவர்களைக் கவனிக்க வேண்டும்.

இருவருக்கும் மகிழ்ச்சி கொடுக்கும் சின்னச் சின்ன அன்புகளை அவ்வப்போது பகிர்ந்துக்கொள்ளுங்கள்.

விடுமுறை நாள்களைச் சந்தோஷமாக செலவிடுங்கள்.

சின்னச்சின்ன சண்டைகள் இல்லற வாழ்க்கையில் வருவது இயல்புதான். ஒருவர் கோபமாக இருக்கும்பொழுது மற்றவர் எதிர்த்துப் பேசாமல் மௌனமாக இருப்பது சிறப்பு. பேசப் பேச கோபம் தான் அதிகமாகும். நிம்மதி குறைந்துவிடும்.

கணவர் மனைவியைப் பிரிந்து வெளியூர் சென்று இருந்தாலும் தினமும் ஒரு முறை போனில் சந்தோஷமாகப் பேச வேண்டும்.



# பச்சைக் கிளியும் கறுப்புக் காகமும்

நா.கிருஷ்ணா

பசுமையான மரம் ஒன்றில் ஒரு கிளி நீண்ட காலமாகத் தனது குஞ்சுகளுடன் வசித்து வந்தது. ஒருநாள் அந்த வழியே வந்த ஒரு காகம், அந்த மரத்தைப் பார்த்தது. இவ்வளவு பசுமையான மரமா? என்று ஆச்சரியப்பட்டது. அந்த மரத்தையே சுற்றிச்சுற்றி வந்து பார்த்தது. இனிமேல் இங்கேயே குடியேறிவிட வேண்டியதுதான் என்று முடிவுசெய்தது. தனது பழைய கூட்டைக் கலைத்துவிட்டு, அந்த மரத்தில் கூடு கட்டியது. அப்போது கிளி எங்கோ வெளியே சென்றிருந்தது. திரும்பி வந்த கிளி, காக்கையின் கூட்டைப்பார்த்து, 'ஏய்!.. காக்கையே... எங்களது மரத்தில் ஏன் கூடு கட்டினாய்? இது நான் வசிக்கும் மரம்... இங்கு வேறு எவரும் தங்கக்கூடாது. உடனே இங்கிருந்து சென்று விடு' என்று மிரட்டியது. அதற்குக் காகம், 'அதெல்லாம் முடியாது. மரம் எல்லோருக்கும் பொதுவானது. தனியாக எவரும் சொந்தம் கொண்டாட முடியாது' என்று பதிலடி கொடுத்தது.

இப்படியே சண்டை வலுத்துக்கொண்டு இருக்கும்போது, அந்த வழியே இரண்டு நரிகள் வந்தன. ஏன் இப்படிச் சண்டை போட்டுக் கொள்கிறீர்கள்? என்று கேட்டது ஒரு நரி.

காகம் நரிகளிடம் நடந்தவற்றை எடுத்துக் கூறியது. நரிகள் நன்றாக யோசித்து விட்டு, 'சரி... இந்தப் பிரச்னையைத் தீர்க்க ஒரு வழி சொல்கிறோம்' என்றன. காகமும், கிளியும்' என்ன... என்ன... என்று ஆவலுடன் கேட்டன.

உடனே நரிகளும், உங்கள் இருவருக்கும் ஒரு போட்டி வைக்கிறோம். அதில் வெற்றி பெறுபவர்கள் இந்த மரத்தில் இருக்கலாம். என்ன சொல்கிறீர்கள்? என்றன. காகமும் கிளியும் ஒன்றை ஒன்று முறைத்துக்கொண்டு சரி என்று தலை ஆட்டின. கிளி, கழுகு என்று பார்வையாளர்களும் ஆவலோடு போட்டியைப் பார்க்க மெல்ல மெல்லக் கூடத் தொடங்கின. போட்டி அன்று மாலைதான் நடக்க இருந்தது. அதற்கு முன்பாக கிளி தனது குஞ்சுகளுக்காக, இரை தேடிச் சென்றது.

அங்கு இதுவரையிலும் பார்த்திராத பழங்களைப் பார்த்து, ஆனந்தத்தோடுப் பறித்துக்கொண்டது. தானும் சாப்பிட்டுவிட்டு, குஞ்சுகளுக்கும் எடுத்து வந்தது. போட்டி தொடங்க, சில மணித் துளிகளே இருக்கையில், வெளியே சென்றிருந்த காகம் திரும்பி வந்தது. நரிகளும் வந்து சேர்ந்தன.

இது பாட்டுப் போட்டி. இதில் முதலில் காகத்தைப் பாட வருமாறு அழைக் கிறோம் என்று கம்பீரமாக அழைத்தன நடுவர்களான நரிகள். காகம் வந்தது. மைக்கின் முன்னால் நின்று, தனது தொண்டையைச் செருமிக்கொண்டது. தனது கரகரத்த குரலில், காகா... காகா... என்று பாடி முடித்தது.


கிளியும், கிளிக்குஞ்சுகளும் விழுந்து விழுந்து சிரித்தன. சிரித்த சிரிப்பில் அவற்றுக்கு வயிற்றுவலியே வந்துவிட்டது. நரிகளும் சிரிப்பை அடக்கமுடியாமல் தவித்தன. பின்னர், கிளி பாடத் தொடங்கியது. தனது இனிய குரலெடுத்து கீ... கீ... என்று பாடும் என்று எதிர்பார்த்தால், அதன் தொண்டையிலிருந்து, எந்தச் சத்தமும் வரவில்லை. கிளியால் ஒரு வார்த்தை கூடப் பாடமுடியவில்லை. நரிகளுக்கு ஒன்றும் புரியவில்லை. இப்போது காகம் வாய்விட்டுச் சிரித்தது. 'உனக்கு நல்லா வேணும். என்னைக் கிண்டல் செய் தாய்.. இப்ப உன்னாலே பாட முடிய வில்லை பார்த்தாயா? அடுத்தவர்களைக் கேலி செய்தால் இப்படித்தான் ஆகும்' என்று சொன்னது. ஒன்றுமே பாடாத கிளி, தோல்வி அடைந்ததாக நரிகள் அறிவித்தன. வெற்றி பெற்ற காகத்தைப் பாராட்டிவிட்டு, 'இனிமேல் காகம் இங்கேதான் இருக்கும். போட்டி விதிப்படி, தோற்ற கிளி இந்த மரத்தைவிட்டு வேறு மரத்துக்குப் போய்விட வேண்டும்' என்று அறிவித்தன.

'ஒரு நிமிடம்'... என்று காகம் பேச ஆரம்பித்தது. கிளி வேறு எங்கேயும் போக வேண்டாம். இங்கேயே, என்னுடனேயே இருக்கட்டும். இந்த மரம் பொதுவானது. இதை தனித்து எவரும் சொந்தம் கொண்டாட முடியாது. ஏதோ பழங்களைச் சாப்பிட்டதால் அதன் கிளியின் தொண்டை இன்று கெட்டுப் போய்விட்டது. இல்லை என்றால் நன்றாகப் பாடி வெற்றி பெற்றிருக்கும். இந்தப் போட்டியின் மூலம் மற்றவர்களது இயற்கையான குறைபாடுகளைக் கேலி செய்யக் கூடாது என்பதைக்கிளி புரிந்து கொண்டு இருக்கும். அத்தோடு ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதையும் புரிந்துகொள்ளும். கிளி வாழ வேண்டும் என்பது தான் எனது விருப்பம் என்று சொன்னது. இதைக் கேட்ட கிளி, வெட்கத்தோடு தலை குனிந்து என்னை மன்னித்துவிடு என்பது போல் காகத்தைப் பார்த்தது.

நரிகள் விடைபெற்றுச் செல்ல, கறுப்புக் காகமும் பச்சைக் கிளியும் தத்தமது குஞ்சுகளோடு எந்த வேற்றுமையும் இல்லாமல் நீண்ட காலம் அதே மரத்தில் வாழ்ந்து வந்தன.

# வர்ணம் தீட்டலாம் வாங்க







# இளவல்கள் வட்டம்

- ஒன்றை நன்றாகப் புரிந்துக் கொண்டு பின்னர் காரியத்தில் இறங்குங்கள். கண்மூடித்தனமான நம்பிக்கையோடு ஒரு காரியத்தில் கால் வைக்காதீர்கள்.
- தனிப்பட்ட ஆதாயம் ஒன்றைப் பெறுவதற்காக மற்றவர்களை ஏமாற்ற முயலாதீர்கள். மற்றவர்களின் நலனைக் குலைப்பதன் மூலம் பெறும் ஆதாயம் எந்தப் பயனும் இல்லாதது.
- பலரிடமும் நல்ல பெயர் பெற வேண்டும் என்பதற்காக, தகுதியுள்ளவர்களையும், தகுதி இல்லாதவர்களையும் சமமாக நடத்தாதீர்கள். அத்தகைய சமரசங்கள் தாழ்ந்தவர்களைத் தலைதூக்க வைத்துவிடும்.
- எல்லாவற்றைப் பற்றியும் அபிப்பிராயங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள். அதே நேரம் அந்த அபிப்பிராயங்களை மாற்றிக் கொள்ள, போதிய காரணங்கள் இருந்தால் மாற்றிக் கொள்ளத் தயங்காதீர்கள்.
- காலம் காலமாகச் செய்யப்பட்டு வந்தாலே ஒன்று சரியானதென்று பொருளல்ல. எதையும், ஏன்? எதற்கு என்ற கேள்விகளோடு அணுகுங்கள். ஏற்றுக்கொள்ளக் கூடியவைகளை மட்டுமே ஏற்றுக் கொள்ளுங்கள். எதற்கு வம்பு என்ற சமாதானத்தோடு, எல்லோரும் செய்வதை உடன் பாடில்லாமல் செய்யாதீர்கள்.
- வாழ்க்கையை ரசித்து வாழுங்கள். சவால்கள் சுவாரிஸ்யமானவை. உறவுகள் முக்கியமானவை. ஒவ்வொரு சம்பவமும் ஒரு பாடத்தைக் கற்றுத் தருபவை. எனவே விழிப்புணர்வோடும், ரசிப்புணர்வோடும் ஒவ்வொரு நாளையும் எதிர் கொள்ளுங்கள்.
- கரையில் இருக்கும்வரை குளிர் பற்றிய கவலை இருக்கும். நதியில் இறங்கியபின் நடுக்கம் இருக்காது. தயங்கி நிற்கும்வரை தடுமாற்றம். தெளிவு வந்ததும் ஒரு செயலைத் தொடங்கி விடுவதே நல்லது.
- உடல், உள்ளம், தொழில், உறவுகள், ஆன்மிகம் ஆகிய அத்தனை அம்சங்களுக்கும் சமமான முக்கியத்துவம் தருகிறீர்கள் என்றால் வாழ்வை முழுமையாக வாழ்கிறீர்கள் என்று பொருள்.
- தெரியாத விடயங்களைத் தெரிந்ததுபோல் காட்டிக் கொள்ளாதீர்கள். வெளிப்படையாகக் கேளுங்கள். கற்றுக் கொள்வதிலிருந்தே ஒரு நல்ல பண்பை பிறருக்குக் கற்றுக் கொடுத்தவர் ஆகிறீர்கள்.
- அன்றாட வேலையிலும் சரி, ஓய்விலும் சரி, நீங்கள் செய்வது உங்களுக்கு மகிழ்ச்சியையும், மன நிறைவையும் தருகிறதா என்று பாருங்கள். மற்றவை தாமாகவே வரும்.
- ஒன்றைக் கற்றுக்கொள்ளும்போது நீங்கள் மௌனமாயிருக்க வேண்டும். நீங்கள் கற்றுக் கொடுக்கும்போது மற்றவர்கள் மௌனமாயிருக்க



# வாழ்க்கையில் வெற்றி பெற ...

# மஹிந்தவுக்கு ஆதரவாக புத்த பிக்குகள் களத்தில்

## நேற்று உடன்படிக்கை கைச்சாத்து

கொழும்பு, ஓக .4
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட வேட்பாளரான முன்னாள் ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக பௌத்த அமைப்புகள் நேற்று தேர்தல் களத்தில் குதித்தன. பௌத்த மற்றும் சிவில் அமைப்புகள் அடங் கலாக 61 அமைப்புகள் மஹிந்தவுக்கு ஆதரவு தெரிவித்து, உடன்படிக்கையொன்றைக் கைச்சாத்திட்டு அவரிடம் கையளித்தன.

கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் இந்த நிகழ்வு நேற்று இடம்பெற்றது. நாடு முழுவதிலுமிருந்தும் பிக்குகள் இதில் கலந்துகொண்டிருந்தனர். இளைய பிக்குகள் அதிகமானோர் வருகை தந்திருந்தனர். மேலும், அரசி யல்வாதிகள் சார்பில் பந்துல குண வர்த்தன, திஸ்ஸ அத்தநாயக்க ஆகி யோரும் கலந்துகொண்டிருந்தனர்.

எதிர்கால பிரதமரை வர வேற்கும் ஆசிர்வாத மாநாடு என்ற தொனிப் பொருளில் இந்நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் பங்கேற்ற 61 அமைப்புகளும் 5 இணக்கப்பாடுகள் அடங்கிய உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன.

1. 19ஆவது திருத்தச்சட்டத்தை சரிசெய்தல், பலவந்தமாக எமது நாட்டில் திணிக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள பிரிவினைவாத அதிகா ரங்களை இனங்காணல்.

2. ஜனவரி 8ஆம் திகதி ஆட்சி மாற்றத்தின் பின்னர் மேற்கொள்ளப்படும் பிரிவினைவாத ஒழுங்குப்பத்திரம், வடக்கில் இராணுவ முகாம் அகற்றல், அதியுயர் பாதுகாப்பு வலயங்களை நீக்குதல், வடக்கின் அரச நிர்வாகங்களில் ஈடுபடுவதற்கு தென்னாபிரிக்க, ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட ஏனைய தரப்பினருக்கு இடமளிப்பதை உடனடியாகத் தடுத்தல்.

3. 100 நாள்களில் நாட்டுக்கும், அதன் பொருளாதாரத்துக்கும் ஏற்பட்ட பாதிப்புகளை சரிசெய்தல், குற்றவாளிகளைத் தண்டித்தல்.

4. பௌத்த சமயத்தைப் பாதுகாத்தல், தேசிய மரபுரிமைகளைப் பாதுகாத்தல்.

5. இறக்குமதியை நம்பி இருக்கும் பொருளாதாரத்துக்குப் பதிலாக உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்தல் உள்ளிட்ட பல விடயங்கள் இந்த உடன்படிக்கையூடாக இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன. (த)

# மஹிந்தவுக்கு மேர்வின் கிண்டல்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆலோசனை வழங்க அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார். மஹிந்த ராஜபக்ஷவின் பதவி மோகத்தை கிண்டல் செய்யும் வகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.பரப்புரைக் கூட்டமொன்றின் இடைநடுவில் மேடையேறியமேர்வின் சில்வா, விரைவில் அமெரிக்க ஜனாதிபதி இலங்கைக்கு விஜயம் செய்வார். நானும் இரண்டு தடவைகளில் செல்கின்றேன் . என்னை முன்னுதாரணமாகக் கொள்ளுமாறு மஹிந்தவிடம் கேட்பார் என தெரிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் ஜெகநாதன்



யாழ் குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் LAUSANNE ஐ வசிப்பிடமாவும் கொண்ட பொன்னம்பலம் ஜெகநாதன் 27.07.2015 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் சிவமணி தம்பதியரின் அன்புமகனும் அமராவதியின்(சுகந்தி) அன்புக்கணவரும் அபிராமி,அஜீவனா, ஜவனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான சிவா, செல்வமலர்(மதி)மற்றும் லோகநாதன், பொன்மலர்(சசி), அமுதமலர்(அமுதா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இந்திராணி, தில்லைநாதன், சிவா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.08.2015) புதன்கிழமை சுவிஸ் நேரம் காலை 10.00 மணி தொடக்கம் பி.ப 2.00 மணி வரை நடைபெற்று பூதவுடல் Swiss Malathiyar Hall இல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :-
சித்தப்பா குடும்பத்தினர்
சபாரத்தினம்(குப்பிளான்)
075 045 5566

(63785)

### சின்னட்டி ஐயாத்துரை

(இலங்கை மின்சார சபை ஊழியர்)



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னட்டி ஐயாத்துரை நேற்று (03.08.2015) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னசிட்டி-கண்மணி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசம், இன்பராணி, பூமணி மற்றும் அருமைத்துரை, புஸ்பராணி, தவமணி, இந்துராணி, சிலோன்மணி, நவமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயந்தியின் அன்புக் கணவரும் கலிஸ்ரன், கீர்த்திகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நிரோஜாவின்அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.05, 2ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

(63791)

தகவல் :-
குடும்பத்தினர்.
021 222 6133

# யாழில் அச்சத்துடன் வாழவேண்டியுள்ளது

## மஹிந்தவுடன் கைகோர்த்துள்ள நயினாதீவு நாக விகாரதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஓக.4
யாழ்ப்பாணத்தில் மிகவும் அச்சத்தின் மத்தியிலேயே வாழவேண்டியுள்ளது. இதை மாற்றவேண்டும். நாட்டைப் பாதுகாக்க 17ஆம் திகதி சிங்களவர்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும். சிங்களவர்கள் யார் என்பதைக்காட்டவேண்டும் என்று நயினாதீவு நாகவிகாரதிபதி வண. நவந் தகல பதுமகீர்த்தி தேரர் நேற்றுத் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் 61 பௌத்த மற்றும் சிவில் அமைப்புகள் நேற்று மஹிந்த ராஜபக்ஷவுடன் கைகோர்த்தன.இந்த நிகழ்வு கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நான் யாழ்ப்பாணத்தில் 42 வருடங்களாக வாழ்ந்துவருகின்றேன். அங்குள்ள நிலைமை என்ன என்பது எனக்குத்தான் நன்றாக தெரியும். ரணில் விக்கிரமசிங்க அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். ஈழம் முத்திரையிடப்பட்ட மேடையில் இருந்துதான் அவர் தேர்தல் பரப்புரை செய்தார். விஜயகலா மகேஸ்வரனும் இருந்தார். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்துவிட்டால் யாழ்ப்பாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களை எல்லாம் அகற்றுவதாக விஜயகலா கூறுகின்றார்.

கொழும்பு உள்ளிட்ட ஏனைய பகுதிகளிலிருந்து நயினாதீவுக்கு வரும் யாத்திரிகர்கள் தாக்கப்படுகின்றனர். அவர்களின் வாகனங்கள் சேதமாக்கப்படுகின்றன. நாம் மிகவும் அச்சத்துடன் வாழவேண்டியுள்ளது. இவ்வாறாக பாரிய விடயங்கள் அங்கு நடக்கின்றன. அச்சத்தின் மத்தியில் வாழும் நிலைமையை மாற்றவேண்டும். நாட்டைப் பாதுகாக்க சிங்களவர்கள் 17ஆம் திகதி வாக்களிக்கவேண்டும். சிங்களவர்கள் யார் என்பதைக் காட்டவேண்டும்-என்றார். (த-சி)

# அதிபர் பிரம்பு உடையும் வரை அடித்தார்; மாணவர்கள் மத்தியில் மைத்திரி

தான் பாடசாலையில் கல்வி கற்ற காலத்தில் தன்னை அதிபர் ஒருமுறை பிரம்பு உடையும் வரை அடித்ததாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நகைச்சுவையாக தெரிவித்துள்ளார்.

கொழும்பு அசோகா கல்லூரியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்-

புதிய அரசாங்கம் இலவச கல்வியை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கும். இலவச கல்வி முறையை மேலும் வலுப்படுத்தி, நாட்டின் பிள்ளைகளை புதிய தொழிற்நுட்பத்துடன் முன்னோக்கிச் செல்ல அரசாங்கம் என்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

சிறந்தது மாணவர்களுக்கு கிடைப்பது போல வர்த்தக சமூகத்தில் கெட்டவைகளையும் பெற்றுக் கொள்ள பிள்ளைகள் முயற்சிக்கின்றனர். கெட்டவைகளை பிள்ளைகள் தவிர்த்து கொள்ள வேண்டும்.

நான் படித்த தோப்பாவெள பாடசாலையின் ஆசிரியர்கள் எந்தளவுக்கு என்னை பிரம்புகளால் அடித்துள்ளனர் என்பது எனக்கு நினைவில் உள்ளது. அடிக்கும் போது வகுப்பில் பிள்ளைகள் சத்தமிடுவார்கள்.

அதனை பார்த்து கொண்டிருந்த பாடசாலை அதிபர் என்னை பிரம்பு உடையும் வரை அடித்திருந்தார்.ஆனால் வீட்டுக்கு சென்று ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை. கூறினால், அதனை விட தந்தையிடம் அதிகமாக அடி வாங்க வேண்டி வரும் என்று நான் அறிந்திருந்தேன். என்மீது எந்த தவறும் இல்லையொன்றாலும் ஆசிரியர் அடித்தார் என்பதற்காக எனது பெற்றோர் பொலிஸ் நிலையத்திற்கு செல்ல மாட்டார்கள். வேறு சட்டத்தையும் நாடமாட்டார்கள் எனவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்

### சிவப்பிரகாசம் சிவகுமார்

மண்டைதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் சிவகுமார் திங்கட்கிழமை கனடாவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவப்பிரகாசம்(ஆசிரியர்) ஜெயலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் புவனேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் ஜானகியின் அன்புக்கணவரும் றஜிதா, அனோஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திரகலா(கனடா), சிறிகுமாரன்(சுவிஸ்), ஜெயகௌரி(பிரான்ஸ்)காலஞ்சென்ற ஜெயகுமார் மற்றும் சசிகுமார் (லண்டன்), தவமலர் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி
84/1, கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(63792)

தகவல் :-
சகோதரர்கள்.
077 611 7068

### திருமதி அன்னம்மா குமாரசாமி



நீர்வேலி தெற்கு நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா குமாரசாமி நேற்று (03.08.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம் சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற குமாரசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் இராசையா சண்முகம், இராசம்மா, நடராஜா ஆகியோரின் சகோதரியும் குணவதியம்மா, பரமேஸ்வரி, நாகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான கந்தசாமி கனகரத்தினம் மற்றும் கருணாநிதி(ஓய்வுபெற்ற ஊழியர்நல்லூர் பிரதேசசபை), கனகலிங்கம் (பௌதீகவியல் துறை யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்,குமாரசாமி மற்றும் பாலசிங்கம், சிவஞானம் மகாலட்சுமி, குமுதினி ஆகியோரின் மாமியாரும் வசந்தா, சர்வானந்தம், தயாபரன், அருந்ததி, சற்குணேஸ்வரி, இதயகுமார், தனலட்சுமி, சந்திரகுமாரி, கமலேஸ்வரி, சிறிரங்கநாதன், நவநீதம், ரவிக்குமார், மகேஸ்வரன், சுகந்தினி, விக்கினேஸ்வரமூர்த்தி, நவராணி, பாலகிருஷ்ணன், பவானி, துஷ்யந்தி, யசோதா, ராதிகா, நிரஞ்சன், சியாமினி, சுதர்சினி, துர்க்கா, துசாந்தன், சுஜேந்தினி, கோகுலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நர்மதா, சிந்துஜா, காலஞ்சென்ற கீர்த்தீபன் மற்றும் சஜீவன்,டிசானா, டெனிக்கா, டெபோரா, அபிலாஷ், ரிசாந், கிசோர், இதயனி, இதயவேணி, கோபினாத், குருநாத், டிலீப்நாத், நிருஷன், சாதுஷன், காயத்திரி, சந்தியா, தட்சாயணி, விதுஷன், விபூஷணன், அபிலாஷ், அபிரா, அபிசா, மதுமிதன், கவிமித்திரா,லதுஷ், யஸ்வினி, சரணியன், கீர்த்தனி, மிதன், கிசான், துரிசா, தரணிகன், பவித்திரன், சந்தோஸ், சயிதன், கேசியன், சந்தனா, அபிராமி, கேதாரன், அருணங்கை, துவாரகா, ஓவியா, இலக்கியன், ஜெனோஸ், மதுஸ்,சயன், சரண் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2015) செவ்வாய்க்கிழமை மு.ப 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சியாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஒல்லை
நீர்வேலி தெற்கு
நீர்வேலி.

(63788)

தகவல் :-
குடும்பத்தினர்.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# மைத்திரி பக்கமே இ.தொ.கா ரணிலுக்கு முத்து நேற்று பதிலடி

கொழும்பு, ஓக.4

தான் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன பக்கமா அல்லது மஹிந்த பக்கமா என்பதை தொண்டமான் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்திருந்த சவாலுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நேற்று பதிலடி கொடுத்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வின் பக்கமே நிற்பதாக அக்கட்சியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள இலங் கைத்தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகத்தில் நேற்று இடம் பெற்றவிசேடஊடகச்சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:–

மலையக மக்களின் பெரும் ஆதரவு பெற்ற இலங்கைத் தொழிலா ளர் காங்கிரஸ் சிறிய கட்சி அல்ல. மலையக மக்களைப் பிரதி நிதித்துவப்படுத்தும் பிரதான கட்சி யாகும். அந்த அடிப்படையில் மலையக மக்களின் வீட்டுத்திட்டம், பொருளா தாரப் பிரச்சினை, சம்பளப் பிரச்சினை என்பவற்றை நீண்டகாலமாக கையா ண்டு வருகின்றோம்.

மலையக மக்களுக்கு முதன்முதலில் தனி வீட்டுத் திட்டத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தினோம். அத னைத் தொடர்ந்து ஆட்சியமைக்கும் பிர தானக் கட்சிகளுடன் இணைந்து இன்று வரை மலையக மக்களின் தேவை களைப் பூர்த்திசெய்து வந்துள்ளோம். நாங்கள் இன்று நேற்று தோற்றம் பெற்ற கட்சியல்ல.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் பல்வேறு காலகட்டங்களில் ஆட்சியமைக்க உதவியுள்ளோம். அத்துடன், ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியிலும் அங் கம் வகித்திருந்தோம். இதனை மறந்து அவர் தெரிவித்திருக்கும் கருத் தானது பெரும் வேதனைக்குரியது.

நாங்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சி மாத்திரமே. அதன் தலைமையுடன் தான் அன்று முதல் இருந்து வந்துள் ளோம். எனவே, இன்று அந்த முன்ன ணியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன. அவருடன் எமது மக்களின் பிரச்சினைத் தொடர்பில் வாய்மூல பேச்சுகள் நடந்துள்ளன.

இதற்கு அவரும் இணக்கம் வெளியிட் டுள்ளார். பொதுத் தேர்தலின் பின்னர் பெருந்தோட்டத்துறை மக்களின் சம்பளப் பிரச்சினைக்குத் தொழிற் சங்கங்களுடன் பேசி நிரந்தரத் தீர் வொன்று முன்வைக்கப்படும் என ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

எனவே, யார் ஆட்சியமைத் தாலும் ஜனாதிபதி மைத்திரிபால தலைமை யிலான அரசுதான் அமையும். அந்த வகையில் ரணில் விக்கிரமசிங்க வின் பேச்சு எங்களை வேதனைக்கு உள் ளாக்கியுள்ளதுடன், நகைப்புக்குரிய தாகவும் உள்ளது – என்றார். (த)



# மஹிந்த பின்னால் திரியும் யுவதி யார்?

கொழும்பு, ஓக. 4

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷவின் பின் னால், யுவதி ஒருவர் கோப்புகளை எடுத்துச் செல்லும் புகைப்படங்கள் கடந்த சில தினங்களாகச் சமூக வலைத் தளங்களில் வலம் வந்து கொண்டிருந்தன.

குறித்த யுவதி, அயேஷா மதுஷானி என்ற கலைஞர் எனவும், அவர் நடனக் குழுவொன்றை நடத்தி வருவதும் தெரியவந்துள்ளதாகச் சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது இந்த யுவதி மிகவும் பிரபலமாகி விட்டதாக வும் மஹிந்தவின் கோப்புகளை எடுத்துச் செல்லும் யுவதி என்றால் எல்லோருக்கும் தெரியும் எனவும் அந்த இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது. (த)

# சிறுமியுடன் இருந்த இளைஞன் கைது

சாவகச்சேரி, ஓக.4

கொடிகாமம் பிரதேசத்தில் 16 வயதுச் சிறுமி யுடன் சேர்ந்து வாழ்ந்த அதே இடத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச் சேரி நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொடிகாமம் கச்சாய் வீதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞனும், 16 வயதுடைய சிறுமியும் காணாமற்போனதையடுத்து சிறுமியின் பெற்றோர்களால் கொடிகாமம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட் டிருந்தது.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் குறித்த இளை ஞனும் சிறுமியும் சேர்ந்து வாழ்வதைக் கண்டறிந்து அவர்களைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்தினர்.

இதனால் சிறுமியின் தந்தை தீக்குளித்துள்ள நிலையில், சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், குறித்த இருவரையும் பொலி ஸார் நேற்றுச் சாவகச்சேரி நீதிவான் நீதி மன் றில் முற்படுத்தியபோது, குறித்த இளை ஞனை எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக் கமறியலில் வைக்க உத்தரவிட்ட பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை, சிறுமியை கைதடியிலுள்ள இரட்சணிய சேனை இல் லத்தில் அனுமதிக்குமாறும் தெரிவித்தார்.

மேலும், இருவரையும் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்குட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பணிப்புரை விடுத்தார். (த)

## 18ஆம் நாள் நினைவலைகள்



**செல்லையா சச்சிதானந்தன்**

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயுள்வேத வைத்தியராக கடமையாற்றும் சண்முகப்பிரியா அவர்களின் தந்தையின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தி னருக்கு எமது இதயபூர்வமான அனுதாபங் களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சேவையாற்றும் அரச சேவை ஆயுள்வேத வைத்தியர்களும், பணியாளர்களும்.

## கண்ணீர் அஞ்சலி

**பொன்னம்பலம் ஜெகநாதன்**



குப்பிளான் கற்கரைக் கற்பக விநாயகர் பெருமானது தொண்டராக சிறுவயது முதல் பணிபல செய்தும் பிற நாட்டிற்கு இடம்பெயர்ந்து சென்றும் குப்பிளான் மக்கள் மீளக்குடியமர்ந்த பின்பும் ஆலயப்புனர் நிர்மாண பணிகளிலும் தொண்டிலும் தீராப்பற்றுக் கொண்ட அடியவர் பொன்னம்பலம் ஜெகநாதன் அவர்களது மரணச்செய்தி கேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியடை வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய கற்கரைக் கற்பக விநாயகப் பெருமானை இறைஞ்சி நிற்கின்றோம்.

பரிபாலன சபை, குப்பிளான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலயம் குப்பிளான்.

## இதய அஞ்சலி



அருட்தந்தை
**செல்வராஜா**

சிறுவயதில் அருட்தந்தை செல்வராஜா அவர்கள் தோல கட்டி மடத்துக்குச் சென்று வண.தோமஸ் அடிகளாரின் அன்பை, அமைதியை சுவைத்து இறைபணியில் ஆர்வம் கொண்டவர்.

1958 ஆம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட் டார். 1966 ஆம் ஆண்டு தோலகட்டி ஆச்சிரமத்துக்கு தலைவராக நியமிக்கப்பட்டார்.

1969ஆம் ஆண்டு தோலகட்டி ஆச்சிரமத்தின் கிளை மடத்தை, அருள் ஆச்சிரம பணிகளை யாழ்ப்பாணத் துக்கு கொண்டுவந்தவர். 1971 இல் தோலகட்டி ஆச்சிரம வளர்ச்சிக்கு இளைஞர்களை சேர்ப்பதற்கு இளைஞர் இல்லத்தை ஆரம்பித்தவர்.


அவரின் பணிகளுக்கு நன்றி கூறுகின்ற வேளையில் அவருடைய ஆன்மா என்றும் இறைவனுடன் இன்புற்றிருக்க வேண்டுகின்றோம்.

**செபமாலைத்தாசர் சபை, செபமாலை கன்னியர் சபை.**

## இதயம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலி

**அருட்பணி.J.P.E.செல்வராஜா அடிகள்**

**( முன்னாள் பேராலய பங்குத்தந்தை, முன்னாள் குருமுதல்வர்)**



எமது யாழ் தூய மரியன்னை பேராலயத்தில் 10 வருடங்களுக்கு மேலாக உன்னதமான ஆன்மீக பணியாற்றி பங்கு மக்களின் ஆன்மீக வாழ்வை வளப்படுத்திய எம் அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய அருட்பணி J.P.E.செல்வராஜா அடிகளின் மறைவிற்கு எமது இதயம் நெகிழ்ந்த அஞ்சலிகளை செலுத்துவதோடு இவரின் பிரிவால் வருந்தும் அனைவருக்கும் எமது ஆறுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தூய மரியன்னை பேராலய கட்டுமாணப் பணியில் இவர் ஆற்றிய உன்னதமான பங்களிப்பையும் உழைப்பையும் நாம் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். இவரின் ஆன்மா இறை சந்நிதியில் இன்புற்றிருக்க மன்றாடுகின்றோம்.

**பங்குத்தந்தையர்களும் பங்கு மக்களும்**
**தூய மரியன்னை பேராலயம், யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி



1996 ஆம் ஆண்டில் இருந்து சமாதானத்துக்கும், நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் இணைச் செயலாளராக அரும்பணி ஆற்றிய
அருட்தந்தை
**J.P.E. செல்வராஜா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

**சமாதானத்துக்கும், நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு,**
**ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.**

(63784) (10.6)

## கண்ணீர்க் காணிக்கை



கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர் பங்கயற்செல்வன் அவர்களின் அன்புத் தந்தையும், எமது இல்லக் குழந்தைகளுக்கு கல்வி புகட்டும் ஆசிரியையான திருமதி கலைச் செல்வி அவர்களின் மாமனுமான

**கணபதிப்பிள்ளை அரசரத்தினம்**

அவர்கள் 01.08.2015 சனிக்கிழமை சிவபத மடைந்தமையையிட்டு இவரது இழப்பினால் ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் குடும்பத்தார், உறவினர்களுடன் நாமும் துயரினைப் பகிர்ந்துகொள்வதோடு, விதியின் கணக்கினை வென்றிட எம்மால் இயலாதே அதனால் அவர்தம் பிரிவுக்காக எங்கள் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் இழப்பு அவரது குடும்பத்தினருக்கு மட்டுமல்ல சமூகத்துக்கே பாரிய இழப்பாகும்.

"ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ மாநிலத்தீர் -வேண்டா!
நமக்கும் அதுவழியே! நாம் போம் அளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும்"

அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல உருத்திரபுரீசுவரனது திருவடியில் சங் கமமாகி நித்திய வாழ்வுபெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**தலைவர்-தி.இராசநாயகம், பணிப்பாளர்கள்,**
**பணியாளர்கள், இல்லக் குழந்தைகள்,**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி**

(C/11940) (10.6)

# கைபேசியைக் கைவிட்டு சென்ற கொள்ளையர்கள்

## கைது செய்தனர் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஓக 4

நள்ளிரவு வீடு புகுந்த கொள்ளையர் குடும்பஸ்தரைத் தாக்கிவிட்டு நகைகளைப் பறித்துச் சென்றுள்ளனர். எனினும் கொள்ளையர் கைத்தொலைபேசி ஒன்றையும் புகைப்படம் ஒன்றையும் சேர்ட்டுடன் தவறிவிட்டு விட்டனர். அதன் மூலமாக ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வரணி வடக்கு, தம்பானில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

4 பேர் கொண்ட கொள்ளையர் குழு ஒன்று குறித்த வீட்டில் நுழைந்துள்ளது. அதனை அந்த வீட்டு குடும்பஸ்தர் கண்டுள்ளார். அயலவர்களையும் சேர்ப்பதற்காக அவர் அந்த இடத்திலிருந்து நகர்ந்த போது அவரைக் கண்ட ஒரு கொள்ளையன் அவரைத் துரத்திச் சென்று பிடிக்க முற்பட்டுள்ளான். அதனால் அந்த இருவரும் மாறி மாறி அடிபட்டுக் கட்டிப் புரண்டு சண்டையிட்டனர். அதன்போது கொள்ளையன் குடும்பஸ்தரைக் கொட்டனால் தாக்கிக் காயப்படுத்தியுள்ளான் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மற்றைய 3 பேரும் அந்தக் குடும்பஸ்தரின் வீட்டினுள் புகுந்து குடும்பப் பெண் அணிந்திருந்த மோதிரத்தைப் பறித்துள்ளனர். தொடர்ந்து அங்கு தேடுதல் நடத்திக் கொண்டிருந்துள்ளனர். அதனால் ஏற்பட்ட பரபரப்பால் அயலவர்கள் ஒன்று கூடவே கொள்ளையர்கள் தப்பினால் போதும் என்று ஓடியுள்ளனர். அவர்கள் கொள்ளைக்குப் புறப்படும்போது தமது சேர்ட்டைக் கழற்றி அதில் தமது கைத்தொலைபேசியையும் மற்றும் புகைப்படம் ஒன்றையும் வைத்திருந்துள்ளனர். அயலவர்கள் ஒன்று கூடியதனால் அவர்கள் தப்பியோடியபோது அந்தச் சேர்ட்டைத் தவறுதலாக அங்கேயே போட்டுவிட்டார். அதனைக் கவனித்தாரோ இல்லையோ தப்பினால் போதும் என்று ஓடிவிட்டனர்.

அது தொடர்பில் கொடிகாமம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். அதன்போது கொள்ளையரது குறித்த ஆவணங்கள் தெரியவந்தன. மோப்ப நாய்களும் அங்கு கொண்டு செல்லப்பட்டு விசாரணை முன்னெடுக்கப்பட்டது. அதன் மூலமாகவே குறித்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அது தொடர்பில் விசாரணை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(த-4-122)

# கொட்டாஞ்சேனைச் சூடு; மேலும் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, கொட்டாஞ்சேனை, புளுமெண்டல் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்து வைத்திய சாலையில் சிகிச்சைபெற்றுவந்த மேலும் ஒருவர் நேற்று உயிரிழந் துள்ளார். இதனையடுத்து இந்தத் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இரண்டாக அதிகரித்துள்ளது.

புளச்சிங்கள நிரோஜன் சம்பத் என்ற நபரே நேற்று சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார் என்று கொழும்பு தேசிய வைத்திய சாலை பேச்சாளர் தெரிவித்தார்.

தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று அதிகாலை 3.50 மணியளவில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

நிதி அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான ரவி கருணாநாயக்கவின் ஆதரவாளர்கள் மீது கடந்த வெள்ளிக்கிழமை இனந்தெரியாத குழு மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் 14 பேர் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டபோது அதில் பெண் ஒருவர் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# உயர்தர மாணவர்களுக்கு அமைச்சு செயலர் வாழ்த்து

யாழ்ப்பாணம், ஓக.4

ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரச் செயலாளர் இ.இரவீந்திரன். இது தொடர்பில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் தனது வாழ்த்தைத் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில்,

காலத்தை அறிந்து தகுந்த கருவிகளுடன் நீங்கள் செய்த முயற்சிகள் என்றுமே வெற்றியைத் தரும் என்ற எதிர்பார்ப்புடன் பரீட்சைக்குச் செல்லும் வடபகுதி மாணவர்கள் 18ஆயிரத்து 701 பேருக்கும் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-10)

உதயன்
advt@uthayan.com
0215671111

**Personal Class**

தரம் 3 முதல் A/L வரையான மாணவர்களுக்கு English, Spoken with grammar, சிங்களம் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். ஏனைய பாட ஆசிரியர்களும் G.A.Q, B.A மாணவர்களுக்கும் ஒழுங்கு செய்து தரப்படும். தொடர்பு : பரமேஸ்வரார் சந்தி யாழ்ப்பாணம் T.P - 076 697 2737

**கடை,வீடு விற்பனைக்கு**

அரியாலை, 115, திருமகள் வீதியில் உள்ள 3 பரப்புக் காணி கடை, வீட்டுடன் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 675 5983
072 6620681

**தேவை**

யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி ஆகிய இடங்களில் அமைந்து இருக்கும் எமது அலுவலகங்களில் பணிபுரிவதற்கு A/L படித்த பெண் பிள்ளைகள் தேவை.
தொடர்பு - இல.89 கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
021 221 9442, 077 762 4526

**பதவி வெற்றிடங்கள்**

சர்வதேச ரீதியில் இயங்கும் எமது பல்தேசிய கம்பனியானது (D.M.I) தனது கிளைகளை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களில் ஆரம்பிக்கவுள்ளது. O/L படித்தவர்கள் தொடர்புகொள்ளவும்.
* அனுபவம் அவசியமற்றது
* வயதெல்லை 18-31
* மேற்பார்வையாளர், முகாமைத்துவ உதவியாளர், விற்பனை பிரதிநிதிகள்.
* தங்குமிடம் & உணவு வசதிகள் உண்டு.

தொடர்புகளுக்கு: 0772302795, 0773366453

**நம்பிக்கை இழக்காதீர்கள், அக்கறை காட்ட நாங்கள் இருக்கின்றோம்...**

**எம் மக்களால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மைத்திரியின் வெற்றிலைச் சின்னம்**

**அரச உத்தியோகத்தர் நிலை மேம்பாடு 180நாட்களுக்குள்......**

✔ ஜனாதிபதி மைத்திரி பாலா சிறிசேனாவினூடாக அரச உத்தியோகத்தருக்கான சம்பளம் ரூபா 25 ஆயிரமாக உயர்த்துவேன்.
✔ அரச உத்தியோகத்தர்களுக்கு வடமாகாணத்தில் நிலவுகின்ற தர உயர்வுகள், சம்பள அதிகரிப்புக்கள், பதவி வெற்றிடங்கள் என்பனவற்றை அரச சுற்று நிருபத்திற்கு ஏற்ப சரியான நேரத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.
✔ கடந்த காலங்களில் யுத்த பிரதேசங்களில் கடமையாற்றிய அரச உத்தியோகத்தர்களிற்கு புலி முத்திரை குத்தப்பட்டு பதவி உயர்வுகள் இல்லாமலும் பழிவாங்கப்பட்டவர்களிற்கும் கஸ்ட பிரதேசங்களில் மக்களுக்கு சேவையாற்றியவர்களிற்க்கும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியதற்கு ஏதுவாக விசேட அமைச்சரவை பத்திரம் சமர்ப்பித்து அவர்களின் பதவி உயர்வுகளிற்கும் வழி செய்வேன்.
✔ பட்டப்படிப்பினை முடித்து கடந்த யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு காலம் கடந்த நியமனத்திகதி இடப்பட்டு வழங்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின், ஆசிரியர்களின்,அரச உத்தியோகத்தர்களின் நியமனத்திகதியினை 3 வருடங்களிற்கு முன் நகர்'த்தி அவர்களின் வருடாந்த தர உயர்விற்கு நடவடிக்கை எடுப்பேன்.

**அங்கஜன் இராமநாதன்**

(ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திம குழு உறுப்பினர் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்)



புதிய நாடு – புதிய தலைவர் – புதிய தலைமுறை – புதிய எதிர்பார்ப்பு

## அரசியல்

நடைபெற்ற, விமல் வீரவன்ஸவின் போர் இல்லாத நாடு – நல்லாட்சியின் பின்னர் இரண்டாகும் நிலை, என்ற நூல் வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு கோத்தபாய தனது உரையில்–

வெள்ளை வான் கடத்தல், பாதாள உலக கொள்ளைக் கூட்டம் அனைத்தும் எம்மிடம் தான் உள்ளதென விமர்சித்தவர்கள் இன்று ஆட்சியை அமைத்துள்ளனர். ஆனால் இவர்களின் ஆட்சியில் என்ன நடக்கின்றது? இன்று பட்டப்பகலில் துப்பாக்கிச் சூடும், கடத்தல்களும் தாக்குதல் நடவடிக்கைகளும் நடைபெறுகின்றன. நல்லாட்சி என்ற இந்த ஆட்சியில் ஒரு தெளிவான கொள்கைத் திட்டம் இல்லாது போயுள்ளது.

தமது வேலைத் திட்டத்தை தெளிவாக இவர்களால் குறிப்பிட முடியாது. நல்லாட்சியில் இவர்களின் வேலைத்திட்டங்கள் நாட்டில் முழுமையாக சென்றடையவில்லை. எமது ஆட்சியில் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் வடக்கில் உண்மையான அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டது. வடக்கு தமிழ் மக்களின் உண்மையான ஜனநாயகத்தை நாம் பெற்றுக்கொடுத்தோம்.

அதேபோல் அநாவசியக் காணிகளை நாம் தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுத்தோம். ஆனால் எந்த சந்தர்ப்பத்திலும் நாம் நாட்டின் தேசிய பாதுகாப்பைப் பலவீனப் படுத்தவில்லை. இன்று நாட்டின் தேசிய பாதுகாப்பு மிகவும் அச்சுறுத்தலான நிலையில் உள்ளது. அரசியல் சுயநல வேலைத்திட்டங்களைக் கருத்தில் கொண்டு நாட்டின் தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்தி விட்டனர்.

நாம் புலிகள் இயக்கத்தை அழித்த போதிலும் புலிகளினால் போதனை வழங்கப்பட்ட அரசியல் புலிகளை நாம் அழிக்கவில்லை. அதன் விளைவு இன்று ஆட்சிமாற்றத்தின் பின்னர் நாடு மீண்டும் பிரிவினையின் பக்கம் நகர ஆரம்பித்துள்ளது.

எமது கட்டுப்பாட்டின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இருந்த போது நாடு அமைதியாக இருந்தது. ஆனால் இன்று நாம் இல்லாத நிலையில் மீண்டும் நாட்டில் கிளர்ச்சிகள் உருவாக ஆரம்பித்துள்ளன.

கடந்த பத்து ஆண்டுகளில் நாம் நாட்டைச் சரியான பாதையில் கொண்டு சென்றுள்ளோம். தேசிய பாதுகாப்பைச் சரியான வகையில் பலப்படுத்தியுள்ளோம். ஆனால் இந்த ஏழு மாத காலத்தில் நாடு மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. நாம் இந்த நாட்டில் ஆயுதக் கலாசாரத்தை முழுமையாக தடுத்திருந்தோம்.

அனைத்துலகப் புலிகள் அமைப்புகளை இலங்கை விடயங்களில் தலையிடவிடாது தடுத்திருந்தோம். ஆனால் இப்போது நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. மீண்டும் நாட்டில் ஆயுத கலாசாரம் தலை தூக்க ஆரம்பித்துள்ளது. தமிழ்ப் புலிகள் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளனர்.

எமது கட்டுப்பாட்டில் எவ்வாறு நாடு இருந்ததோ, அதே நிலைமை மீண்டும் உருவாக வேண்டும். வடக்கை எமது கட்டுபாட்டுக்குள் கொண்டு வந்து புலிகளின் தலையீட்டை முழுமையாக அழிக்க வேண்டும்.

போரின் மூலம் பிரபாகரன் அடைய நினைத்ததை இன்று அரசியல் சாணக்கியத்தின் மூலமாக அடைய முயற்சித்து வருகின்றனர். நாட்டைப் பிரிக்கும் வேலைத்திட்டத்தில் நெருங்கி விட்டனர். அவை அனைத்தையும் கட்டுப்படுத்த வேண்டும். நாட்டில் மீண்டும் ஜனநாயகத்தை உருவாக்க வேண்டும்.

மக்கள் உண்மையான ஜனநாயகத்தை உருவாக்க வேண்டுமென்றால் நாட்டின் சிங்கள மக்கள் அனைவரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வாக்களிக்க வேண்டும்– எனக் குறிப்பிட்டார். (த)

## கல்வி

தினம் ஆரம்பமானது. கல்வித் திணைக்களத்தினர் மற்றும் பொலிஸாருக்கான தபால் மூல வாக்களிப்பே நேற்று இடம்பெற்றது. வடக்கில் தபால்மூல வாக்களிப்பு சுமுகமாக இடம்பெற்றதாகத் தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தபால்மூல வாக்களிப்பு இடம்பெறும் நிலையத்துக்கு அருகில் தேர்தல் பரப்புரைச் சுவரொட்டிகளோ, கட்டவுட்களோ வைக்கப்படக் கூடாது என்றபோதும், அதனையும் மீறி வடமராட்சி கல்வி வலயத்துக்கு அண்மையில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் இரவுடன் இரவாக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினதும், ஈ.பி.டி.பி.யினதும் சுவரொட்டிகள் அந்தப் பகுதியில் ஒட்டப்பட்டிருந்தன.

அவற்றை அகற்றுவதற்கு பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதுடன், அந்தச் சுவரொட்டி நேற்றைய தினம் முழுவதும் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த–5)

## கௌரவமாக

குடும்பத்தினரின் சார்பில், கோத்தபாய ராஜபக்ஷ கோரிக்கை விடுத்திருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும் இந்தக் கோரிக்கைக்கு ஜனாதிபதிசாதகமான பதிலை அளிக்கவில்லை என்றும் ஆங்கில ஊடகங்கள் குறிப்பிட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (த–5)

## கொழும்பில்

வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் நேற்று அதிகாலை பேஸ்லைன் வீதியில் குறித்த வாகனத்தைக் கைப்பற்றியதோடு அதில் பயணித்த 6 பேரையும் கைது செய்துள்ளனர்.

குறித்த வாகனத்திலிருந்து கத்தி மற்றும் இரும்புக் கம்பிகள் ஆகியவற்றையும் பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

தேர்தல் காலமென்பதால் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக கொழும்பு பிரதேசத்தில் அசம்பாவிதங்கள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதால், கொழும்பின் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு ஏற்கனவே அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## தமிழ்க்

தற்கும், கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தும் முயற்சியிலும் மஹிந்த ராஜபக்ஷ ஈடுபட்டு வந்துள்ளார்.

ஒரு காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிளவுபடுத்த முடியுமா என்று அவர் முயற்சித்திருந்தார். அதேபோல ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளுக்குள் பிளவுபடுத்த முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக பொறுப்பேற்றதன் பின்னர் அந்தக் கட்சியையும் பிளவுபடுத்த முயற்சித்துள்ளார்.

சுயநோக்கத்திற்காக தமது சொந்தக் கட்சியையும் பிளவுபடுத்த அவர் பின்நிற்கப்போவதில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இன்று இரண்டாகப் பிளவடைந்திருக்கின்றது.

மஹிந்த ராஜபக்ஷ பிரதமராவதற்கான முயற்சி ஒருபக்கம் இருக்கட்டும். ஆனால், அவர் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தல் குழுவும்கூட இன்று பிளவுபட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்கும் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ளவும் சில உறுப்பினர்கள் பயப்படுகின்றனர். ஏனென்றால், அண்மைக் காலங்களில் மஹிந்த ராஜபக்ஷவின் பிரசாரக் கூட்டங்களில் மக்கள் கூச்சலிட்ட சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

தோல்வியுற்ற மக்களால் தோற்கடிக்கப்பட்ட ஒருவர் மீண்டும் அரசியலுக்கோ அல்லது தலை மைத்துவத்திற்கோ வருவதை வாக்காளர்களால் ஏற்றுக்கொள்ள முடியாதிருப்பதை அந்தச் சம்பவங்கள் உணர்த்துகின்றன'–என்றார்.(த–சி)

## படை

விடுக்கப்பட்டுள்ளது.

பிரிகேடியர் மற்றும் அதற்கு மேற்பட்ட பதவி நிலைகளில் உள்ள அதிகாரிகள் தமது அதிகாரபூர்வ வாகனங்களிலோ. வாகனத் தொடரணியிலோ பொதுமக்கள் பயன்படுத்தும் இலக்கத் தகடுகளைப் பயன்படுத்தக் கூடாது.

குறிப்பிட்ட அதிகாரிகள் தமது வதிவிடத்தை அடைந்த பின்னர், தமது வாகனத்தை அருகிலுள்ள இராணுவ முகாமுக்குத் திருப்பி அனுப்ப வேண்டும். அருகில் இராணுவ முகாம் எதுவும் இல்லாது போனால், பொலிஸ் நிலையத்தில் குறிப்பிட்ட வாகனத்தை நிறுத்த வேண்டும் என்றும் இராணுவத் தளபதி உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, வெள்ளைவான் விவகாரத்தினால், மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா தனது பதவியை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த–5)

## வடக்கு – கிழக்கை

டைப் பிரிப்பதற்கோ, பிளவுபடுத்துவதற்கோ இடமளிக்கமாட்டோம். எது நடந்தாலும் ஐக்கிய இலங்கைக் குள்ளேயே நடக்கவேண்டும். மீண்டும் பின்னோக்கிச் செல்ல முடியாது எனவும் மஹிந்த சூளுரைத்தார்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் 61 பௌத்த மற்றும் சிவில் அமைப்புகள் நேற்று மஹிந்த ராஜபக்ஷவுடன் கை கோர்த்தன. இந்த நிகழ்வு கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் கூறியவை வருமாறு:–

நாட்டுக்கு எதிரானவர்கள் வெளிநாட்டவர்களின் டொலர்களுக்காக எம்மைத் தோற்கடிக்க முயற்சிக்கும் சந்தர்ப்பத்தில் நாட்டை நேசிக்கும் நீங்கள் எம்முடன் கைகோர்ப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். நாட்டு மக்களும், இளைஞர்களும், இராணுவத்தினரும், தேரர்களும் துன்புறுத்தப்பட்டதை நான் ஞாபகப்படுத்தத் தேவையில்லை.

நான் நாட்டைக் கையளித்தபோது நாடு எப்படியிருந்தது சமாதானமும், ஒற்றுமையும் கட்டியெழுப்பப் பட்டிருந்தது. மக்கள் அச்சம், பீதியின்றி வாழக்கூடிய நிலைமை இருந்தன. நாட்டின் தேசிய பொருளாதாரம் உயர்மட்டத்தில் இருந்தது. அனைவரும் சுகபோக வாழ்க்கை வாழும் நிலை இருந்தது. அபிவிருத்திப் பணிகளில் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மலையகம் என பிரிவினை பார்க்கவில்லை. அனைத்துப் பகுதிகளையும் அபிவிருத்தி செய்தேன்.

ஆனால், இன்று எமக்கு அச்சமாக உள்ளது. எமது நாடு பறிபோகப் போகின்றது. மீண்டும் பின்நோக்கிச் செல்லப்போகின்றோம். ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் விக்கிரமசிங்க தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் என்ன கூறியுள்ளார்? இலங்கையை புதிய நாடாக்கப் போகின்றாராம். புதிய நாடு என்றால் என்ன? வடக்கு, கிழக்கு இல்லாமல் போகும். இவை இல்லாத வரைபடம் உருவாக்கப்படும். வடக்கு, கிழக்கு இல்லாத நாடுதான் எமக்கு மிஞ்சும். இதுதான் ரணிலின் புதிய நாடு. இதை உருவாக்குவதாகத்தான் அவர் வாக்குறுதியளித்ததுள்ளார். அதை நிறைவேற்றுவார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பும் சமஷ்டி தீர்வு வேண்டும் எனக் கூறுகின்றது. இதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ரணில் என்ன உடன்படிக்கை செய்துள்ளார் என்பது தெரியவில்லை. நாடு எமக்கு இல்லாமல் போனால், மீண்டும் அதைக் கட்டியெழுப்ப முடியுமா? ஒரே நாடு என்பதே எமது எண்ணம். நாட்டில் அனைவரும் ஒன்றாக வாழவேண்டும். ஐக்கிய இலங்கை யைப் பிரிப்பதற்கு நாம் இடமளிக்க மாட்டோம்–என்றார். (த–சி)

## சிறுமியை

பெற்றது. சந்தேக நபராகக் கைது செய்யப்பட்ட நபர் 3 வருடங்கள் விளக்கமறியலில் வைக் கப்பட்டுப் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். அவருக்கு எதிராகச் சட்டமா அதிபர் திணைக்களத்தால் 2009 ஆம் ஆண்டு டிசெம்பர் 22 ஆம் திகதி யாழ்.மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அது தொடர்பான விசாரணையில் குறித்த நபர் தான் தன்னை வன்புணர்ந்தார் என்று பாதிக்கப்பட்ட சிறுமி சாட்சியமளித்தார். வன்புணர்வுக் குற்றம் புரிந்ததை குறித்த இளைஞரும் நீதிமன்றில் ஒப்புக் கொண்டார்.

எதிரி சார்பில் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி, குற்றச் செயல் இடம்பெற்றபோது, எதிரிக்கு 16 வயது. பதினாறு வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட பதின்பராயமுடைய ஆண் வன்புணர்வில் ஈடுபட்டால், அவருக்குத் தண்டனைக் குறைப்பு உள்ளது என்று சுட்டிக்காட்டி, எதிரிக்குக் குறைந்தபட்ச தண்டனை வழங்க வேண்டும் என விண்ணப்பம் செய்தார்.

எனினும் இந்த குற்றத்துக்குப் 10 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்க வேண்டும் என்று சட்டம் பரிந்துரைக்கின்றது. குறைந்தபட்ச தண்டனை பரிந்துரைக்கப்படவில்லை. எனவே, எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று அரச சட்டத்தரணி நீதிமன்றத்தில் சமர்ப்பணம் செய்தார்.

இதனையடுத்து இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி இளஞ்செழியன் தனது தீர்ப்பில் தெரிவித்ததாவது:–

எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார். விசாரணை நடைபெற்ற போது, எதிரி தடுத்து வைக்கப்பட்டிருந்த 3 ஆண்டுகள் விளக்கமறியல் காலமும் கவனத்தில் கொள்ளப்படுகின்றது. எதிரி 16 வயதிலேயே குற்றம் புரிந்தார் என்பதும் கவனத்தில் எடுக்கப்படுகின்றது. குற்றம் புரிந்த போது எதிரி 16 வயதுச் சிறுவன் என்பதால் அவருக்கு 5 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டது.

அத்துடன் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு, குற்றவாளி 20 ஆயிரம் ரூபா நட்டஈடு செலுத்தவேண்டும் என்றும் குற்றவாளி அதனைச் செலுத்தத் தவறின் 6 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் அபராதமாக அவர் 5 ஆயிரம் ரூபா செலுத்தவேண்டும் என்றும் அதனைச் செலுத்தத் தவறின் 3 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பில் தெரிவித்தார். (த–4)

## பொங்கு தமிழ்

அமர்ந்திருந்த போது வே.பிரபாகரன் பற்றி அதிக மாகப் பேசப்பட்டது. அதன்போது அங்கு கூடியிருந்தோர் கரகோஷம் எழுப்பி ஆரவாரித்திருந்தனர். இந்த நிகழ்வைப் பார்க்கும் போது தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் பிரபாகரன் மீண்டும் அவதாரம் எடுத்துள்ளார் என்ற நிலைமையே உள்ளது. இந்தக் கூட்டம் பொங்குதமிழ் நிகழ்வு போன்றே இருந்தது.

இவ்வாறு முன்னாள் இராஜதந்திரியும், மஹிந்தவின் ஆதரவாளருமான தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையில், இணைந்த வட – கிழக்கில் சுயநிர்ணய அடிப்படையிலான சமஷ்டி முறையிலேயே அரசியல் தீர்வு கிடைக்கவேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. சமஷ்டி என்ற விடயத்திற்கு நாம் எதிரானவர்களல்ல. சமஷ்டி என்பது பல்வேறு வகையில் காணப்படும் ஆட்சி முறையாகும். சர்வதேசத்தில் சமஷ்டி அடிப்படையிலான ஆட்சி நடைபெறும் நாடுகள் பலவுள்ளன. குறிப்பாகக் கூறுவதானால் எமது அண்டை நாடான இந்தியாவில் கூட சமஷ்டி அடிப்படையிலான ஆட்சி முறையே காணப்படுகின்றது. பிராந்தியங்களுக்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறிருக்கையில் சமஷ்டியை மட்டும் அடிப்படையாகக் கொண்ட தீர்வுக் கோரிக்கையை முன்வைக்கும் பட்சத்தில் நாம் அது குறித்துப் பேசத் தயாராகவுள்ளோம்.

ஆனால் சுயநிர்ணய உரிமை என்ற விடயத்தை ஏற்கமுடியாது. ஐக்கிய இலங்கையை பிளவுபடுத்தும் விடயமாகும். இணைந்த வடக்கு – கிழக்கில் சுயநிர்ணய உரிமை என்ற கோரிக்கை பிரிவினையையே குறித்து நிற்கின்றது. இதனையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள்னர். ஆகவே அவர்களின் கோரிக்கை பிரிவினையில் அடிப்படையிலேயே அமைந்துள்ளது.

அதேநேரம் எமது அண்டை நாடான இந்தியாவை எடுத்துக் கொண்டால் அதிகமான தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் கூட சுயநிர்ணய உரிமையைக் கோரவில்லை. அதே நேரம் காஷ்மீர் பிரதேசத்தில் கூட சுயநிர்ணய உரிமை கோரிக்கை காணப்படவில்லை. சர்வதேசத்தில் எதியோப்பியாவில் கூட சமஷ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்ட போது சுயநிர்ணய உரிமையைக் கோரவில்லை. அவ்வாறிருக்கையில் சமஷ்டிக்குள் சுயநிர்ணய உரிமை கோரப்படுவதானது வேறொரு உள்நோக்கத்திற்காகவேயாகும்.

இதே வேளை ஜுலை 25 ஆம் திகதி மருதனார்மடத்தில் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை வெளியிடும் நிகழ்வில் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்ற நிலைப்பாட்டிலிருக்கும், கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மேடையில் அமர்ந்திருந்த போது பிரபாகரன் பற்றி அதிகமாக பேசப்பட்டது.

அதன் போது அங்கு கூடியிருந்தோர் கரகோஷம் எழுப்பி ஆரவாரித்திருந்தனர். இந்த நிகழ்வைப் பார்க்கும் போது தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் பிரபாகரன் மீண்டும் அவதாரம் எடுத்துள்ளார் என்ற நிலைமையே உள்ளது. இந்தக் கூட்டத்தில் சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்த எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தொடர்பாக எவரும் பேசவில்லை. பிரிவினையைக் கோரிய பிரபாகரன் தொடர்பிலேயே அதிகமாகப் பேசினர். இந்தக் கூட்டம் பொங்குதமிழ் நிகழ்வு போன்றே இருந்தது – என்றார். (த–5)

## ஐ.தே.க

பட்டுள்ளது. எனினும், இந்தச் சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசேட அதிரடிப்படையினரின் உத்தரவை கவனிக்காது குறித்த வாகனம் பயணித்ததையடுத்து பன்னல, வில்கெதர பிரதேசத் தில் வைத்து இந்தத் துப்பாக் கிப்பிரயோகம் மேற் கொள்ளப்பட்டுள்ளது. (த)

## சஜினின் மனு ஓகஸ்ட் 10 வரை ஒத்திவைப்பு



கொழும்பு, ஓக. 4
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன சார்பில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு, ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
தன்னைக் கைது செய்தமை மற்றும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை அடிப்படை உரிமை மீறல் என அறிவிக்குமாறு கோரி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன சார்பில் மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.
ஜனாதிபதி செயலக வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட சஜின் வாஸ் குணவர்த்தன, நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
இது தொடர்பிலான விசாரணை நேற்றுத் திங்கட்கிழமை எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சந்தேக நபரை பிணையில் விடுதலை செய்வதற்கு சட்டமா அதிபர் ஆட்சேபனை தெரிவித்திருந்தார். (த)

# நாமலுக்கு அரசியல் பாடம் புகட்டுவதற்கு நான் தயார்

### சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 4
நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிடும் மஹிந்தவின் மகன் நாமல் ராஜபக் ஷவுக்கு அரசியல் தொடர்பிலான அறிவு இல்லை என அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.
சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் வழங்கியுள்ள செவ்வியில்,
நாமலுக்கு அரசியல் விழிப்புணர்வு இல்லாமையினால் அவருக்கு மேலதிக வகுப்புக்களை வழங்குவதற்கு நான் தயாராக இருக்கிறேன்.
பொது மக்களின் பாதுகாப்பு அரசியல்வாதிகளின் பொறுப்பு. நாங்கள் செய்யும் நல்ல வேலைகளினால் பொறாமையில் போலியான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தாமல் தங்கள் பாடங்களை மாத்திரம் கற்றுக் கொள்ளுமாறு அரசியல்வாதிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன்.



சாதாரண மக்களின் வியர்வையினை அறிந்து கொண்டு செயற்பட வேண்டும். மக்களின் தேவைகளை நாங்கள் அறிந்து அதனை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் –என்று கூறியுள்ளார். (த)

## தாஜுதீனின் உடலைப் புதைத்த இடத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு

கொழும்பு, ஓக. 4
பற்களையும் விலா எலும்பையும் உடைத்துக் கடும் சித்திரவதைகளுக்குள்ளாக்கி படுகொலை செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படும் பிரபல றகர் விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீனின் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடத்திற்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளது.
தெஹிவளை வைத்தியசாலை வீதியில் உள்ள பள்ளிவாசல் அருகில் இருக்கும் மையவாடியில் தாஜுதீனின் சடலம் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.
இந்தச் சடலம் மீண்டும் தோண்டியெடுக்கப்பட்டு பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப் படவுள்ளது.
தாஜுதீன் 2012ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி கொலை செய்யப்பட்டார். அவர் வாகன விபத்தில் இறந்ததாக பொலிஸார் அப்போது கூறியிருந்தனர்.
இந்தக் கொலையுடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர் யோஷித்த ராஜபக்ஷவுக்குத் தொடர்பிருப்பதாகவும் பேசப்பட்டது.
மீண்டும் பிரேத பரிசோதனைக்காக சடலம் தோண்டி எடுக்கப்படவுள்ள நிலையில், அதனை எவராவது முன்னதாகவே எடுத்து அகற்றி விடலாம் என்ற சந்தேகத்தின்பேரில் சடலம் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடத்திற்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (த)

## அரச ஊழியர்களுக்காக 5 வருட சம்பளமற்ற லீவு

### பிரதமர் ரணில் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 4
அரச ஊழியர்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு சம்பளமற்ற விடுமுறை வழங்கப்படும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.
அத்துடன் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று தமது அரசு ஆட்சியமைத்த பின்னர், அண்மையில் புதிய அரசின் இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்ட 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பானது செப்ரெம்பர் மாதச் சம்பளத்துடன் அதிகரிக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.
தற்போதைய ஆட்சிக் காலத்தில் அரச ஊழியர்கள் சுயாதீனமாகக் கடமையாற்றக்கூடிய தன்மை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள பிரதமர் ரணில், கடந்த ஆட்சிக் காலத்தில் இவ்வாறான ஒரு சூழ்நிலை ஏற்படவில்லையெனத் தெரிவித்தார்.
அத்துடன், போர் முடிவடைந்த பின்னர் நாட்டில் அபிவிருத்தி ஏற்படவில்லையெனவும், போரின் பலன்கள் மக்களைச் சென்றடையவில்லையெனவும் ரணில் குறிப்பிட்டுள்ளார். (த)

## சுவரொட்டிப் போர் உக்கிரம்

கொழும்பு, ஓக. 4
நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் ஆதரவாளர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் கடந்த சில நாள்களாகவே தினமும் சுவரொட்டி தொடர்பான இழுபறிப்போர் ஒன்று நடந்து வருகிறது. இது தற்போது உக்கிரமடைந்துள்ளது.
நாடாளுமன்றத் தேர்தல் சட்டங்களின்படி, வேட்பாளர்கள் சுவரொட்டிகளை ஒட்டவோ, பதாகைகளைக் காட்சிப்படுத்தவோ கூடாது. இந்த விதிமுறையைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் எவரும் பின்பற்றுவதாக இல்லை.
வடக்கு, தெற்கு என்று முழுவதிலும், சுவரொட்டிப் பரப்புரைகள் நடந்துவருகின்றன. ஆங்காங்கே பொலிஸாரிடம் சிலர் பிடிபட்டாலும், வேட்பாளர்கள் தமது விருப்பு வாக்குகளை அதிகரித்துக் கொள்வதற்காகச் சுவரொட்டிப் பரப்புரைப் போரில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.
இந்நிலையில், வேட்பாளர்களின் பரப்புரைச் சுவரொட்டிகளை அகற்றுவதற்கு ஆள்களைப் பணிக்கு அமர்த்தி நடவடிக்கைகளை எடுப்பதற்கு 75 மில்லியன் ரூபாவைத் தேர்தல்கள் திணைக்களம் ஒதுக்கியுள்ளது.
இரவாடு இரவாக வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் சுவரொட்டிகளை ஒட்டிச்சென்ற பின்னர், காலையில் பொலிஸார் சென்று அவற்றை அகற்றுகின்றனர். நாடு முழுவதும் இது நாளாந்த நடவடிக்கையாக மாறியிருக்கிறது. (த)




பொது இடங்களில் இருந்து 150 மீற்றருக்கு அப்பால் மட்டுமே கட்சிகளின் அலுவலகம் அமைக்கப்படும் எனத் தேர்தல் செயலகச் சட்டம் கூறுகின்றபோதும் வல்வெட்டித்துறையில் பாடசாலை ஒன்றின் மதில் அருகே அமைக்கப்பட்டுள்ள கட்சி அலுவலகம். (த–101)

## மைத்திரி-ரணிலை சித்தரிக்கும் ஓவியம் அபயகிரி விகாரையில்



கொழும்பு, ஓக. 4
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரை சித்தரிக்கும் சுவரோவியங்கள், அபயகிரி விஹாரையில் தீட்டப்பட்டுள்ளன.
அபயகிரி விகாரையின் தாது கோபத்தை ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான குழுவினர் வழிபடுவதை போல, குறித்த ஓவியம் சித்திரிக்கப்பட்டுள்ளது.
அபயகிரி விகாரையின் விகாராதிபதி [illegible] தேரரால் இந்த ஓவியம் வரையப்பட்டுள்ளது.
கடந்த 1997ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட அபயகிரி விகாரையின் தாது கோபமானது அண்மையில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.
புனர்நிர்மாணம் செய்யப்பட்ட தாது கோபத்துக்குக் கடந்த வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்ட எசல பௌர்ணமி தினத்தில் ஜனாதிபதியால் முதலாவதாக சிறப்பு பூஜை வழிபாடுகள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

## தேர்தலில் பிள்ளையான் தோற்றாலும் ஆசனமாம்?

கொழும்பு, ஓக. 4
தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவனேசதுரை சந்திரகாந்தனுக்கு, தேசிய பட்டியல் ஊடாக ஆசனம் ஒன்றை வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இது தொடர்பில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் இடையில் இணக்கப்பாடு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.
தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி எதிர்வரும் பொதுத் தேர்தலில் தனித்துப் போட்டியிட தீர்மானித்திருந்தபோதும், பின்னர் ஐ.ம.சு.முவுடன் உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொண்டு அதனூடாகப் போட்டியிட தீர்மானித்ததாகக் கட்சியின் வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.



இந்நிலையில், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பிள்ளையான் தோற்றாலும்கூட, தேசிய பட்டியல் ஊடாக அவருக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் நாடாளுமன்ற உறுப்புரிமை கிடைக்கும் எனக் கூறப்படுகிறது. (த)

## வசந்த பெரேராவுக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஓக. 4
ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் மாத்தளை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் வசந்த பெரேராவை எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாத்தளை நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.
ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவாளர் ஒருவரைக் கடத்திச்சென்று அவரை மாத்தளையிலுள்ள பிரதேசமொன்றில் வைத்துத் தாக்கியதாக, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்த நிலையில் அவர் நேற்றுக் காலை மாத்தளை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (த)

# மன்னாரில் மகுடம் சூடியது ஜின்னா அணி

மன்னார், ஓக. 4
மன்னார் தோட்டவெளி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திவந்த கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது தாராபுரம் ஜின்னா விளையாட்டுக் கழகம்.

நேற்று முந்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு தோட்ட வெளி சென்.பீற்றர்ஸ் கழக மைதானத்தில் நடைபெற்ற குறித்த ஆட்டத்தில் ஆரம்பம் முதல் கடும் போராட்டம் நிலைபெற்றிருந்தது. முதல் செற்றை ஒரு அணி கைப் பற்றுவதும் அடுத்த செற்றை மற்றைய அணி கைப் பற்றுவதுமாக இருக்க நான்கு செற்களின் முடிவில் இரு அணிகளும் தலா 2 செற்களைக் கைப் பற்றி 2:2 என்று சம நிலை வகித்தன. இதனால் கிண்ணத்தைக் கைப்பற்றப் போகும் அணி எதுவென்பதைக் கணிக்கும் முடிவு இறுதி செற்றில் தஞ்சமடைந்திருந்தது. வாழ்வா சாவா நிலைமையில் களத்தில் இரண்டு அணிகளும். முடிவில் தோட்டவெளி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகத்தை அதன் சொந்தத் தொடரில் வீழ்த்தி 3:2 என்ற அடிப்படையில் சம்பியனானது ஜின்னா விளையாட்டுக் கழகம்.





குறித்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு அன்ரனி விக்டர் சூசையும் சிறப்பு விருந்தினர்களாக பங்குத்தந்தை அருட்தந்தை மரியதாசன் குரூஸ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ்.வினோ நோகராதலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர் வைத்தியகலாநிதி ஜீ.குணசீலன் ஆகியோர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ம-56)

## இன்றைய ஆட்டங்கள்

***மறுமலர்ச்சி வி.கழகத்தொடர்***
யாழ்ப்பாணம், ஓக. 4
யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் கோண்டாவில் மறு மலர்ச்சி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் நவாலி தென்றல் அணியை எதிர்த்து சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் அணி மோதவுள்ளது.

***விக்னேஸ்வரா வி.கழகத்தொடர்***
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனு மதியுடன் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொலின்ஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதவுள்ளது.

***கழுகுகள் வி.கழகத்தொடர்***
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் வடமாகண ரீதியாக நடந்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் இன்று செவ்வாய் கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து மன்னார் குறோஸ்ரார் அணி மோதவுள்ளது. பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் அந்தோனியார் புரம் அணியை எதிர்த்து திக் கம் அணி மோவுள்ளது.(ம-23-108)

## யாழ். மாவட்ட கழகங்களை தரப்படுத்தும் ஆட்டம் ஆரம்பம்

வலி வடக்கு ஓக. 4
யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் யாழ். மாவட்டத்திலுள்ள கழக அணிகளை தரப்படுத்தும் வகையில் 50 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட தொடர் நடத்தப் படவுள்ளது.
யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்துள்ள 24 கழகங்களும் எட்டுக் குழுக்காளாக பிரிக்கப்பட்டு இந்த ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. இதன்படி ஒரு குழுவில் தலா 3 அணிகள் இடம்பிடிக்கும்.
ஒவ்வொரு அணியும் தலா இரண்டு ஆட்டங்களில் மோதவுள்ளன. இதில் இரண்டு ஆட்டங்களிலும் தோல்வியுறும் எட்டு அணிகள் 'சி' பிரிவிலும் இரண்டாம் சுற்றில் விளையாடி தோல்வியுறும் எட்டு அணிகள் 'பி' பிரிவிலும் காலிறுதிக்கு முன்னேறிய எட்டு அணிகளும் 'ஏ' பிரிவிலும் தரப்படுத்தப் படும்.
இந்த வகையில் எட்டுக் குழக்களில் இடம் பெற்றுள்ள அணிகளின் விவரம் வருமாறு.
முதலாவது குழுவில் யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம், சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம்.
இரண்டாவது குழுவில் யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழகம், அரியாலை ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாணம் மணல்தறை றெயின்போ விளையாட்டுக் கழகம்.
மூன்றாவது குழுவில் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க விளையாட்டுக் கழகம் (வை.எம்.ஏச்.எ), மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகம், சாவகச்சேரி டிறிபேக் விளையாட்டுக் கழகம்.
நான்காவது குழுவில் தெல்லிப்பழை கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழகம், கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம், (கே.சி.சி.சி.) யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம்.
ஐந்தாவது குழுவில் சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகம், அரியாலை மத்திய விளையாட்டுக் கழகம், திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக்கழகம்
ஆறாவது குழுவில் வட்டுக்கோட்டை ஒல்ட் கோல்ட்ஸ்; விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாணம் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம், வலிகாமம் யங் ஸ்ரார் விளையாட்டுக் கழகம்.
ஏழாவது குழுவில் வண்ணார் பண்னை ஸ்ரீ காமாட்சியம்பாள் விளையாட்டுக் கழகம், தெல்லிப்பழை யூனியன்ஸ் விளையாட்டுக் கழகம், பருத்தித்துறை ஹாட்லிஸ் விளையாட்டுக் கழகம்.
எட்டாவது குழுவில் கந்தர்மடம் நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாணம் குருநகர் விங்ஸ் விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டுக் கழகம்
ஆகியன இடம் பெற்றுள்ளதாக யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர் எஸ். விமலதாசன் தெரிவித்துள்ளார். (ம-86)

## பெண்களுக்கான உதைபந்தாட்டம்
# நக்கீரன் அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 4
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தொண்டமானாறு கலைவாணி சனசமூக நிலையத்தின், 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கலைவாணி விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடந்தும் அணிக்கு 9 வீராங்கனைகள் பங்குபற்றும் பெண்களுக்கான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நக்கீரன் அணியை எதிர்த்து புங்குடுதீவு சண்ஸ்ரார் அணி மோதிக் கொண்டது. இதில் நக்கீரன் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



## கலைமதியை வீழ்த்தியது நக்கீரன்

யாழ்ப்பாணம், ஓக. 4
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தொண்டமானாறு கலைவாணி சனசமூக நிலையத்தின், 25ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு கலைவாணி விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய வலைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் நக்கீரன் அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.
நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் நக்கீரன் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதிக்கொண்டது. இதில் நக்கீரன் அணி 13:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

## போராடி வெற்றிபெற்றது ஞானமுருகன்

யாழ்ப்பாணம், ஓக. 4
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் எல்லாளன் அணியை எதிர்த்து ஞானமுருகன் அணி மோதிக்கொண்டது. இதில் ஞானமுருகன் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் வடமாகாணத்திலுள்ள நிதி நிறுவனங்களுக்கிடையில் நடத்தப்பட்ட நட்பு ரீதியிலான துடுப்பாட்டத் தொடரில் சம்பியனாகிய இலங்கை வங்கி.....

## அன்ரனிஸை அடித்து நொருக்கியது சொலிட்

யாழ்ப்பாணம், ஓக. 4
பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் அனுராதபுரம் சொலிட் உதைபந்தாட்ட அணிக்கும் இடையிலான நட்பு ரீதியிலான உதைபந்தாட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றது. இதில் அனுரதபுரம் சொலிட் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)




# விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை

பாகிஸ்தான் அணிக்கு எதிரான தொடர்களில் இலங்கை அடைந்த தோல்விக்கு தன்னுடைய மோசமான செயல்பாடுதான் காரணம் என்றும் தொடர் தோல்விகள் வருத்தமளிப்பதாகவும் இலங்கை அணியின் நட்சத்திரப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க கவலை தெரிவித்துள்ளார்.

இலங்கை – பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஒருநாள், டெஸ்ட், ரி–20 என்று மூன்றுவிதமான தொடர்களையும் பாகிஸ்தான் கைப்பற்றியது. இத்தனைக்கும் தொடர்கள் பாகிஸ்தானிலோ அல்லது வேறெந்த மைதானத்திலோ நடைபெறவில்லை. இலங்கையிலேயே அனைத்தும் நடைபெற்றன.

சொந்த மண்ணில் தொடர்களை இழந்தமை தொடர்பாக மலிங்க தெரிவித்ததாவது இலங்கையின் தோல்விகள் வருத்தமளிக்கிறது. இந்தத்தொடர்களில் எனது செயற்பாடு முற்றிலும் திருப்தியாக இல்லை. புதிதாக அணிக்கு வந்துள்ள வீரர்கள் சிறப்பாக செயல்படுகின்றனர். அதிகப்படியான ஆட்டங்களில் விளையாடி தொடர் பயிற்சிகளைப் பெற்றுவர இன்னும் அவர்களின் திறமை வளர்க்கப்படும். எனவே புதிய வீரர்களால் இலங்கைக்கு எதிர்காலம் உண்டு. பாகிஸ்தானுடன் ஏற்பட்ட தோல்வியால் இலங்கை அதன் போராடும் தன்மையை இழந்துவிட்டது என்றில்லை. இலங்கை அணி இக்கட்டான நிலைமையில் உள்ளது என்றுமில்லை. ஆனால் பாகிஸ்தானுடன் அடைந்த தோல்விகளை ஏற்றுக்கொள்கிறேன். இதன் காரணமாக வரும் விமர்சனங்களை மகிழ்ச்சியுடன் ஏற்கிறேன். ஏனெனில் நான்தான் அணித்தலைவர் என்றார்.

இளம் வீரர்கள் தொடர்பாக மலிங்க திருப்தியை தெரிவித்ததையடுத்து "சொந்த மண்ணில் எந்த வீரர்களும் திறமையாகவே செயற்படுவார்கள். ஏனெனில் அது அவர்களுக்கான பழக்கப்பட்ட ஆடுகளம். இலங்கை அணிக்காக அறிமுகமாகிய வீரர்கள் அன்னிய மண்ணில் ஒரு ஆட்டத்தையேனும் விளையாடவில்லை. இவ்வாறிருக்க மலிங்க எந்த அடிப்படையில் அன்னிய மண்ணில் அவர்களால் சாதிக்க முடியும் என்று நம்பிக்கை தெரிவிக்கிறார்" என்று சமூக வலைத்தளங்களில் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். (ம)




## சங்கா சதம் சர்ரே வெற்றி

டெர்பைஷயர் அணிக்கு எதிரான ஒருநாள் ஆட்டத்தில் சங்காவின் விளாசல் கைகொடுக்க சர்ரே அணி 77 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

இங்கிலாந்தில் கழகங்களுக்கிடையில் நடைபெற்றுவரும் றொயல் லண்டன் கிண்ண தொடரில் நேற்று நடந்த ஆட்டத்தில் டெர்பைஷயர் – சர்ரே அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய சர்ரே டெவிசஸ், சங்கக்கார அதிரடியில் 6 இலக்குகளை இழந்து 326 ஓட்டங்களைக் குவித்தது. சங்கக்கார 109 ஓட்டங்களைக் குவித்தார்.

327 ஓட்டங்களைஇலக்காககொண்டு களமிறங்கிய டெர்பைஷயர் அணி 41.5 பந்துப்பரிமாற்றங்களில் 249 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் சர்ரே அணி 77 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. (ம)



## பாகிஸ்தானால் முடிகிறதென்றால் இந்தியாவாலும் நிச்சயம் முடியும்


இந்தியா – இலங்கை அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் மிகவும் போராட்டமானதாகவும் சவாலானதாகவும் இருக்கும் என்று இந்திய டெஸ்ட் அணித்தலைவர் கோக்லி தெரிவித்துள்ளார்.

இந்தியா – இலங்கை அணிகளுக்கிடையிலான 3ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் எதிர் வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தத்தொடரில் பங்கேற்கும் இந்திய வீரர்கள் நேற்று இலங்கை வந்தடைந்தனர். ஒரு தலைவராக குறித்த தொடரைப் பற்றி கருத்துத் தெரிவிக்கையிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் தொடர் தொடர்பாக கோக்லி மேலும் தெரிவித்ததாவது டெஸ்ட் ஆட்டங்களைப் பொறுத்தவரை இலங்கை ஒரு பலமான அணி. இதனால் இலங்கையை அதன் சொந்த மண்ணில் வைத்து எதிர்கொள்வதென்பது சற்றுக்கடினம். அனுபவ வீரர்கள் அந்த அணியில் இல்லாவிடினும் சொந்த மண் பலம் நிச்சயம் இலங்கைக்கு சாதகமாகவே இருக்கும். ஆனால் எனது வீரர்கள் சவாலைச் சமாளிக்கக் கூடியவர்கள். தவிர பாகிஸ்தானால் இலங்கையை வீழ்த்த முடிகிறதென்றால் நிச்சயம் எம்மால் முடியும் என்றார். (ம)



## ஷாருக்கானுக்கு அனுமதி




மும்பை வான்கடே மைதானத்துக்குள் நுழைய ஷாருக்கானுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டு அடுத்த ஐ.பி.எல். தொடரில் மைதானத்துக்குள் நுழைய அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

2012ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல். தொடரில் மும்பை – கொல்கத்தா அணிகள் மோதிய ஆட்டம் மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்றது. அதில் கொல்கத்தா அணி வெற்றி பெற்றது. அப்போது வெற்றிக்களிப்பில் மைதானத்துக்குள் நுழைய முயன்ற பாலிவுட் நடிகரும், கொல்கத்தா அணியின் உரிமையாளருமான ஷாருக்கானுக்கும் அங்கிருந்த பாதுகாவலருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. தகராறினைத் தொடர்ந்து ஷாருக் பாதுகாவலரை அடிப்பதற்குச் சென்றார். அதைத் தொடர்ந்து வான்கடே மைதானத்தில் ஷாருக்கான் நுழைய 5 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது.

தடை விதிக்கப்பட்டதற்கு மதிப்பளித்து கடந்த 3 ஆண்டுகளாக வான்கடே மைதானத்துக்கு ஷாருக்கான் வரவில்லை. அதனால் நன்நடத்தையை அடிப்படையாகக் கொண்டு அவர் மீதான தடையை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று மும்பை கிரிக்கெட் சங்கத்தைச் சேர்ந்த ஒரு சிலர் கோரிக்கை விடுத்தனர். அதை ஏற்று அவர் மீதான தடை நீக்கப்பட்டது. (ம)

## எதுக்கு வீண் வம்பு நீங்க அங்க போகாதிங்க





இங்கிலாந்தின் முன்னணி துடுப்பாட்டக்காரரான ரூட்டுக்கு மதுபான விடுதிகளில் கொண்டாட்டத்தில் ஈடுபட இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தடை விதித்துள்ளது.

இங்கிலாந்து வீரர்கள் ஒவ்வொரு ஆட்டத்திலும் வெற்றிபெற்ற பின்னர் அந்த வெற்றியை கொண்டாடும் வகையில் மதுபான விடுதிக்குச் சென்று மது அருந்துவது வழக்கம். இந்த நிலையில் ஆஷஸ் தொடரின் 3ஆவது ஆட்டத்தில் இங்கிலாந்து அணி பெற்ற வெற்றியை மதுபான விடுதிக்குச் சென்று கொண்டாட ரூட் திட்டமிட்டிருந்தார். ஆனால் அவருக்கு மட்டும் இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தடை விதித்து விட்டது.

இதற்கு 2013ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற மினி உலகக் கிண்ணத் தொடரின் போது நடந்த சம்பவம்தான் காரணம். அன்று அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றதை இங்கிலாந்து வீரர்கள் மதுபான விடுதிக்குச் சென்று கொண்டாடினர். ஆஸ்திரேலியா வீரர்களும் அந்த விடுதிக்கு வந்திருந்தனர். அப்போது மூக்குமுட்ட குடித்த நிலையில் வோர்னர், ரூட் இருவரும் தகராறில் ஈடுபட்டனர். இந்த தகராறு அடிதடியாக மாறியது. இதில் தோற்றுப்போன கோபத்தின் உச்சத்தில் இருந்த வோர்னர், ரூட்டின் மூக்கை உடைத்துவிட்டார்.

இது போன்ற சம்பவம் மீண்டும் நடைபெறாமல் இருக்கவே ஜோ ரூட்டுக்கு தடை விதிக்கப்பட்டிருப்பதாக இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது. (ம)



*தென்னாபிரிக்கா பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் இறுதி நாளான நேற்றையதினமும் அதிகரித்த மழை காரணமாக ஆட்டம் கைவிடப்பட்டது. இதனால் தொடர் சமநிலையில் முடிவடைந்துள்ளது. (ம)*



*ஐ.பி.எல். தொடரில் சென்னை மற்றும் ராஜஸ்தான் அணிகளின் உரிமையாளர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டதைத் தொடர்ந்து அந்த அணிகளுக்கு இரண்டு வருடகாலம் தடை விதிக்கப்பட்டது. இதனையடுத்து சென்னை அணியைத் தொடர்ந்து செயற்பட வைக்கும் விதமாக சென்னையின் ஆதரவாளர்கள் அணிதிரண்டு கையெழுத்திட்டு வருகின்றனர். குறித் செயற்திட்டத்தின் மூன்றாம் நாளான நேற்று பல ரசிகர்கள் சென்னையின் சேப்பாக்கம் மைதானத்துக்கு அணி திரண்டு சென்னைக்கு ஆதரவைத் தெரிவித்ததன் ஒரு பதிவு.. (ம)*

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# நடாலின் ஆட்டம் ஆரம்பம்

ஜெர்மனியில் நடைபெற்று வரும் ஹம்பேர்க் ரென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் முன்னணி வீரர் ரபெல் நடால் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளார். இதன் மூலம் அவர் நீண்ட இடைவேளையின் பின்னர் மீண்டும் தான் போர்முக்குத் திரும்பியதை உறுதிப்படுத்தினார்.

இத்தாலியைச் சேர்ந்த பேபியோ போக்னினியும் ஸ்பெயினின் நடாலும் இறுதியில் பலப்பரீட்சை செய்தனர். நடால் நேர்செற்களில் கிண்ணத்தைக் கைப்பற்றினாலும் 7–5 என்ற கடும் போராட்டத்திற்குப் பின்னரே அவரால் இது சாத்தியமானது.


இந்த மாத இறுதியில் அமெரிக்க ரென்னிஸ் தொடர் நடைபெறவுள்ள நிலையில் நடால் போர்முக்குத் திரும்பியமை ரென்னிஸ் உலகத்தில் தலைப்புச் செய்தியாக மாறியுள்ளது. (ம)

## பணிநிலை வேண்டுகை

பிரபல இணையத்தளம் ஒன்றிற்கு பின்வரும் பணிநிலை வெற்றிடங்களிற்கு ஆள்கள் கோரப்படுகின்றனர்.

- செய்தி சேகரிப்பாளர்
- செய்தி பதிவேற்றுநர்
- வானொலி அறிவிப்பாளர்
- விளம்பர சேகரிப்பாளர்

தொடர்பு:- 077 271 9226



# விக்டோரியன் ஸ்குவாஷ் தொடர் சம்பியனாகினார் ஜோஸ்னா

விக்டோரியன் ஸ்குவாஷ் தொடர் ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் நடந்து வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்திய வீராங்கனை ஜோஸ்னா சின்னப்பா கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளார்.

சர்வதேச ஸ்குவாஷ் தரப்படுத்தலில் மூன்றாவது இடத்தில் இருக்கும் இந்திய வீராங்கனை ஜோஸ்னா, தரப்படுத்தலில் இரண்டாவது இடத்திலுள்ள டென்மார்க்கின் லினே ஹன்செனை எதிர்கொண்டார். இதில் 11–5, 11–4, 11–9 என்று நேர்செற் கணக்கில் வென்று சம்பியனாகினார் ஜோஸ்னா. (ம)

## English for Kids

Since 1997 சிறுவர்க்கான ஆங்கிலம் 40 % Discount T&C Applied

KU's methodology



5 years-16 Years

வடமாகாணத்தின் முதல் தர நவீன ஆங்கிலக் கல்லூரியில், உங்கள் செல்வங்கள் நற்பழக்க வழக்கங்களுடன், விளையாட்டாகவும் மன மகிழ்வாகவும் ஆங்கிலத்தை சிறு வயதிலேயே கற்று ஆங்கிலத் தொடர்பாடல் திறனிலும் ஆளுமையிலும் சிறப்பதை காண விரும்பினால் இப்போதே அழையுங்கள்

-0767302882 / 021-3208342 http://edu.kugroup.info/ke

Knowledge Universe®
No 626 1/1, K.K.S Rd, Jaffna
இது மனனமாக்கும் பள்ளியல்ல மனிதனாக்கும் பள்ளி

யாழ். நகரில் பிரபல்யமான
## கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி
## Mobile Phone Repairing Course

மாதம் 50,000 முதல் 100,000 இற்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு

August 08ஆம் திகதி காலை 9.00 மணிமுதல் 08,09,10,11ஆகிய நான்கு தினங்களில்

- ஆரம்பம் முதல் சரளமாக கற்பிக்கப்படும்.
- சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
- தனிப்பட்ட கவனிப்பு.
- 1000 இற்கு மேற்பட்ட கையடக்கத் தொலைபேசி திருத்தும் இரகசியங்கள்.
- சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.

இலவசமாக:
- இரகசியங்கள் அடங்கிய (CD) வழங்கப்படும்.
- கையேடு

Special Trainer
Ganesh Sir

பாடநெறிக் கட்டணம் 8500/- | பதிவுக் கட்டணம் 2000/-

வயதெல்லை இல்லை. ஆரம்ப அறிவு. ஆங்கிலம் தேவையற்றது

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் என்பதால் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

BTEC # 21, Sirimbiyadi Land, (off Stanley Road), Jaffna. 077 613 1358 0777 444 225

தமிழினத்தின் விடிவெள்ளியே வருக! நின் தலைமையின் கீழ் திரண்டு நிற்கிறோம்!

மக்களின் நாளாந்த சேவையாளர்கள்



உதயன்

30 வருடங்களாக ஓயாத, விலைபோகாத ஒரே குரல்

எந்தக் காலத்திலும் எந்த அரசியல் சூழலிலும் எத்தனை கோடிகளை அள்ளி எறிந்தபோதும் விலைபோகாத தனித் தலைவன். கொடுமைகள் கண்டு பொங்கி எழுந்தவன். விடுதலையை மட்டுமே மூச்சாகக் கொண்டவன். பேனா எனும் ஆயுதத்தால் மூன்று தசாப்தங்கள் அறப் போர் நடத்தியவன்.

ஈஸ்வரபாதம் சரவணபவன்

5 X

தமிழ் அரசுக் கட்சி